
வாரவெளியீடு

# ஆதவன்

Registered as a Newspaper in Sri Lanka

ராவய வெளியீடு

ATHAVAN



நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடீ—கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடீ.

சொந்தச் சகோதரர்கள்
துன்பத்தில் சாதல்கண்டும்
சிந்தை இரங்காரடீ—கிளியே
செம்மை மறந்தாரடீ.

## புத்தாயிரம் ஆண்டு ஜோக்கர்கள்...






## புளுவரித்தபடி......

நாட்கள் நகர்கின்றன
தேசம் பற்றிய
கனவுகள் நிர்மலமாகி
புளுவரித்தபடி
முகாமுக்குள் அடங்கி
தீய்ந்து நாறும்
வாழ்க்கை கழிகிறது.
விம்மியவாறு
ஒரு தசாப்தத்தின் நாட்கள்
கற்றுத்தந்துள்ளன.
அகதி முகாமின் வடிவு பற்றியும்
நீளமான வாழ்வின்
அவஸ்தை பற்றியும்
நிறையவே!
நாட்கள் நகர்கின்றன.
கனவுகள் நிர்மலமாகி
புளுவரித்தபடி.......

*ஜே.எம்.ஜெஸார்,*
*ஹெட்டிபொல.*

## சொல்லியழ யாருமில்லை!

சுத்தமான நெஞ்சுக்குள்
நிறைந்து விட்ட சோகங்கள்
கறைபடிந்த நிஜங்களோடு
அவஸ்தையுற்று வீழ்கிறேன்
சொல்லியழ யாருமில்லை
சூழ்ந்து நிற்கும் சுமைகளை!
மீன்பிடிக்கப் போனவரும்
மீண்டிங்கு வரவில்லை
வடகடலில் போர் முழக்கமாம்
நடக்கிறேன் நானும் கணவரைத் தேடி
இடைவழியிற் செல்கையிலே
கிடைக்கிறதே செய்தியொன்று
அவர்மரித்துப் பலநாளாம் இனி
அழுதாலும் அவர் வரப் போவதில்லை.
பட்டினி கிடந்தே பழகிப் போச்சு
கட்டிய புருஷனும் உயிரோடு இல்லை
புட்டிப் பால் வாங்கிப் பிள்ளையைக்
காத்திட வழியென்ன கூறுங்கள்!
யாராவது இங்கே வாருங்கள்
ஆறுதல் சொல்லித் தேற்றுங்கள்
இல்லையெனில் ஈழத்து வாழவு
தேவையில்லை
மயானத்தில் என்னைச் சேர்த்திடுங்கள்.

*நியாஸ் முஸாதிக்,*
*கிண்ணியா 05.*

## நிலவே

நிலவே நான் படும்பாடு
நீயும் அறிவாய் நீ எப்படி
தேய்பிறையாய் தேய்கின்றாய்
என்பதை நான் அறிவேன்
என் வேதனையும் நீயும் அறிவாய்
நிலவே நீ தேய்ந்தாலும்
மீண்டும் பௌர்ணமி
நாள் அன்று
முழு நிலவாய் தோன்றிடுவாய்
ஆனால்
நான் தினம் தோறும் தேய்ந்த
வண்ணம்தான் இருக்கின்றேன்
நிலவே
நான் மீழ் எழுவதும்
தினம் தேய்வதும் நீ கூறும்
தூதிலேயே அடங்கியுள்ள.

*சனூன் முகம்மது ராபி*
*புத்தளம்.*

## முடிவற்ற வாழ்வை நோக்கிய யாத்திரிகன்.

உனக்கு தேசம் இல்லை
வீடு இல்லை
இதற்குப் பிறகும்
உனக்கு விளங்கவில்லையா?
வீடு இல்லை
விரும்புவதற்கு ஒருத்தி இல்லை.
ஓ! சுடலைக் காவலாளியே!

துன்பம், சாஸ்திரம்,
விழித்திருத்தல், சஞ்சலமடைதல்,
பிணம், தாய விளையாட்டு,
நாளையின் மறுதினத்திற்காக
இவைகளைத்தான் நீ
நேற்றுச் சம்பாதித்தாய்.
இதற்குப் பிறகும் உனக்கு
விளங்கவில்லையா?
உனக்குத் தேசம் இல்லை, வீடு
இல்லை.
காதலின் சுற்று யாத்திரையும்
பூர்வீக சங்காரமும் நீளுகின்றது
எனவே உனது சூட்கேஸின் மீது
அழுது கொட்டு,
அதனுடன் சேர்ந்து அழு...

**பிரஞ்சு மூலம் - சமிஹ் எல் காசிம்**
**தமிழில் - க. கலாமோகன்**
**நன்றி - சக்தி**

## போதிமரமும் வெள்ளொளியும்

முழுப் பௌர்ணமி தினமின்று
புத்த பகவானே எழுந்திருளியது
போல்
அண்மிய இருவிகாரைகளும்
பூச்சூடப்படுகின்றன மணி
யொலிகளால்

என் அறை
சாரளத்தினூடாய்
காலைச் சூரியனில் பனியுருகி
வெள்ளியாய் அசைந்தாடும்
போதிமர இலைகளின்று
வெள்ளொளியுடன் புணர்ந்து
மாயத் தோற்றம்.

போதி மரக்
கிளைகளிலிருந்து பிறந்தாய்
நிலா
ஏதோவொன்றை
சொல்லிக்கொண்டு
நடுவான் நோக்கி
நகர்கின்றது.


உயிர்களிடையே
அன்பும் பரிவும்
மனிதம்களிடையே
தூய ஆத்மாவும் தேடி
புத்தர் அமர்ந்த
போதி மரமா இன்றைய
இரத்தக் களரியின் உறைவிடம்.

போதி மரமும்
தூய வெள்ளொளியும்
சங்கமிக்க மையல் கொள்கின்றன.
ஆனால்
ஒரு சிலர்
அதைத் தடுத்தவாறு
புத்தரை போதனையை மறந்து
அவரையே நிஷ்டை செய்கின்றனர்

எதையோ செய்து கொண்டு
எதையோ வேண்டியவாறு

*பர்ஸான் முஹம்மத்,*
*அட்டாளைச் சேனை - 11*

## உரத்த சிந்தனை



ஜனநாயகம் என்பது மக்கள் தமக்குள்ள சகல உரிமைகளுடன் சுதந்திரமாகச் செயற்படுவதைக் குறிக்கிறதேயன்றி, மக்கள் சார்பில் செயற்படுகின்றோம் என்று சொல்லிக் கொண்டு மக்களின் உரிமைகளையெல்லாம் ஆயுதத்தினால் குத்தகைக்கு எடுத்துக் கொண்ட சிலரின் தேவைகளுக்காக நடைமுறைப்படுத்தப் படுவதொன்றல்ல. ஜனநாயகம் செயற்பட வேண்டுமென்றால் மக்கள் தமது உரிமைகளை உணர்ந்து அரசியலில் வெறும் பார்வையாளர்களாக மட்டும் இராமல் பங்காளிகளாக வேண்டியது அவசியமாகும். மக்கள் சுதந்திரமாக தமது சுயவிருப்பத்தின் பேரில் அமைக்கும் அணிகளின் மூலம், தமது கருத்துக்களைத் தெரிவிக்கவும், பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யவும் உரிமைகள் கிடைக்கும் பொழுதுதான் ஜனநாயகம் செயற்பட ஆரம்பிக்கின்றது. இன்றுள்ள நிலையில் சமுதாயத்தில் இந்த உரிமைகள் சகலருக்கும் முழுமையாகக் கிடைக்கும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது, ஆனால் நிலப்பிரபுத்துவ தனி அரசர் ஆட்சியிலிருந்து ஒரு குறைந்தபட்ச ஜனநாயகத்திற்கு முதலாளித்துவம் வழிவகுத்தது. பூரணமான ஜனநாயகத்தை மக்கள் முழுமையான ஒரு சமதர்ம ஆட்சியிலேயே காணமுடியும் என்பதிலும் எமக்கு நம்பிக்கையுண்டு. ஆனால்................

எமது தேசத்தில், நிலப்பிரபுத்துவத்தின் எச்சசொச்சங்களிலிருந்து இன்னமும் மீளமுடியாமல் இருக்கின்ற தமிழ் மக்கள் இன்று பேசவோ, எழுதவோ முடியாத நிலையில்,தமது விருப்பு வெறுப்புகளைப் பற்றி பகிரங்கமாக மூச்சுவிடவும் அஞ்சி, ராணுவப்பீரங்கிகளுக்கும் அராஜகவாதிகளின் துவக்குகளுக்குமிடையில் மௌனிகளாக இருக்கின்றனர். ஈழத்தமிழ் மக்கள் என்ன நினைக்கிறார்கள், என்ன செய்யப்போகிறார்கள் என்பதை திட்டவட்டமாகக் கூறமுடியாத நிலைமைகள் தான் இன்று இருக்கின்றது. இவர்களுக்காக லண்டனிலும் நியுயோர்க்கிலும் யார் யாரோ எல்லாம் தீர்மானம் எடுக்கிறார்கள்.

கடந்த கால அரசியல் தலைமைகள் எப்படித் தமிழ் மக்களைக் தமது தேவைகளுக்குப் பயன்படுத்தினார்களோ அதேபாணியிலேயே இன்றைய அரசியல் குழுக்களும் செயற்படுகின்றன. தமது கறுப்புக்கோட்டுக்களையும் மத்தியதரவர்க்கத்தினரின் உத்தியோகங்களையும் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு பள்ளிப்பிள்ளைகளைப் பள்ளிக்குச் செல்லவிடாமல் (ஆசிரியர்கள் உள்ளே கையெழுத்து வைத்துவிட்டு சும்மா இருக்க) பகிஷ்கரிப்புப் போராட்டங்கள் பழைய தலைமைகளினால் நடத்தப்பட்டன. பின்பு ஏற்பட்ட கடையடைப்புப் போராட்டம் தொழிலாளரை வேலை நிறுத்தத்திற்கு அழைக்கும் அரசியலைக் கொண்டிராத குட்டி முதலாளித்துவத் தலைமைகள் கடைகளைப்பூட்டும்படி முதலாளிகளுக்கு வேண்டுகோள்விடுத்தன. கல்லெறிக்கும் பின் கைக்குண்டுகளுக்கும் பயந்து, "முதலாளி"கள் கடைகளைப் பூட்டினர். இவை இன்னமும் தொடருகின்றன. எவர் சொன்னாலும், எதற்காகச் சொன்னாலும் தமது சொத்துக்களையும் ஏன் உயிரையும் கூடப் பாதுகாத்துக் கொள்வதற்காக கடைகளைப் பூட்டுகின்றனர். திறக்கச் சொன்னால் திறக்கின்றனர். உத்தியோகத்துக்குச் செல்லச் சொன்னால் செல்லுகின்றனர். வீட்டிலிருக்கச் சொன்னால் ஏன் வீண் வம்பு என்று வீட்டிலிருக்கின்றனர். இவை எல்லாம் மக்கள் போராட்டங்கள் என சிலர் வர்ணிக்கவும் துணிகின்றார்கள். ஒரு நல்ல மந்தை மேய்ப்பாளனோ அல்லது ஒரு "சர்க்கஸ்"காரனோ தன் மிருகங்களை வைத்து போராட்டங்களை நன்றாகச் செய்து காட்டமுடியும். அவர்களுடைய கையில் இருப்பது தடி அல்லது சவுக்கு, இவர்கள் கையில் இருப்பது துவக்கு. இதுதான் வித்தியாசம், மக்களின் சுய விருப்புகளை அறியாது, அவர்களைச் சுதந்திரமாகத் தீர்மானங்கள் எடுக்க விடாது நடத்தப்படும் போராட்டங்கள் ஒரு போதும் மக்கள் போராட்டங்களாக மாட்டாது.

மகப்பேறு ஏற்படுவதற்கு மாதாவின் பங்கு என்ன? மருத்துவிச்சியின் பங்கு என்ன? என்பதை அறியாத வைத்தியர்களிடம் சத்திரசிகிச்சைக்கான ஆயுதங்களைக் கொடுத்துவிட்ட எமது மக்கள், அதன் பலன்களை இன்று அனுபவிக்கின்றார்கள்.

மக்களின் எழுச்சிகளுக்கு முன்னோடிகளாக இருக்கும் மாணவர்களுடைய குரல் வளைகள் இன்று நெரிக்கப்பட்டுள்ளன. மாற்றுக் கருத்துடையவர்கள் மரணத்தைச் சந்திக்க வேண்டியது சாதாரணமாகிவிட்டது. மாணவன் விஜிதரனின் கடத்தலில் இருந்து விமலேஸ்வரன் கொலை வரைஅரசியல் பேசியதற்காக கொலை செய்யப்பட்ட விஜயானந்தனில் இருந்து விஜயநாதன் வரை, சமூகசேவையாளர்கள் கதிரமலையிலிருந்து கடத்தப்பட்ட கந்தசாமி வரை.... இந்த மரணப்பட்டியல் நீண்டு கொண்டுதான் போகின்றது. இவர்களின் சமாதிகளை "ஜனநாயகம் தேடிக்கொண்டிருக்கின்றது. அங்கு சென்று பூசை செய்வதற்காக அல்ல. தமிழ் மக்களின் நிலைமையை எண்ணி வாய் விட்டு அழுவதற்காகத்தான்.

நன்மையும் தீமையும் நமக்குப் பிறர் தரமுடியாது. நாமே நமக்கு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சிறிலங்கா அரசபயங்கர வாதத்திற்கும் ஆயுதகலாச்சாரத்திற்கும் நாம் முற்றுப் புள்ளி வைக்க வேண்டுமானால் நமது வீட்டை நாமே கண்காணிக்கும் பொறுப்புக்களை நாம் சுவீகரிக்க வேண்டியது அவசியமாகும். அதற்கான நடவடிக்கைகளில் மக்கள் சுதந்திரமாக இன்றுள்ள யதார்த்த நிலைமைகளுக்கமைய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியது அவசியமாகும். தமிழீழ மக்கள் மத்தியில் பல்வேறுபட்ட அரசியல் கருத்துக்களும் இயக்கங்களும் இருப்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும். அவர்கள் மக்கள் மத்தியில் சுதந்திரமாகவும் ஜனநாயகரீதியாகவும் இயங்கக் கூடிய நிலைமைகளை உருவாக்க வேண்டும். அரசியல் கருத்துக்கள் மாற்று இயக்கத்தினர் மீது திணிக்க வேண்டுமென்பது அவசியமற்றது. அரசியல் கருத்துக்கள் மக்கள் அங்கீகாரத்திற்கு முன் வைக்கப்பட வேண்டியதே அவ்சியமாகும்.

தமிழ் கட்சிகள் ஜனநாயக ரீதியாக தமது அரசியற் கருத்துக்களை முன் வைப்பதற்கு கிடைத்திருக்கும் ஒரு சந்தர்ப்பமே இப் பொதுத் தேர்தலாகும் தமிழ் கட்சிகள் மக்களிடம் தமக்கு இருக்கும் ஆதரவை எடுத்துக்காட்டவும், மக்கள் தமது ஜனநாயக உரிமைகளைப் பாவிப்பதற்கும் இந்தச் சந்தர்ப்பத்தை பாவிக்க வேண்டியது அவசியமாகும். மக்கள் ஜனநாயக ரீதியாகக் கொடுக்கும் அதிகாரங்களே நிரந்தரமானவைகளாக இருக்க முடியும். ஜனாதிபதியுடனோ, ஐ.தே.கவுடனோ, பேரம் பேசுவதினால் கிடைக்கும் அதிகாரங்கள் நிரந்தரமாக இருக்க முடியாது. ஜனநாயக நடவடிக்கைகளை ஆயுதங்களினால் சீர்குலைப்பதானது, மக்களை மேலும் மந்தைகளாக வைத்து ஒடுக்குவதற்கே வழிவகுக்கும். தமிழ் பேசும் மக்களின் உண்மையான குரல் பாராளுமன்றத்தில் ஒலிக்குமானால் மக்கள் ஜனநாயக ரீதியாக தமது தலைமைகளைத் தேர்ந்தெடுப்பதில் ஒத்துழைப்பார்கள். மக்களை நிரந்தரமாக குழப்ப நிலைமைகளில் வைத்து அவர்களின் எலும்புகளின் மேல் கொலுவிருக்க விரும்பும் சக்திகளே ஜனநாயகத்தின் பாதையிலே கண்ணிவெடிகளைப் புதைக்க முயற்சிக்கும். ஆயுத கலாச்சாரமும் அரச பயங்கரவாதமும் வேண்டாம் என்று வாக்குரிமைப் பலத்தினால். எடுத்துக்காட்டுங்கள் தமிழ் மக்களே ஓரணியில் சேர்ந்து பிரிந்து நிற்கும் தமிழ் கட்சிகளுக்குப் பாடம் புகட்டுங்கள் எனவே தேர்தலில் முன் நிற்கும் தமிழ் கட்சிகளே இது வரை பாராளுமன்றத்தில் உங்களால் எதுவும் செய்ய முடியவில்லை, நீங்கள் முன்வைத்த கோரிக்கைகளுக்கும் இதுவரை ஆட்சி செய்த அரசுகள் செவிமடுக்கவில்லை. பாராளுமன்றத்தில் நம்பிக்கை இழந்து நிற்கும் தமிழ் மக்கள் விரும்பினால் தாங்கள் விரும்பும் கட்சிகளுக்கு சுதந்திரமாகச் சென்று வாக்களிக்க இடமளியுங்கள்.

*நன்றி - சிந்தனை*
*சுப்பிரமணி*

## வாசகர் குரல்

ஆசிரியர் அவர்களுக்கு,

ஆதவன் பத்திரிகையை தொடர்ந்து வாசித்து வருகின்றேன். இலங்கையில் தமிழ் மொழியில் வெளியாகின்ற முன்னனிப் பத்திரிகைகளில் ஒன்றாக ஆதவனும் இடம்பிடித்துள்ளது.

புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தையும் புதிய தேர்தல் முறையின் நோக்கத்தையும் முதன் முதலில் வேறுபடுத்திக் காட்டியது ஆதவனே. அதுமட்டுமல்ல புதிய அரசயலமைப்பை நிறைவேற்றிக் கொள்வதற்கு எடுக்கும் முயற்சி வெறும் கண்துடைப்பு என்றும், அரசின் நோக்கம் புதிய தேர்தல் முறையின் கீழ் மீண்டும் அரச இயந்திரத்தை கைப்பற்றுவதே" என்ற கருத்தை ஆணித்தரமாக முன்வைத்தமை பாராட்டுக்குரியது.

மேலும் ஆதவன் தாங்கிவரும் கட்டுரைகள் ஆழமானவை விக்டர் ஐவனின் கட்டுரைகள் சுகந்த தேசப்பிரிய அவர்களின் கட்டுரைகள், கலாநிதி விக்ரமபாகு கருணாரத்தினாவின் பார்வையில் அரசியல் என்பன மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடியவை.

எனவே ஒவ்வொரு ஆதவன் இதழிலும் மூவரின் கட்டுரைகள் குறிப்பாக இடம்பெற வேண்டும் என்பது எனது அவா! ஆதவன் தொடர்ந்து தமிழ்பேசும் மக்களின் தேவைகளையும் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் இணங்கண்டு வெளிச்சத்துக்கு கொண்டு வரும் என்பது எனது அசையாத நம்பிக்கை)

*எம்.ஏ ஹசன்,*
*கிண்ணியா.*

அன்புடையீர்,

அண்மைக் காலமாக ஆதவன் பத்திரிகையை தொடர்ந்து ஆழமாக வாசித்து வருகின்றேன். இதில் இரண்டு விடயங்களை தெரிவிக்க விரும்புகின்றேன். ஒன்று தற்போதுள்ள குறிப்பாக இன்றைய சூழ்நிலையில் உங்கள் பத்திரிகை பல உண்மையான சம்பவங்களைக் கூறுகின்றன. அத்துடன் வாசகர்களின் உடனடிக் கவனத்தையும் ஈர்க்கின்றது. இது அவசியமானதும் கூடு. ஆனால் சில விடயங்களை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

ஆதவனின் முன்பக்கமும் கேலிச்சித்திரமும், பயோடேட்டாவும் மிக அருமை. சிறுகதைச் சித்திரங்கள் மேலும் தெளிவாக்கப்பட வேண்டும். கவித் தடாகத்தின் நடையை மாற்றுங்கள், செய்திகளுக்கு மேலும் வலுவூட்டுங்கள். அடுத்து செந்தணலோனின் சில கட்டுரைகளில் என்ன சொல்ல வருகின்றார் என்றே தெரியவில்லை. தொடர்ந்து கூர்ந் துவாசித்தால் இதன் தன்மை புரியும். பெரும்பாலான அவரது கட்டுரைகள் ஒரேவிதமாகவே இருக்கின்றன. இன்னும் தெளிவாகவும் ஆழமாகவும் எழுதப்பட வேண்டும். விக்டர் ஐவன் சுனந்த தேசப்பிரியவின் கட்டுரைள் அருமை பல உண்மையான விடயங்களை வெளிக்கொணர்கின்றது. களநிலைவரம் மேலும் இறுக்கமாக எழுதவும் சத்திரியனின் கட்டுரைகள் சிறப்பாக இருக்கின்றது. சர்வதேசியம் அருமை.

தமிழ் தேசிய அரசியல் தொடர் கட்டுரை தமிழ் தேசியத்தின் வரலாற்றை கூறினாலும் தொடர்ச்சியில் ஒரு சீரான போக்கினை காண முடியவில்லை ஆனால் நல்ல முயற்சி பக்க சார்பில்லாமல் தமிழ் தேசிய எழுச்சியின் இன்றைய நிலைக்கு காரணம் என்ன என்பதையும் காண விரும்புகின்றோம். சர்வதேசியத்தில் புதிய விடயங்கள் தரப்படுகின்றன; யாழ்ப்பாண நிலைமைகளை நிவேதா கண்முன் கொண்டு வருகின்றார். இலக்கிய பக்கங்களை மேலும் வலுவாக்கி தரமாக்குங்கள்.

பக்க வடிவமைப்பில் கவனமெடுக்கவும். தெளிவான வாசகர் வட்டத்தை உருவாக்க விளையுங்கள், எதிர்காலத்தில் நல்லதோர் பத்திரிகைக்கான சமிஞ்ஞைகள் தென்படுகின்றன.

*வரதன்,*
*கிழக்கு பல்கலைக்கழகம்.*

# 1990களில் மாறா வடுவாகிப்போன கிழக்குப் படுகொலைகள்

-மட்டக்களப்பிலிருந்து கதிர்-

மட்டக்களப்புக்கு வடக்கே வந்தாறு மூலையில் அமைந்துள்ளது, கிழக்குப் பல்கலைக் கழகம். மாணவர்களுக்கும் சமூகத்துக்கும் வழி காட்டியாகத் திகழ்ந்து அறிவு ஒளி பரப்புவதோடு நின்று விடாது இப்பல் கலைக்கழகம் மனிதாபிமான ரீதியிலும் செயற்பட்டு வருகின்றமைக்குச் சான்றாக அமைந்ததே 1990 இல் இங்கு அமைக்கப் பட்டிருந்த அகதிமுகாம்.

தனது சக்திக்கு மீறிய வகையில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகளை தன்னகத்தே வைத்து பல மாதங்கள் இந்த அகதி முகாமை பேணிப் பாதுகாத்தது. இது ஒரு வரலாற்றுச் சாதனையாகிவிட்ட அதேவேளை இங்கே அகதிகளாக இருந்த 192 தமிழர்கள் இராணுவத்தினரால் கைதாகிக் காணாமல் போனமை வரலாற்றில் வடுவாகிப் போன விடயம். தமது பிள்ளைகள், கணவன், சிநேகிதனை இழந்த எத்தனையோ பேர் இன்றும் கண்ணீரும் கம்பலையுமாக அவர்களுக்கு நேர்ந்த கதியறியாது கலங்கிய வண்ணம் உள்ளனர். பத்து ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் அவர்தம் நினைவில் இருந்து விடுபட முடியாதவர்களாகவே அவர்கள் உள்ளனர்.

1990ம் ஆண்டு ஜுன் 10ல் இரண்டாம் ஈழப்போர் ஆரம்பமானதைத் தொடர்ந்து, ஆகஸ்ட் மாதத்தில் காத்தான் குடியிலும், ஏறாவூரிலும் அப்பாவி முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளால் சுட்டும் வெட்டியும் கொல்லப் பட்டனர். நூற்றுக் கணக்கில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டமைக்குப் பதிலடியாக முஸ்லிம் ஊர்காவல் படையினர் பல்வேறு பழிவாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபட் டனர். படையினரின் ஆசீர்வாதத்துடன் நடைபெற்ற இந்த பழிவாங்கல்களின் உச்சக்கட் டமாக நிகழ்ந்ததே கிழக்குப்பல்கலைக்கழக நிகழ்வும், சத்துருக் கொண்டானில் நடைபெற்ற கொலைகளும் ஆகும்.

செப்டெம்பர் ஐந்தாம் திகதி செங்கலடி இராணுவ முகாமிலிருந்து சென்ற இராணுவத் தினர் அகதி முகாமைச் சுற்றிவளைத்து ஆண்களை மாத்திரம் வேறாக்கினர். 15 முதல் 25 வயது வரையானோர் தனியான வரிசையிலும், 26 முதல் 40 வயது வரையானோர் மற்றொரு வரிசையிலும் ஏனையோர் வேறாகவும் வருமாறு பணிக்கப் பட்டனர். இராணுவ சீருடையில் முகமூடி அணிந்திருந்த ஐந்து தலையாட்டிகளும், 7 முஸ்லிம் இளைஞர்களும் வரிசையாக வந்தோருக்கு தலையை ஆட்ட, 158 பேர் வேறாக்கப்பட்டு பஸ்களில் ஏற்றப்பட்டு வாழைச்சேனைப் பக்கமாக அழைத்துச் செல்லப்பட்டனர். அதுதான் அவர்களை அவர்களது உறவினர்கள் இறுதியாகக் கண்ட நாளாக அமைந்தது. இந்நடவடிக்கைகளில் இராணுவ உயரதிகாரியான கப்டன் முனாஸ் என்பவரும், புளொட் மோகன் என்பவரும் சம்பந்தப் பட்டிருந்ததாக பின்நாளில் இச் சம்பவம் தொடர்பாக மனித உரிமைக் குழுக்கள் தெரிவித்திருந்தன.

கைதானவர்கள் வாழைச்சேனைக்கு அப்பால் நாவலடி என்னுமிடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டதாக, தகவல்கள் பின்நாளில் வெளி வந்த போதிலும் அது ஊர்ஜிதப்படுத்தப் படவில்லை. இந்தக் கைது தொடர்பாக அப்போதைய பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன விஜயரத்ன கருத்துத் தெரிவிக்கையில், 32பேர் மாத்திரமே இங்கு கைது செய்யப்பட் டதாகவும், அவர்களும் 24 மணி நேரத்தில் விடுதலை செய்யப் பட்டதாகவும் தெரிவித்தார்.

எனினும் இச்சம்பவத்தை விசாரித்த, வடக்கு கிழக்கு மாகாணத்தில் காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு இராணுவ உயரதிகாரிகள் ஐவரே இச்சம்வத்துக்குப் பொறுப்பெனவும், அவர்களை விசாரணை செய்ய வேண்டும் எனவும் பரிந்துரை செய்தது.

ஆனால், இன்றுவரை எதுவுமே நடக்கவில்லை. கொல்லப்பட்டவர்களின் சிதைவுகூட கிட்டவில்லை. ஐ.தே.க. கால வன்முறைகளைக் கிண்டிக்கிளறும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசு, கூட, பல்கலைக்கழக அகதி முகாம் கைதுகள் தொடர்பாக அக்கறை காட்டாத நிலையே உள்ளது.

இந்த நிலையில், செப்டெம்பர் 5ம் திகதி படையினரால் கைதாகி காணாமல் போன அப்பாவி பொதுமக்களின் நினைவாக மக்கள் விழிப்புக் கழகம் எனும் அமைப்பு மட்டக்களப்பில் ஹர்த்தால் ஒன்று நடாத்தியுள்ளது.

ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மாணவர்கள் வெளியிட்ட பிரசுர மென்றில் இச்சம்பவம் நடைபெற்று 10 ஆண்டுகளாகியும் விசாரணை செய்யப்படாமல் உள்ளதை கண்டித்துள்ளனர்.

அத்துடன்

**அப்பாவிப் பொதுமக்கள் நாளாந்தம் காணாமல் போய்க் கொண்டிருப்பதைத் தடுத்து நிறுத்து.**

**தமிழ் பேசும் மக்களும் இலங்கை வாழ் மக்கள் தான் என்பதை மறக்காதே.**

- **மனிதாபிமான அடிப்படையில் உதவும் நிறுவனங்களை சுதந்திரமாக இயங்க வழிவிடு.**
- **அப்பாவி மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வதை உடன் நிறுத்து.**
- **அடிப்படை மனித உரிமைகளை மீறாதே**

**ஆகிய கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளனர்.**

கிழக்குப் பல்கலைக்கழக சம்பவம் நடைபெற்று ஆண்டு 10 ஆகிவிட்ட போதிலும் விசாரணை நடைபெற்று இதன் காரண கர்த்தாக்கள் இனங்காணப்பட்டு தண்டிக்கப் படமாட்டார்கள் என்பது மட்டும் மறுதலிக்க முடியாத உண்மை.

### நடைபெறும்

## இராணுவ நடவடிக்கை, காரணமாக யாழ் தேர்தல் நடவடிக்கைகள் ஸ்தம்பிதம்

- போட்டியிடும் கட்சிகள் தேர்தல் கூட்டங்களை நடத்த முடியாத நிலை.
- தென்மராட்சியில் தொடரும் விமான குண்டு வீச்சால் பெருமளவிலான மக்கள் இடம்பெயர்வு.
- குறிதவறும் மல்ரி பெரல் தாக்குதலினால் கட்டிடங்கள் அழிப்பு

யாழ்ப்பாண குடா நாட்டிற்குள் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத் திற்கும் இடையில் தொடரும் யுத்தம் காரணமாக யாழ்ப்பாண நகரத்தில் பதட்ட நிலை தொடர்கின்றது. யாழ்ப்பாணம் கொழும்புத்துறை, சாவகச்சேரி, சரசாலை, மட்டுவில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே கடும் சமர் நடைபெறுகின்றது. இவ்வாறான நிலையில் யாழ்ப்பாண குடா நாட்டிற்குள் பொதுத் தேர்தலை நடாத்துவது சிக்கலாக உள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தினை அண்டிய பகுதிகளிலும், முக்கிய கேந்திர பிரதேசங்களிலும் கடும் சமர் நடைபெறுவதால் அரச ஊழியர்கள் தமது தேர்தல் பணிகளை செய்ய முடியாத நிலையில் உள்ளனர். தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் தமது தேர்தல் பிரச்சாரங்களைக் கூட நடத்த முடியாத நிலையில் உள்ளன.

ஈபிடிபி இயக்கம், வடக்கு கிழக்கு மாகாணசபை முன்னை நாள் முதல்வர் வரதராஜ பெருமாளின் சுயேட்சைக்குழு, புளொட் இயக்கம் ஆகியவை ஆயுதம் தரித்து நிற்பதால் விடுதலைப் புலிகளினால் இவர்களுக்கு பெரும் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு இருக்கின்றது.


தமிழர் விடுதலைக் கூட்டணி, டெலோ ஆகிய கட்சிகளுக்கு விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தல் இல்லாத காரணத்தினால் ஏனைய ஆயுதக் குழுக்களால் தங்களின் தேர்தல் பணிகள் தடைப்பட்டுள்ளன என இக்கட்சியின் பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழ் கட்சிகள் யாழ்ப்பாணத்தில் பாரிய தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டங்களை நடாத்த திட்டமிட்டிருந்தாலும், இன்றைய நிலையில் அது சாத்தியமாக இல்லாமல் இருப்பதினால் சிறு சிறு கூட்டங்களை நடாத்த தீர்மானித்து உள்ளனர். தேர்தல் நிலை இவ்வாறு இருக்க தென்மராட்சி பகுதிகளில் கிபீர் விமானங்கள் தாழப்பறந்து விமானத் தாக்குதல்களை மேற்கொள்ளுவதாலும் மல்டி பெரல் தாக்குதல்களாலும் தென்மராட்சிப் பகுதிகளில் கட்டிடங்கள் கடும் சேதத்திற்கு உள்ளாகி இருக்கின்றது. மக்கள் இடம் பெயர்ந்து ஓடுகின்றனர். கடந்த மூன்று மாதங்களாக தங்கள் சொந்த இருப்பிடங்களை விடுத்து ஐம்பதினாயிரம் மக்கள் பாதுகாப்புத் தேடி வலிகாமம் பகுதிகளில் புகலிடம் அடைந்துள்ளனர். தென்மராட்சியில் நடைபெற்ற இராணுவ தாக்குதல்களினால் மட்டுவில், நுணாவில், கைதடி, சாவகச்சேரி, மறவன் புலோ, சங்கத்தானை ஆகிய இடங்களில் இருந்து 26,000 மக்கள் இடம் பெயர்ந்து வடமராட்சி நோக்கி சென்றுள்ளனர்.




## அரசியல் அரங்கில் சந்திரிகா உள்ளவரை அவர் கையை பலப்படுத்துவோம்

-எம்.எச்.எம். அஷ்ரப்-



அரசியலில் எதிரியும் இல்லை, நண்பனுமில்லை

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் அரசியல் அரங்கில் உள்ளவரை தம்முடைய தலைமையில் இயங்கும் தேசிய ஐக்கிய முன்னணியும, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் ஜனாதிபதிக்கு ஆதரவாக இருக்கும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சருமான எம்.எச்.எம்.அஷ்ரப் பொது ஜன முன்னணியுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டினை முடிவிற்கு கொண்டு வந்து அது தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், அமைச்சர் பௌசி அவர்கள் கூறிய கருத்தினால் ஏற்பட்ட கருத்து முரண்பாடு தீர்த்து வைக்கப்பட்டுள்ளதால், தேசிய ஐக்கிய முன்னணி பொது ஜன முன்னணியின் அங்கத்துவ கட்சியாக இணைய முடிவெடுத்துள்ளது எனவும் கூறினார்.

## யாழ்ப்பாண தேர்தல் நியமனப்பத்திரத்தில் மோசடி

தேசிய ஐக்கிய முன்னணியின் யாழ்ப்பாண தேர்தல் நியமனப்பட்டியலில் இடம்பெற்ற சுந்தரம் டிவகலாலா- டாக்டர் சிவகுமார் (லண்டன்) லங்கா நேசன் உள்ளடங்களாக இன்னும் இருவரது பெயர்கள் உட்பட ஐந்து பேரினதும் விருப்பத்திற்கு மாறாக இப்பெயர்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து டிவகலாலா அறிக்கை விட்டுள்ளார். அடுத்த மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னைநாள் அமைச்சர் செ.இராஜதுரையின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. இவர் நாட்டில் இல்லாத இவ் வேளையில் கையெழுத்தை மூத்த துணைத் தலைவர் எனக் கூறிக் கொள்ளும் ஒருவர் இட்டுள்ளார் எனத் தெரியவருகின்றது.

## லக்ஷ்மனிடம் ஜனாதிபதி கோரிக்கை

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியலில் பெயர் இல்லாததையிட்டு பிரச்சினையாக்கிக் கொள்ள வேண்டாம் என ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க அவர்கள் புத்தசாசன அமைச்சர் லக்ஷமன் ஜெயகொடியிடம் கேட்டுள்ளார்.

ஜனாதிபதி அவர்கள் லக்ஸ்மன் ஜயக்கொடியை அலரி மாளிகையில் சந்தித்து இது தொடர்பாக வினவியபோது இவ்வாறு கூறியுள்ளார்.

ஜனாதிபதி அவர்களின் பதில் திருப்திகரமாக இருந்ததால் இம் முறை கம்பஹா மாவட்டத்தில் தேர்தல் வேலைகளில் தாம் ஈடுபடப் போவதாக ஜெயக்கொடி அவர்கள் தெரிவித்துள்ளார்.

பொது முன்னணியின் தேசிய பட்டியலில் தம்முடைய பெயர் குறிப்பிடப்படாததால், தமது ஆதரவாளர்கள் மத்தியில் பல சந்தேகங்கள் கிளம்பியுள்ளதால் தாம் இதனை விளக்குவதற்கான நடவடிக்கையில் ஈடபட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## விஷேட பாதுகாப்பு கூட்டிணைப்பு நடவடிக்கை

நடைபெறப் போகும் பொதுத் தேர்தலை முன்னிட்டு, பொலிஸ், இராணுவ கூட்டிணைப்பு கொண்ட 24 மணிநேர விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

தலைநகர் கொழும்பு மா நகரசபைக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் குறிப்பாக தமிழர் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் கண்காணிப்பு, சுற்றிவளைப்பு, தேடுதல்கள், ஆகியவற்றை இக் கூட்டிணைப்பு நடவடிக்கை மேற்கொள்ளும். அத்துடன் எதிர்த் தரப்பு அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணியில் போட்டியிடும் வேட்பாளர்கள் இவர்களுக்கு ஆதரவு நல்கும் தீவிர ஆதரவாளர்கள், நிதி உதவி வழங்குபவர்கள் ஆகியோரை இந் நடவடிக்கை குழு கண்காணிக்கும். மேலும் அரசியல் வாதிகளுக்கும் பாதாள உலகக் கும்பலுக்குள்ள தொடர்புகளையும் இக்குழு ஆராயும்.

இவர்களுக்கு கீழ் அடங்கிய இராணுவ மோட்டார் அணி தலைநகரை சுற்றி வருவதுடன் திடீர் சோதனைகளை நடாத்தும். அத்துடன் கண்காணிப்பு, ரோந்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். பொலிசார் சுற்றி வளைப்பு, சந்தேக நபர்களை கைது செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வர். ஜனாதிபதியின் விஷேட பணிப்பின் கீழ் இக் கூட்டிணைப்பு நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. அதே நேரம் ஆளும் கட்சியை சார்ந்த முக்கிய அரசியல் வாதிகளின் தேர்தல் பணிகளில் அரச கூட்டுத் தாபனங்களுக்கு சொந்தமான வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

## ஊமைப் பெண் மானபங்கம்

யாழ்ப்பாண வைத்திய சாலைக்கு ஈ.சீ.ஜி மெடிக்கல் கிளினிக்கு சென்ற ஊமைப் பெண்ணை அப்பகுதிக்கு பொறுப்பான ஒருவர் மானபங்கம் செய்ய முயற்சி எடுக்கப்பட்டுள்ளது என வைத்தியசாலை வட்டாரங்கள் ஆதவனுக்கு தெரிவித்தன. இப் பெண்பிள்ளையின் வயது 21, இவரைக் கெடுக்க முயன்றவரின் வயது 25, இப்பிள்ளை சுகயீனம் காரணமாக ஈ.சீ.ஜி எடுக்க சென்ற வேளை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக பொலிசாருக்கு வைத்தியசாலை நிர்வாகம் முறைப்பாடு செய்தது. வைத்தியசாலை உயரதிகாரி ஒருவரின் முயற்சியால் இதற்குரிய விசாரணைகள் தடைப்படுகின்றது என மேலும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.



# தேர்தல் நியமனங்களில் பாரிய மோசடிகள்

செந்தணலோன்

இந்த நாட்டின் 11ஆவது பாராளுமன்றத்தை தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் எதிர்வரும் அக்டோபர் 10ஆம் திகதி நடைபெறவுள்ளது. 196 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களுக்காக 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களைச் சேர்ந்த 5015 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர்.

இந்த பொதுத் தேர்தலில் ஒரு கோடியே 2 இலட்சத்தி 71 ஆயிரத்தி 101 வாக்காளர்கள் 160 தேர்தல் தொகுதிகளிலுமுள்ள 9 ஆயிரத்தி 945 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்கவுள்ளனர். ஆனால் இந்த பொதுத் தேர்தலும் இலங்கையில் கடந்த கால தேர்தல்களை விட மிக மோசமான நெருக்கடிகளையும், வன்முறைகளையும், மோசடிகளையும் எதிர்கொள்ளலாமென்றே எதிர்பார்க்கப்படுகிறது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதிலிருந்து வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து இதுவரை 60 வன்செயல் இடம் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 4 கொலை, சம்பவங்கள் உட்பட தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் என்பனவும் அடங்கும். கூடுதலாக துப்பாக்கி பிரயோக சம்பவங்களே இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேநேரம், ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட அரசியல்வாதிகளின் பாதுகாப்பு பெருமளவில் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு கூடுதல் ஆயுதங்களும் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. அத்துடன் தேர்தல் கால பாவனைக்கென ஜெர்மனியிலிருந்து சீ.எம்.டபிள்யு - 7 ரக கார்கள் பல புதிதாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும், அத்துடன் முக்கிய அரசியல்வாதிகளின் பாதுகாப்பு பிரிவினருக்கென ஜெர்மனியிலிருந்து 25 கலன் எரிபொருளை நிரப்பக் கூடிய அதிவிஷேட மோட்டார் சைக்கிள்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.


வாக்களிப்புக்கான காலம் நெருங்க, நெருங்க தேர்தல்களம் வன்முறைகளின் உச்சத்தை எட்டக் கூடுமென்றே எதிர்பார்க்கப்படுகிறது.


இதற்கெல்லாம் அப்பால் தேர்தல் நியமனப்பத்திரங்களில் பாரிய மோசடிகள் இடம் பெற்றுள்ளதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. குறிப்பாக அமைச்சர் அஷ்ரப்பின் தேசிய ஐக்கிய முன்னணி வேட்பாளர் பட்டியலில் உள்ளோரின் பெயர் விபரங்களிலேயே இவ்வாறான குளறுபடிகள் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

மட்டக்களப்பில் போட்டியிடும் தேசிய ஐக்கிய முன்னணி வேட்பாளர் பட்டியலின் முதன்மை வேட்பாளரான முன்னாள் பிரதேச அபிவிருத்தி இந்து கலாசார அமைச்சரும் மலேசியத் தூதுவராகவும் இருந்த செல்லையா இராஜதுரையின் ஒப்பமும் வேறொருவரினால் இடப்பட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அதே போல் கொழும்பு வேட்பாளர் பட்டியல் நியமனத்தில் இடம் பெற்றுள்ள பலரது பெயர் விபரங்களும் இவ்வாறே இடம்பெற்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதே நேரம், அம்பாறை கச்சேரியில் தேர்தல் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்துவிட்டு வாகனங்களில் ஊர்வலமாக வந்து கொண்டிருந்த ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர் ஷேகு இஸ்ஸதீனது ஆதரவாளர்கள் மீது இறக்காமத்தில் வைத்தே மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் இருவர் பலியானதுடன் 9 பேர் காயமடைந்த சம்பவத்திற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தான் பொறுப்பென ஷேகு இஸதீன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தென்னிலங்கையை விட, கிழக்கில் குறிப்பாக அம்பாறை கல்முனை போன்ற முஸ்லிம் பிரதேசங்களில் மிக மோசமான இவ்வாறான தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறலாமென்பதையே இச்சம்பவம் சுட்டிக் காட்டுகிறது.





ஒரு பொதுச் சின்னத்தின் கீழ் ஒருபொது இணக்கப்பாட்டுடன் போட்டியிடுவதற்கு எடுக்கப்பட்ட சகல முயற்சிகளையும் தமிழர் விடுதலைக் கூட்டணி முற்றாக நிராகரித்த நிலையிலேயே ஏனைய தமிழ்க் கட்சிகள் இம் மாவட்டத்தில் தனித்துப் போட்டியிடும் சூழ்நிலை உருவாக்கப்பட்டது. குறிப்பாக இம்முறையும் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் அரசியல் அனாதைகளாக்கப்படும் சூழ்நிலையே தோன்றியுள்ளது. அவ்வாறான ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டால் அதற்கான முழுப்பொறுப்பையும் தமிழர் விடுதலைக் கூட்டணியே ஏற்க வேண்டும்.

எதிர்வரும் பொதுத்தேர்தல் சுதந்திரமான வாக்களிப்பு ஒன்றின் மூலமன்றி ஆயுதங்களும், பணமும், வன்முறையுமே பிரதான இலக்காகக் கொண்டு பெரும்பாலான அரசியல் கட்சிகள் செயற்படுவதையே இச்சம்பவங்கள் எடுத்துக் காட்டுகிறது.

இதற்கெல்லாம் அப்பால் அம்பாறை, திருகோணமலை ஆகிய இருமாவட்டங்களின் தமிழ்பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இம்முறை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. இதற்கு பிரதான காரணம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் விட்டுக் கொடுக்க முன்வராதநிலையே என ஏனைய தமிழ்க் கட்சிகள் குற்றஞ்சாட்டுவதே உண்மை நிலையாகும். இவ்விரு மாவட்டங்களிலும் சகல தமிழ்க்கட்சிகளும் ஒரு பொதுச் சின்னத்தின் கீழ் ஒருபொது இணக்கப்பாட்டுடன் போட்டியிடுவதற்கு எடுக்கப்பட்ட சகல முயற்சிகளையும் தமிழர் விடுதலைக் கூட்டணி முற்றாக நிராகரித்த நிலையிலேயே ஏனைய தமிழ்க் கட்சிகள் இம் மாவட்டத்தில் தனித்துப் போட்டியிடும் சூழ்நிலை உருவாக்கப்பட்டது. குறிப்பாக இம்முறையும் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் அரசியல் அனாதைகளாக்கப்படும் சூழ்நிலையே தோன்றியுள்ளது. அவ்வாறான ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டால் அதற்கான முழுப்பொறுப்பையும் தமிழர் விடுதலைக் கூட்டணியே ஏற்க வேண்டும்.

இதேநேரம் குறைந்த வாக்காளர்களைக் கொண்ட வன்னி தேர்தல் தொகுதியில் 6 பாராளுமன்ற பிதிநிதிகளை தெரிவு செய்வதற்கு 17 அரசியல் கட்சிகளும் 7 சுயேட்சைக் குழுக்களுக்குமென மொத்தமாக 216 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதுவே 22 தேர்தல் மாவட்டங்களிலும் குறைந்த பிரதிநிதிகளை தெரிவு செய்ய கூடுதல் வேட்பாளர்களை நிறுத்தியுள்ள தேர்தல் மாவட்டமாகும்.

அதேவேளை, யாழ்குடா நாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் இரு தினங்கள் தொடர்ச்சியாக இடம் பெற்ற தமிழீழவிடுதலைப் புலிகளின் அரச படையினருக்கெதிரான பாரியளவிலான மோதல் நடவடிக்கைகள் குடா நாட்டில் சுதந்திரமான தேர்தலொன்றுக்கான சாத்தியப்பாடுகள் அருகி வருவதையே சுட்டிக்காட்டுகிறது.

இந்த மோதல் சம்பவங்களில் இரு தரப்பிலும் 500க்கு மேற்பட்டோர் உயிரிழந்ததாகவும், ஆயிரத்திற்குமதிகமானோர் காயமடைந்ததாகவும் ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவித்த போதும் பாரியளவிலான இழப்புகளையும் மறுபக்கம் குடாநாட்டில் எவ்வாறு தேர்தலொன்றை நடத்துவது என்ற அச்சத்தையும் அரசுக்கு உருவாக்கியுள்ளது என்பது உண்மையே.

கிபீர் குண்டு வீச்சு விமானங்களின் பாரிய அதிர்வு, எம்.ஐ-24 ரக ஹெலிகொப்டர்கள், சிறியரக ஏவுகணைத் தாக்குதல்கள், மல்ரிபரல் ஆட்லறித் தக்குதல்கள் என்பவற்றால் அதிர்ந்து போய்க் கிடக்கும் யாழ்குடாநாட்டு மக்களால் தேர்தலைப் பற்றி எவ்வாறு சிந்திக்க முடியும்.

தேர்தல் நெருங்க, நெருங்க குடாநாட்டில் மோதல்கள் அதிகரிக்குமாயின், கடந்த பொதுத் தேர்தலில் யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற தேர்தல் மோசடிகளும், முறைகேடான பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களும் மீண்டும் இடம்பெறக் கூடிய சாத்தியங்கள் குடாநாட்டின் தேர்தல் களத்தில் இல்லாமலில்லை.

தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்) தலைவர் சித்தார்த்தன், முன்னாள் வடக்கு கிழக்கு மாகாணசபை முதல்வர் அ.வரதராஜப் பெருமாள், ஈழமக்கள் ஜனநாயக கட்சி (ஈபிடிபி) தலைவர் டக்ளஸ் தேவானந்தா, தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட தலைவர்கள் வீ.ஆனந்த சங்கரி, மாவை சேனாதிராஜா, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி அ.விநாயக மூர்த்தி உட்பட தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களின் குடாநாட்டின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை கைப்பற்றுவதற்கான தேர்தல் வியூகம் எவ்வாறு அமையப் போகிறது என்பதை அக்டோபர் 11ஆம் திகதி அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

கடந்த இரு தசாப்த காலமாக தொடரும் யுத்தத்திற்கும், இந்த நாட்டின் மிகப்பெரிய பிரச்சினையான இனப் பிரச்சினைக்கும் தீர்வொன்றைக் காண்பதற்கு குறுக்கீடுகளையும், யுத்தத்தை தொடர அவசர காலச் சட்டத்தை அங்கீகரிக்கவும் கூடியிருந்து கும்மாளமடிக்கும் பாராளுமன்ற கதிரைகளின் சுகங்களைத் தேடும் தமிழ்க் கட்சிகளின் உண்மையான உள்நோக்கம் தான் என்ன... **"சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டு சிந்தை இரங்காரடி."**

## ஆதவன் 11 இதழில் மக்கள் களம் பகுதியில் வெளியிடப்பட்ட ஏ.எல்.எம் அஸ்லிமின் கடிதத்திற்கான பிரதேச செயலாளர் ஏ.எல் பளீலின் பதில்

27.08.2000 திகதி (11வது ஆதவன்) ஆதவன் பத்திரிகையின் 8ம் பக்கத்தில் "அரச அலுவலகங்களில் அரசியல்" எனும் தலைப்பில் வெளியிடப்பட்டிருக்கும் செய்தி மிகவும் தவறானது. அத்துடன் உண்மைக்கு மாறானதும் கூட.

சாய்ந்தமருது என்பது ஒரு சிறிய கிராமம் அல்ல, அது மிகப் பெரியதோர் பட்டினம். 17 கிராம சேவகர் பிரிவுகளையும், தனியொரு பிரதேச செயலகத்தையும் கொண்டது. செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஐக்கிய விளையாட்டு தைானத்தை அண்டியுள்ள பகுதியில் மாத்திரமே மிகச் சிறியளவு அரச காணி உள்ளது.

அரசாங்கத்தின் வறுமை ஒழிப்புத்திட்டத்தின் கீழ் சமுர்த்தி வங்கிகள் ஆரம்பிக்கும் நோக்கில் முதற்கட்டமாக இங்கு மண்போட்டு நிரம்பப்பட்டுள்ளது. இதன் காரணமாக செய்தியில் கூறப்பட்டுள்ளவாறு வெள்ளம் ஏற்படுவதற்கோ, 100க்கு மேற்பட்ட குடும்பங்கள் வெள்ளத்தில் தாழ்வதற்கோ இங்கு வாய்ப்பில்லை.

யாரும் இது வரை இவ்விடயம் தொர்பாக என்னிடம் வந்து முறையிடவில்லை எனினும் தங்களின் செய்தியின் பின்னர் நானும், சாய்ந்தமருது பிரதேச செயலாளரும், கல்முனை நகர அதிகாரிகளும் அவ்விடம் சென்று பார்வையிட்டு, தேவையான ஏற்பாடுகளைச் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம். இந் நடவடிக்கையில் எவ்வித கட்சி பாகுபாடுகளும் எம்மிடம் கிடையாது. அவ்வாறு செயற்படவும் முடியாது.

தங்களது செய்தி இன்றைய தேர்தல் காலகட்டத்தில் என்னையும் எமது அலுவலகப் பணிகளையும் பாதிக்கக் கூடியதாக உள்ளது.

வழமையில் முறைப்பாடு ஒன்று கிடைக்கப் பெறும் பட்சத்தில் உரிய அதிகாரியின் கருத்தையும் அறிந்தே பிரசுரிப்பது ஒரு நடைமுறையாகும்.

இக் கடிதத்தைப் பிரசுரித்து உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

ஏ.எல்.எம். பளீல்,
பிரதேச செயலாளர்,கல்முனை.

## யார்?



"அம்மா தாயே"
குரல் கேட்டால்
பிச்சை
எனக் கருதி
விடவேண்டாம்
வாக்குக் கேட்க
வந்த வேட்பாளராகவும்
இருக்கலாம்!

தீலீபா
நன்றி
தமிழ்த் தேசம்

ஆதவன்

இல-83, பிலியன்தல வீதி மஹரகம
தொலைபேசி எண் - 851672, 851673
விநியோகப் பிரிவு - 851672
தொலைமடல் - 851814

### வாசகர் உரிமை!

தம்மைப் பாதிக்கும் விதத்தில் ஆதவனில் ஏதாவது பிரசுரிக்கப்பட்டதாக நபரொருவர் அல்லது நிறுவனமொன்று கருதும் பட்சத்தில் உரிய கருத்துத் தெரிவிக்கும் உரிமை ஆதவனுக்குண்டு.

அது தொடர்பாக அந்த நபர் அல்லது நிறுவனம எழுதி அனுப்பி வைக்கும் கருத்துக்களை வெளியிட "ஆதவன்" கடப்பாடுடையது.

# அமைதியான தேர்தல் நடைபெற வேண்டும்

தேர்தலுக்கான பிரச்சார உத்திகள் முடுக்கி விடப்பட்டுள்ளது. எங்கும் சுவரொட்டிப் போட்டிகள் விருப்பு வாக்குக்கான போட்டியும் சூடு பிடித்துள்ளது. வடக்கு கிழக்கில் போட்டியிடும் கட்சிகள் தங்கள் தேர்தல் சுத்து மாத்துகளை ஆரம்பித்து விட்டன. தமிழ் பேசும் மக்கள் எவருக்கு வாக்களிக்க வேண்டும், தேர்தலில் என்ன செய்ய வேண்டும், எவரெவரை ஓரங்கட்ட வேண்டும் என தீர்மானித்து விட்டார்கள். இந்த நிலையில் தமிழ் கட்சிகள் ஒருவர் மீது ஒருவராக சேறடிக்கும் விளையாட்டில் இறங்கியுள்ளனர்.

வடக்கு பற்றி எறிந்து கொண்டிருக்கின்றது, வட புலத்து மக்கள் தீக்குளித்துக் கொண்டிருக்கின்றார்கள், கட்டிடங்கள் தரை மட்டமாக்கப்படுகின்றது. மக்களின் வாழ்வோ அவலத்தின் மேல் அவலம். ஆனால், அரசியல் வாதிகளோ தமது சித்து விளையாட்டுகளில் இறங்கியுள்ளனர். கண்ணீர் காவியமாக மாறியுள்ள தமிழ் மக்களின் அவல வாழ்விற்கு ஆறுதல் கூறுபவர் எவரும் இலர்.

வடக்கில் தொடரும் இராணுவ நடவடிக்கைக்கு மத்தியில், கிழக்கில் மேற்கொள்ளப்படும் துப்பாக்கிச் சூட்டுக்களுக்கு இடையில், மக்கள் பரிதவித்துக் கொண்டிருக்கும் நிலையில் நமது தமிழ் அரசியல் வாதிகள் நாற்காலி கனவு கண்டு கொண்டிருக்கின்றார்கள். ஆனால் மக்களுக்கு தேர்தலைப் பற்றி சிந்திக்க நேரம் இல்லை. இருந்தாலும் அமைதியான சமாதானமான தேர்தலையே மக்கள் நாடுகின்றார்கள்.

அமைதி இழந்திருக்கும் மக்கள் மேலும் தேர்தல் வன்முறைகளை சந்திக்க விரும்பவில்லை. இதனை வடக்கு கிழக்கில் போட்டியிடும் அனைத்து கட்சிகளும் சுயேட்சை குழுக்களும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அடுத்து, பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் இதுவரை 60 தேர்தல் வன்செயல்கள் நடைபெற்று இருக்கின்றது. 4 கொலைகள் நடைபெற்று இருக்கின்றது. சுவரொட்டி, பிரச்சார போட்டிகள் மத்தியில் தேர்தல் வன்முறைகள் தலையெடுக்க தொடங்கியுள்ளது. அனுராதபுரத்தில் பொதுசன முன்னணியைச் சார்ந்தவர்கள் மத்தியிலேயே கலவரம் ஏற்பட்டு அமைச்சர் சோமசிங்க தாக்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளர். இதுவிருப்புவாக்கு வேட்டையில் ஏற்பட்ட சம்பவமாகும். ஆனால் இது நல்ல குணம் அல்ல.

வேட்பாளர்கள் கடத்தப்படும் நிலையும் ஆரம்பமாகியுள்ளது. எனவே இந்த நிலையில் அண்ணளவாக 2 கோடி மக்கள் வாழும் நாட்டில் 45 கட்சிகள் அரசியல் கட்சிகளாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இருநூற்றி இருபத்தைந்து பாராளுமன்ற ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்ற தேர்தலுக்காக 5048 வேட்பாளர்கள் போட்டி போடுகின்றனர். பணம் தண்ணீராக அள்ளி வீசப்பட்டு. ஆதரவாளர்கள் விலை கொடுத்து வாங்கப்படுகின்றனர். இவர்களுடன் பாதாள உலகக் கோஷ்டியும் உலாவி வருகின்றது. இவற்றை மக்கள் விழி பிதுங்க பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். தேர்தல் நெருங்க நெருங்க என்ன நடைபெறும் என மக்கள் ஏங்கிய ண்ணம் உள்ளனர். எனவே, பொறுப்புள்ள அரசியல் கட்சிகள் இந்த விடயத்தில் அவதானமாகவும் நிதானமாகவும் நடந்து கொள்ள வேண்டும். பொது மக்களின் அமைதியை குலைக்கும் விதத்தில் நடந்து கொள்ளக் கூடாது. நாற்காலிகளுக்கான நப்பாசையில் நாட்டை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கக் கூடாது. அரசியல் கட்சிகளுக்கு தங்களின் கருத்துக்களை முன்வைக்க உரிமையுண்டு இது ஜனநாயக நாடு கருத்துக்களுக்கும் மாற்றுக் கருத்துக்களுக்கும் இடமுண்டு. கருத்துக்களை அரசியல் அராஜகத்தின் மூலம் சந்திக்க முற்பட வேண்டாம். ஏன் என்றால் மக்கள் அமைதியையே விரும்புகின்றார்கள்.

— ஆசிரியர்.

## விக்டர் ஐவன் எழுதுகிறார்


# நீதியான தேர்தலுக்காக............

பொதுமக்கள் வாக்கெடுப் பொன்றின் மூலம் தெரிவு செய்து கொள்ளும் பிரதிநிதிகளுடன் கூடிய பரிபாலன முறையை ஜனநாயக முறைக்கான மிக முக்கிய சிறப்பம் சமாகக் கொள்ளலாம். பொதுமக்கள் பிரதிநிதிகளை பொதுமக்கள் வாக்கெடுப்பொன்றின் மூலம் தெரிவு செய்து கொள்ளும் செயற்பாடு ஜனநாயக பரிபாலன முறையின் அடிப்படை அம்சமெனக் கொள் ளுதல் வேண்டும். பொதுமக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து கொள்ளும் செயற்பாடு சுதந் திரமான, நியாயமான முறையில் நடக்காது நியாயமற்ற மோசடியான முறையில் நடைபெறுமேயாயின் அவ்வாறான ஆட்சி ஜனநாயக முறையிலான ஆட்சியொன்றாக இருக்காது.

பரம்பரை ரீதியில் நிலவுடமை அரசாட்சி இருந்த எமது நாட்டில் பொதுமக்களின் வாக்குகளின் மூலம் தெரிவு செய்து கொள்ளும் பொதுமக்கள் பிரதிநிதிகளுடன் கூடிய ஆட்சி முறையொன்று ஆங்கிலேயர்களினால் அறிமுகப் படுத்தி வைக்கப்பட்டது. அறிமுகப் படுத்தப்பட்ட புதிய ஜனநாயக முறை சமுதாயத்திற்கு நன்கு பரிச்சயமான முறையொன்று இல்லாதிருந்ததின் காரணத்தால், தேர்தலில் நிற்கும் வேட்பாளர்கள் பணத்துக்கும் இன்னும் பல முறைகளுக்கும் பொதுமக்கள் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் நிலை ஆரம்ப காலங்களில் இருந்தே நடைபெற்று வந்துள்ளது. இருந்தாலும் தேர்தல் வன்முறைகள் அக்காலத்தில் இன்று நடைபெறுவது போன்று திட்டமிட்டு செயற்படாத காரணத்தால் வன்முறைகளினால் தேர்தல் பெறுபேறுகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படவில்லை. இருந்தாலும் இன்று நாட்டில் உள்ள நிலைமை அதற்கு வித்தியாசமானதாகும். தேர்தல் மோசடிகள் திட்டமிட்டு நடாத்தப் படுகின்றன. இன்று திட்டமிட்டு நடாத்தப்படும் தேர்தல் மோசடிகள் பொதுமக்கள் விருப்பத்தோடு மூடி மறைக்கப்படும் அளவுக்கு வளர்ந் துள்ளது. நடைமுறையில் இருந்த பாராளுமன்ற ஆட்சி முறையை இல்லாதொழித்து, தனி நபரொரு வரின் கையில் அதிகமான அதிகா ரங்கள் ஒன்று சேரும் நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி முறையொன்றை ஏற்படுத்தியதன் பின்பே, இவ்வாறானதொரு நிலை முதன் முறையாக நாட்டில் ஆழப்பதிய ஆரம்பித்தது. முன்பிருந்த ஆட்சி முறையின் கீழ் பொதுமக்களுக்குத் தேவைப்படும் போது ஆட்சி முறையில் மாற்றத் தினை ஏற்படுத்த அவ்வளவு சிரமம் இருக்கவில்லை. அன்றைய ஆட்சி முறை மக்கள் ஒன்றிணைந்து மாற்றிக் கொள்ளக் கூடிய நிலைமை இருந்தது, ஆனால் இன்று நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதிமுறைய்ய இலகுவில் மாற்ற முடியாது.

பாராளுமன்ற ஆட்சி முறை இருந்த காலங்களில் எல்லாத் தேர்தல்களிலும் ஆளும் கட்சி தோல்வியுற்று எதிர்கட்சியே ஆட்சிக்கு வந்தது. அதன் காரணமாக, பொலிசும் தேர்தல் நடவடிக் கைளுக்குப் பொறுப்பான அரச "நிறுவனங்களும்" அதிகாரிகளும் தேர்தல்களில் நடுநிலையாகவும், சுயாதீனமாகவும் செயற்படும் நிலையொன்று இருந்தது. இருந் தாலும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையின் கீழ் ஆட்சி அதிகாரத்தை இலகுவாக மாற்றியமைக்க முடியாத இறுக் கமானதொரு நிலை ஏற்பட்டதன் காரணமாக அந்த ஸ்தாபனங்களின் செயற்பாடுகளில் இருந்த சுயாதீ னமான தன்மைகள் சிதைந்து சென்று, தேர்தல் காலங்களில் நீதிக்குப் புறம்பாக ஜனாதிபதியின் அரசியல் தேவைகளுக்கேற்பச் செயற்படும் நிறுவனங்களாக மாற்றமடைந்தன. 1978 அரசியல் யாப்பிற்கு முன்னர் அரசியல் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு மாத்திரமே இருந்தது. அதனால் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்பு அரச சேவையும், பாதுகாப் புச்சேவைகளும் சுயாதீனமாகச் செயற்படும் ஒரு நிலை இருந்தது. புதிய அரசியல் யாப்பின் கீழ் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, பாராளுமன்றம், மாகாண சபைகள் என அதிகாரம் மிக்க மூன்று வகையான அமைப் புகள் உருவாகின. இவைகளில் ஒரு அமைப்பு தேர்தலுக்கு முகம் கொடுக்கும் போது, மற்றைய ஸ்தா பனங்கள் அரச அதிகாரங்களைத் தமதாக்கிக் கொண்டு தேர்தல் நடவடிக்கைளில் ஈடுபடும் நிலையொ ன்று உருவாகியது. இந்த நிலை தேர்தல்களின் போது அரசாங்க சேவையும், பாதுகாப்புச் சேவைகளும் அதிகாரம் மிக்க அரசியல் அமைப்பின் கையாட் களாகச் செயற்படும் நிலைமை உருவாகக் காரணமாகியது.

தேர்தல்களின் போது திட்டமிட்டு வாக்கு மோசடி ஊழல் செய்யும் முறை முதன் முதலாக




1981ம் ஆண்டு நடைபெற்ற யாழ்ப்பாண அபிவிருத்தி சபைத் தேர்தலோடு ஆரம்பமாகியது. அதன் பிறகு 1982ம் ஆண்டு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பின் போது இவ்வாறு நடைபெற்றது. 1988ம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலும் 88ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலும் 89 பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலும் இரத்தம் சிந்தி நடாத்தப்பட்டது ஆயுதமேந் தியவர்கள் வாக்குச் சாவடிகளினுள் புகுந்து வாக்குகளைக் கொள் ளையடித்தனர். இதற்கு சர்வதேச அளவில் எதிர்ப்புக்கள் மேலெழுந் ததின் காரணமாக 1991ம் ஆண்டு நடாத்தப்பட்ட மாகாண சபைகளுக் கான தேர்தலும் 1994ம் ஆண்டு பொதுத்தேர்தலும் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடைபெற்றன. 1994இல் நடைபெற்ற மன்றப் தேர்தல் சுதந்திரமாகவும் நியாயமானதாகவும் நடைபெற்ற காரணத்தினாலேயே பொது சன ஐக்கிய முன்னணியி னால் வெற்றிபெற முடிந்தது.

பொதுசன ஐக்கிய முன்ன ணியின் ஆட்சிக் காலத்தில் திட்டமிடப்பட்ட தேர்தல் மோசடி முதன் முறையாக 1994ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்த லிலேயே நடைபெற்றது இது கண்டி மாவட்டத்தில் நடைபெற்றது. அதன் பின்பு நடாத்தப்பட்ட 1999ம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலின் போது அதுபோன்ற சம்பவங்கள் நாடு பூராவும் நூற்றுக் கணக்கில் நடந்தன 1999ம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற வட மேல் மாகாண சபைத் தேர்தல் இலங்கை தேர்தல் வரலாற்றில் நடைபெற்ற மிகவும் கேவலமான தேர்தல் மோசடியொன் றெனக் கொள்ளலாம். அதன் பின்பு ஜனாதிபதிக்கு ஏற்பட்ட குண்டுத் தாக்குதலின் காரணமாக, மிகவும் உணர்ச்சிபூர்வமான நிலையொன் றின் கீழ் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வட மேல் மாகாணத்தைப் போன்று மிக நுணுக்கமான முறையில் தேர்தல் மோசடிகள் நடாத்தப்பட்டன. இந்த நிலை மேலும் வளருவதற்கு இடம் கொடுத்து எமது சமுதாயம் வாழாது இருக்குமாயின் ஆட்சிக்கு அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ள போட்டி போடும் கட்சியினர் களிடையே பயங்கர யுத்தம் ஒன்று உருவாகும் நாள் வெகு தூரத்தில் இல்லையென்றே கூற வேண்டும். மறு புறத்தில் சரிந்து விழுந்து அராஜக நிலையொன்று ஏற்பட காரணமும் ஆகலாம்.

ஜனநாயக அரசியலில் முக்கிய அம்சமாக திகழ்வது பொது மக்கள் வாக்களிக்கும் தேர்தல் முறையாகும். இத்தேர்தல்களின் போது நரம்புகளினால் அனுப்பப்படுவது பொது மக்களின் நேர்மையான அரசியல் அபிலாஷைகள் என்ற சுத்தமான ரத்தமாகாது, வேறு அசுத்தமான இரத்தம் ஆகுமெனில் அனைத்தும் அழிவை நோக்கிச் செல்வது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடுகின்றது. இருந்தாலும் இந்த நிலையினை வெறும் உபதேசங் களினால் மாற்ற முடியாது. இந்த வாக்குக் கொள்ளைக்கு எதிராக இலட்சக்கணக்கான மக்களை கிளர்ந்தெழச் செய்யும் பாரிய சமுதாய எழுச்சி ஒன்றை முன்னெடு ப்பதன் மூலமாகவே இதனைச் சாதிக்க முடியும்.

ஜனநாயகத்திற்கான கூட்ட மைப்பு இந்த நோக்கத்தினை முன்னெடுப்பதற்காக பரந்த அளவிலான சமுதாய செயற்பா டொன்றிற்கு உயிரூட்ட முக்கியமான செயற்திட்டமொன்றை முன்னெடுக்க ஆயத்தமாக உள்ளது.

இக்கூட்டமைப்பு இலங்கையில் முக்கிய தொழிற்சங்கங்கள், பொதுமக்கள் அமைப்புக்கள் அறுபதுடன் கட்சி அரசியலோடு தொடர்புபடாத சுயாதீனமான ஒரு அமைப்புமாகும். சரிந்து விழுந்து கொண்டிருக்கும் அரசியல் ஸ்தாபன முறையை மறுசீரமைத்து ஜனநாயகத் திற்கு புத்துயிரூட்டுவது இந்தக் கூட்டமைப்பின் நோக்கமாவதோடு, இதன் ஆரம்ப நடவடிக்கையொன் றாக 10 லட்சம் பொதுமக்கள் கைகளில் மஞ்சள் நாடா கட்டும் செயற்பாடொன்றைஅது முன்னெ டுக்க உத்தேசித்துள்ளது.

இந்த மஞ்சள் நாடா அணியும் செயற்பாட்டிற்கு "மங்கள முடிச்சு" எனப் பெயரிடப்பட்டுள்ளது. இது "சூரிய மலர்" செயற்பாட்டிற்கு ஓரளவு சமமானதாகும். சுதந்திர மான, நேர்மையான தேர்தலொன்ற ிற்கான சமுதாய எதிர்பார்ப்பை வெளிப்படுத்தும் ஒரு வழி முறையொன்றாக எதிர்வரும் 11ம் திகதி தொடக்கம் தேர்தல் தினம் வரைக்கும் ஒரு மஞ்சள் நாடாவையோ அல்லது மஞ்சள் கயிறொன்றையோ கையில் அணிந்து கொள்ளுமாறு பொதுமக்களை வேண்டிக் கொள்கின்றது. இந்த மஞ்சள் நாடா மூலம் சுதந்திரமான நேர்மையான தேர்தலொன்றிற்கான பொது மக்கள் நம்பிக்கையையும், கடந்த காலங்களிலும் நிகழ்காலத் திலும் தேர்தல் மோசடிகளுக்கான பொதுமக்கள் எதிர்ப்புக்களையும் வெளிப்படுத்தும் ஒரு அடையாளச் சின்னமாகக் கொள்ளப்படுகின்றது.

மஞ்சள் நாடா அணியும் ஆரம்ப விழா எதிர்வரும் 11ம் திகதி மாலை 3.00 மணிக்கு கொழும்பு எல்பின்ஸ்டன் அரங்கில் நடை பெறவுள்ளது. அதன் பின் 14ம் திகதி கொழும்பு மாவட்டத்தில் தேர்ந் தெடுக்கப்படும் 500 இடங்களில் மஞ்சள் நாடா அணிவிக்கும் நடவடிக்கைகளைச் செயற்படுத்த உத்தேசித்துள்ளது. இதன் மூலம் கொழும்பில் உள்ள எல்லா வைத்தியசாலை ஊழியர்கள் (டாக்டர்கள் உட்பட சிற்றூழியர்கள்), வங்கி அதிகாரிகள், தொலைத் தொடர்புத்துறை ஊழியர்கள், புகையி ரதச் சேவகர்கள், பல்கலைக்கழக பேராசிரியர், விரிவுரையாளர்கள், மாணவர்கள் என்போர் உள்ளடக் கப்படுவர். இந்த நடவடிக்கைக்கு, கோவில், பள்ளிகள், பௌத்த ஆலயங்களும் தொடர்புபட்டுள்ளன. 13ம் திகதி போயா தினமன்று பௌத்த ஆலயங்களும், 17ம் திகதி கத்தோலிக்க, கிறிஸ்தவ ஆலயங் களும் சமய உபதேசங்களுக்கு இந்தத் தலையங்கத்தையே உபயோ கிக்கவுள்ளன. பௌத்த ஆலயங்களும் கிறிஸ்தவ, தமிழ் இஸ்லாம் சமய பீடங்களும் சுதந்திரமான, நீதியான பொதுத்தேர்லொன்றை நடாத்த வற்புறுத்தும் மத்தியஸ்தர்களாக எதிர்வரும் தினங்களில் மாற முடியும். அத்தோடு செப்டெம்பர் 19ம் திகதி நாடு பூராவும் ஆயிரக் கணக்கான இடங்களில் மக்கள் மஞ்சள் நாடா அணிவிக்கும் நிகழ்ச்சியும் மேற்கொண்டு நடாத்தப்படவுள்ளது.

இந்தக் கூட்டமைப்பின் எதிர்பார்ப்பின் படி, பத்து இலட்சம் பொதுமக்கள் தமது கைகளில் மஞ்சள் நாடா அணிந்து கொள் வதின் மூலம் சுதந்திரமும் நேர்மை யானதுமான ஒரு பொதுத் தேர் தலுக்கான நம்பிக்கை பரந்த அளவில் முன்னெடுக்கப்படுமே யாயின், இந்தப் பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் போது தேர்தல் மோசடிகள் கூடிய அளவில் குறை த்துக் கொள்வதற்கான செயற்பா டுகளுடன் கூடிய சமுதாயப் பின்னணியொன்று ஏற்படக் காரணமாக அமையும் என்பது மட்டுமல்லாது, அது சரிந்து விழுந்து கொண்டிருக்கும் அரசியல் ஸ்தாபன முறைகளுக்கு புத்துயிர் வழங்கும் செயற்பாடென்றாக அமைய வழிசமைக்கும்.

**பாரதி தமிழ்க் கவிதையின் யெளவனம், உரைநடைக்கும் புதுமை தந்தவன். சிறுகதைக்கு தெளிவான பிரக்ஞையோடு முதற்புள்ளி இட்டவன். மொழி பெயர்ப்புக்கு ஆதர்சமானவன். இன்றைக்கும் பின்பற்றிச் செல்லத்தக்க நெறியாள்கையுள்ள பத்திரிகையாளன். தமிழ் இசை, கலைகளின் சரியான மார்க்கம் எதுவென்பதனைத் தெளிவாகவே தெரிந்து வைத்திருந்த, பிரசாரப்படுத்திய கலைஞன், மானிடத்தை கடைசிவரை நேசித்தவன், கடைசி வரை உலக இயக்கத்தை துல்லியமாகவே அறிந்தும், தேடியும் வந்த படிப்பாளி. அற்பகாலத்திலேயே வாழ்விலே மேதைக்குரிய முதிர்ச்சியைத் தொட்டவன்.**

– செ.யோ

இன்றும் பாரதி மேலும் மேலும் விசுவரூபமெடுத்து நிற்பதற்குக் காரணந்தான் என்ன?

தமிழ்க் கவிதைத் துறை இன்றும் பாரதிகால சூழலை இன்னொரு விதத்தில் எதிர்நோக்குகிறது. மானிட இயல்புகளைப் புறக்கணிக்கிற கருத்துக்களை, வெற்று வார்த்தைகளால் கட்டி, கவிதை என்று நிலை நிறுத்தும் முயற்சிகள்மேற் கொள்ளப் படுகின்றன. கவிதைகளை ஜனநாயகப் படுத்துவதாகக் கூறும் குதர்க்கம், அதேவேளை எழுதினவர், எழுதிய பிறகு விளக்கம் சொல்ல முடியாத அர்த்தமற்ற சொற்சிலம்பம்.

# இப்போதும் வேண்டப்படும் பாரதி

சென்னைக் கடற்கரையில் பொது மேடையில் அலையெறியும் கடலோசையின் சத்தத்தையும் மீறி மகாகவி பாரதி பாடிய கடைசிப்பாடல் "பாரத சமுதாயம் வாழ்கவே" என்பது தான். வாழ்வைப் பற்றியதும், சமுதாயத்தைப் பற்றியதுமான முழுமையான நம்பிக்கை, கனவு, தேடுதல் என்பனற்றை இக்கவிதை வரிகளில் அர்த்தம் பொதிந்திடச் சொல்லியுள்ளார் கவிஞர். மக்களை முதன்மைப் படுத்திப் பாடுகின்ற எந்தப் படைப்பாளிக்கும் இயல்பாக உள்ள இந்தக் குரலை நாம் அவதானிக்கலாம்.

*"மனிதர் உணவை மனிதர் பறிக்கும்*
*வழக்கம் இனி உண்டோ?*
*மனிதர் நோக மனிதர் பார்க்கும்*
*வாழ்க்கை இனி உண்டோ? – புலனில்*
*வாழ்க்கை இனி உண்டோ? நம்மிலந்த*
*வாழ்க்கை இனி உண்டோ?*

*இனி ஒரு விதி செய்வோம் – அதை*
*எந்த நாளும் காப்போம்*
*தனியொருவனுக்குணவில்லை யெனில்*
*ஜகத்தினை அழித்திடுவோம்...*

*எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓர் இனம்*
*எல்லாரும் இந்திய மக்கள்*
*எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் ஓர் விலை*
*எல்லோரும் இந்நாட்டு மக்கள்*

தனது வாழ்வின் இறுதிக்கணம் வரை, பாரதி வீறானதொரு புயலாகவே வீசியிருக்கின்றான். 1921ம் ஆண்டு மதம் பிடித்த யானை பாரதியைத் தாக்கிற்று. அதனால் படுக்கையில் விழவேண்டியதாயிற்று. நோய் உடலை மிதித்து அழுத்திக் கொண்டிருந்த போதும் கடமையில் கண்ணாக இருக்க, வைத்த மன உறுதி மேலும் அவரைப் பரிமளிக்க வைத்தது. மரணம் மெதுமெதுவாக பாரதியை கையினால் அணைத்துக் கொண்டிருந்த வேளையில், அவரின் அருகே நீலகண்ட பிரம்மச்சாரி, பரலி.சு. நல்லையப்பா, இ.லஷ்மண ஐயர் ஆகியோர் உட்கார்ந்திருந்தனர்.

பாரதி மயக்கத்திற்கும் தெளிவிற்குமிடையே தவித்தார். "சுதேசமித்திரன்" பத்திரிகையின் ஆசிரியராக அப்போது இருந்தார். நிறைய எழுதிக்கொண்டிருந்த நாட்கள் அவை. மயக்கத்திலும் பத்திரிகை பற்றிய ஏக்கமே நெஞ்சினுள் வியாபித்திருந்தது. அப்போது ஆப்கானிஸ்தானத்தை ஆண்டு வந்தவன் அமானுல்லா. பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை விஷமாக வெறுத்து வந்தவன். துணிச்சலோடு போராடியவன். அவனைப் பற்றிய நினைவுகளோடு இருந்தவர், தன் நண்பர்களைப் பார்த்துக் கூறினார்–

"அமானுல்லாகானைப் பற்றி ஒரு கட்டுரை எழுதி நாளை ஆபிசுக்கு எடுத்துச் செல்ல வேண்டும்."

இதுவே பாரதியின் கடைசி வார்த்தைகள். அன்று இரவு ஒன்றரை மணிக்கு பாரதி இயற்கை எய்தினார்.

கடைசிவரை புரட்சியாளனாகவே வாழ்ந்த நீலகண்டப் பிரமச்சாரி, வக்கீல் துரைசாமி ஐயர், ஹரிஹரசர்மா, வி.சக்கரைச்செட்டி, சுரேந்திரநாத் ஆரியா, மண்டபம் ஸ்ரீநிவாசாச்சாரியர், கிருஷ்ணசாமி சர்மா உட்பட இருபது பேர் அவரது இறுதிச்சடங்கில் கலந்து கொண்டனர். கிருஷ்ணாம் பேட்டை மயானத்தில், பாரதியைப் பற்றி மிக நன்றாகவே அறிந்திருந்த அவரது மேற்கூறிய நண்பர்களில் சிலர், தமிழிலும் தெலுங்கிலும் பேசினார்கள். பின்பு பாரதியின் உடல் நெருப்போடு சங்கமித்தது.

**கிட்டத்தட்ட எண்பது ஆண்டுகளின் பின்னரே, மகாகவி பாரதியின் படைப்புகள் கால ஒழுங்குப் படி தொடுப்பாக வெளியாகத் தொடங்கியுள்ளன. தனது வாழ்க்கையையே, பாரதி எழுத்துக்களைத் தொகுப்பதற்காக அர்ப்பணித்துள்ள சீனி விசுவநாதன் என்ற மேன்மையான மனிதர் இந்தப் பணியிலே ஈடுபட்டுள்ளார். கண்ணுறங்காத உழைப் போடும், பக்தியோடும் இந்த அரும்பணியினைச் செய்துவரும் சீனிவிசுவநாதனின் முயற்சியால் பாரதி என்ற உன்னதத்தின் புதிய வெளிச்சங்களை நாம் அடையாளம் காணமுடிகிறது. இதற்காக தமிழ் என்றென்றும் இவருக்கு நன்றியுள்ளது.**

பாரதி தமிழ்க் கவிதையின் யெளவனம், உரைநடைக்கும் புதுமை தந்தவன். சிறுகதைக்கு தெளிவான பிரக்ஞையோடு முதற்புள்ளி இட்டவன். மொழி பெயர்ப்புக்கு ஆதர்சமானவன். இன்றைக்கும் பின்பற்றிச் செல்லத்தக்க நெறியாள்கையுள்ள பத்திரிகையாளன். தமிழ் இசை, கலைகளின் சரியான மார்க்கம் எதுவென்பதனைத் தெளிவாகவே தெரிந்து வைத்திருந்த, பிரசாரப்படுத்திய கலைஞன், மானிடத்தை கடைசிவரை நேசித்தவன், கடைசி வரை உலக இயக்கத்தை துல்லியமாகவே அறிந்தும், தேடியும் வந்த படிப்பாளி. அற்பகாலத்திலேயே வாழ்விலே மேதைக்குரிய முதிர்ச்சியைத் தொட்டவன்.

பாரதி எவ்விதம் தமிழ்க் கவிதையின் யெளவனமானான் என்பதை வாதமிட்டு நிறுவவேண்டியதில்லை. ஏனெனில் இன்றைய கவிதையே பாரதி என்ற ஆலமரத்தின் விழுதுகள் தான். இன்று நல்ல தமிழ்க் கவிதை எழுதுபவராக உள்ளவரெல்லாம் பாரதியின் விரல்பற்றி, நடைபயின்று வந்தவர்கள் தான். இலக்கியத்தை மக்கள் சொத்தாக்க வேண்டுமென்பதில் பாரதி அழுத்தமான நம்பிக்கை வைத்து, அதைச் சாத்தியப் படுத்தியவன்.



பாஞ்சாலி சபதத்தின் முன்னுரையிலே இதை பாரதி உறுதியுடன் பிரகடனப்படுத்துகின்றான்.

"எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொதுசனங்கள் விரும்பும் மெட்டு, இவற்றினையுடைய காவிய மொர்ன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும் படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவு படாமலும் நடத்துதல் வேண்டும்"

பாரதி பல மொழி பயின்றவன், ஷேக்ஸ்பியரை அறிந்தவன். ஷெல்லியால் வசீகரிக்கப்பட்டவனாய் "ஷெல்லி தாசன்" என்ற பேரைத் தரித்தவன், கம்பனிலும், காளிதாசனிலும், இளங்கோவிலும் தன்னைக் கண்டவன். வள்ளுவனின் மொழி நுணுக்கம் கற்றவன், பங்கிம் கந்தரிலும், தாகூரிலும் வசப்பட்டு, அவர்களிடம் பிரமித்து நின்றவன். இத்தகைய இலக்கிய சாராம்சங்களை உள்வாங்கிய இவனது மேற்கூறிய பிரகடனம் ஆழ்ந்த தெளிந்த அர்த்தமுள்ளது.

இதனால் தான் கவிதையென்று வார்த்தைகளை அடுக்கிக்கட்டியவர்களும், சித்திர வித்தாரக் கவி எழுதியவர்களும் பாரதியை மூர்க்கமாகத் தாக்கினார்கள்.

அது அன்று மட்டுமா?

இதற்கு இன்னொரு விளக்கம்.

பாரதி உடைத்தெறிந்த இதே பூஞ்சணம் மீண்டும் சல்வீனா செடியாய் படரும் வேளையில், இன்றைய கவிதையுலகிற்கு பாரதியே இப்போதும் வாய்த்திருக்கின்றான். பாரதி, தமிழ் வழிப்பட்ட புதிய கவிதையை தமிழிற்கு மொழிந்தவன். வால்ட் விட்டினோடான நவகவிதைத் தொடக்கத்தை தமிழுக்கு வசன கவிதையாய் தந்தவன். இதை நூற்றாண்டு காணும் ந.பிச்சமூர்த்தி போன்றோர் இன்னொரு தளத்திற்கு முருகையன் போன்றோர் இங்கும் உயர்த்திச் சென்றனரென்பது வரலாறு.

தமிழ் உரைநடை வரலாற்றில் வீச்சான நடையைத் தந்தவன். புதிய சொற்களை ஆக்கியவன். பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை தமிழிற்கு வசப்படுத்தியவன். தாகூர் கதைகளின் மொழி பெயர்ப்பு, பின்வந்த மொழி பெயர்ப்பாளருக்கு முன் உதாரணமாயிற்று.

பாரதி என்ற பத்திரிகையாளனைப் பற்றி இப்போதே மெல்ல மெல்ல அறிய முடிகின்றது. அறிந்த விஷயங்களே பிரமிப்பைத் தருகின்றன. "கார்ட்டூன்" சித்திரங்களை முதன் முதலில் தமிழ்பத்திரிகைக்கு கொண்டு வந்தவன் பாரதி. இந்த வலிமையான அறிமுகம் மக்களின் சிந்தனையை கணப்பொழுதில் கிளர்ந்தெழச் செய்தது.

அதே சமித்திரனுக்காக பாரதி எழுதிய கட்டுரைகள் "தராசு" என்ற தலைப்பில் வெளியாகிற்று. மக்களின் உணர்வுகளை இக்கட்டுரைகள் துலக்கமாகப் பிரதிபலித்தன. இன்றும் இவற்றில் உயிர்ப்பு நிறைந்திருக்கிறது. கலைகளில் ஆர்வங்கொண்டிருந்தவன் பாரதி. இசையில் ஆர்வமும் பயிற்சியும் செறிந்தவன். இராகங்களோடு பாடலை எழுதிப்பாடியவன். இன்றைக்கும் அவனது சங்கீத ஞானத்தை அவனது பாடல்கள் ஒலிக்கின்றன. திறன்வாய்ந்த, ஜி.ராமநாதன் போன்ற இசையமைப்பாளர்கள், பாரதியின் தாளக்கட்டை அப்படியே அடியொற்றித் தான் இசையமைக்க முடிந்தது. தமிழிசை வளர்ச்சியில் பாரதி அரியபங்களிப்புச் செய்தவன்.

பாரதியின் தனிப்பட்ட வாழ்வு நெகிழ்ச்சி நிறைந்தது. மானிடத்தை முழுமையாக நேசித்தவன். வறுமையுற்று அவதிப்பட்ட வேளையிலும் தன்னோடு சேர்ந்தவர்களை, நண்பர்களை, வந்தவர்களை அன்பாக உபசரித்து உதவியவன், நீலகண்ட பிரமச்சாரி, சக்கரைச் செட்டியார் போன்றோருடனான நட்பைப் பற்றி நினைக்கின்ற போது கண்களும் மனமும் கலங்கும். அது போலவே குழந்தைகளோடு குழந்தையாய் மாறிப் போகின்ற அப்பழுக்கற்ற அபூர்வ சுபாவம்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்று கர்வத்தோடு கூறியவன், சமுதாய அவலங்கள் போக வேண்டுமென்று பாடுபட்டவன். சாதி ஒடுக்குமுறை, பெண் அடிமைத்தனத்துக்கு எதிராக தீர்க்கமான கருத்தோட்டம் வைத்தவன். "பர்ப்பனனை ஐயரென்ற காலமும் போச்சே, வெள்ளாளப் பறங்கியை துரையென்ற காலமும் போச்சே" என்ற வரிகள் பாரதியின் உறுதியான நிலைப்பாட்டைப் புலப்படுத்தும்.

பாரதி இருபதாம் நூற்றாண்டிற்கும் தேவைப்பட்டான். இப்போது இருபத்தோராம் நூற்றாண்டிற்கும் தேவைப்படுகிறான். ஏனெனில், அவன் தமிழில் ஒரு முழுமை.



காந்திப்பசு–காந்தியின் தென்னாபிரிக்கா போராட்டத்தைச் சித்திரிக்கும் கார்ட்டூன் (இந்தியா, 18.12.1909)




கௌதமன்

# நவீன ஆயுதங்களின் மீதான நம்பிக்கையை நிலை குலைய வைத்துள்ள புலிகளின் அதிரடித் தாக்குதல்கள்

கடந்த சில மாதங்களின் பின்னர், யாழ் குடாநாட்டில் மீண்டும் பாரிய மோதல்கள் நடைபெற்றுள்ளன. எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் குடாநாட்டில் பாரிய தாக்குதல்களை நடத்த புலிகள் தயாராகி வருவதாக படையினருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவல்களையடுத்து, புலிகளின் படைநகர்வை எதிர்கொள்ளத் தயாராகி வந்த படையினர், புலிகள் அந்தத் தாக்குதலை ஆரம்பிக்க முன்னர் புலிகளுக்கெதிராக பாரிய நகர்வொன்றை நடத்த முற்பட்ட போது புலிகள் மிகக் கடுமையாக பதிலடி கொடுத்துள்ளனர். யாழ். நகர எல்லையிலும் தென்மராட்சி பகுதியிலும் நடைபெற்ற பல மணிநேர மோதல்கள் குடா நாட்டையே உலுக்கி விட்டது. தினமும் நடைபெறும் மோதல்களால் ஆயிரக்கணக்கான மக்கள் தினமும் இடம்பெயர்கையில், போலி வாக்குறுதிகளுடன் வாக்குகளைத் தேடிச் சென்றுள்ள தமிழ் கட்சி வேட்பாளர்கள் இந்த மோதல்களால் பெரிதும் நடுங்கிப் போயுள்ளனர். உயிரிழப்புகள், படுகாயங்கள், சொத்தழிவுகள் என பல்வேறு அவலங்களையும் மக்கள் சந்திக்கையில், "எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம்" என்ற ரீதியில் பலவருடங்களின் பின்னர் தேர்தலுக்காக குடாநாடு சென்ற இந்தத் தமிழ் கட்சிகள், இந்த மோதல்களால் தமிழ் மக்களின் பாதுகாப்பை விட தங்களின் பாதுகாப்பு குறித்து ஆழ்ந்த கவலையடைந்துள்ளன.

கடந்த மார்ச் ம்ாத பிற்பகுதியில், ஆனையிறவு படைத்தள வீழ்ச்சியைத் தொடர்ந்து, குடாநாட்டினுள் நுழைந்த புலிகள், தென்மராட்சியின் பெரும் பகுதியை கைப் பற்றிக் கொண்டு யாழ். மாநகர எல்லையினுள் நுழைந்து நகருக்கு சமீபமான தூரம் வரை நகர்ந்திருந்தனர். இந்த நகர்வுகள் ஏப்ரல் மாத பிற்பகுதியுடன் முடிவுக்கு வரவே, அதன் பின்னர் குடா நாட்டு மோதல்களில் ஒருவித மந்தநிலை ஏற்பட்டன. எனினும் தினமும் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக சிறு சிறு மோதல்கள் இடம்பெற்றே வந்தன. பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் குடாநாட்டில் மீண்டும் பாரிய மோதல்களுக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. தேர்தலுக்கு முன்னர் புலிகள் யாழ் நகரைக் கைப்பற்று வதற்கான பாரிய தாக்குதல்களை ஆரம்பிக்கவுள்ளதாக இராணுவ புலனாய்வுத் தகவல்கள் தொடர்ந்தும் எச்சரித்து வந்தன. குடாநாட்டில் புலிகள் தாக்குதல் சமரை ஆரம் பித்ததைத் தொடர்ந்து படையினர் தொடர்ந்தும் தற்காப்புச் சமரையே நடத்தி வந்தனர். அடுத்த பாரிய தாக்குதலுக்கு புலிகள் தயாராகி வருவதாக கூறப்பட்டு வந்த போது, படையினரும் தற்காப்புச் சமருக்கு தயாராகி வந்தனர். ஆனையிறவு படைத்தள வீழ்ச்சியை தொடர்ந்து அடுத்தடுத்து பாரிய பின்னடைவுகளைச் சந்தித்து வந்த படையினர், உளவியல் ரீதியிலும் பாதிப்படைந்திருந்தனர். இவ்வேளையில் குடா நாட்டிலிருந்து படையினரை வெளியேற்றத் தயாராக விருப்பதாக இந்தியா தொடர்ந்தும் கூறி வந்ததன் மூலம், அங்கு படையினர் மோசமானதொரு நிலையில் இருப்பதாகவே வெளியுலகும் கருதியது.

இந்த நேரத்தில் பல நாடுகளிலுமிருந்து அரசு பலகோடி ரூபாவுக்கு மிக நவீன ஆயுதங்கள், இராணுவ தளபாடங்கள் குண்டு வீச்சு விமானங்களையெல்லாம் வாங்கிக் குவித்தது. இவையெல்லாம் படையினரின் மனோபலத்தை நன்கு அதிகரித்து புலிகளுக்கு எதிரான தாக்குதல்களுக்கு படையினரை மீண்டும் தயார்படுத்தி வருவதாக படையினர் தரப்பில் அறிவிக்கப்பட்டு வந்தது. அத்துடன், புதிதாக வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட ஆயுதங்களை தினமும் பயன்படுத்தி தங்களின் பலத்தை காண்பிக்கவும் முயன்றனர். குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் புலிகளின் நிலைகள் மீது குண்டு வீசுவதாகக் கூறி, "மிக்-27" ரக விமானங்களும் கிபிர் விமானங்களும் பாரிய தாக்குதல்களை தொடர்ச்சியாக நடத்தி வருகையில் எம்.பி.ஆர்.எல் எனப்படும் பல குழல் ரொக்கட் செலுத்திகளும் நிமிடத்திற்கு 30 அல்லது 40 ரொக்கட்டுகளை ஏவுகணைகளைப் போல் பொழிந்து தள்ளி, குடாநாட்டையே அதிரச் செய்து கொண்டிருந்தன. இந்தவகைப் புதிய ஆயுதங்களை முன்னெப்போதும் கண்டிராத குடாநாட்டு மக்கள் இவற்றின் தாக்குதல்களால் அதிர்ந்து அதிர்ச்சியடைந்து போயிருக்கையில், புலிகள் எவ்வேளையிலும் யாழ்ப்பாணத்தில் பாரிய தாக்குதல்களை தொடுக்கலாமென்ற செய்திகள் மக்களை மேலும், மேலும் பயமடையச் செய்தது. இந் நிலையில் குடாநாட்டில் படையினருக்கு எதிரான தாக்குதல்களுக்காக புலிகள் அணிதிரள்வதைத் தடுப்பதற்காக கடந்த சில நாட்களாக பல்வேறு படைமுகாம்களிலுமிருந்தும் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளை நோக்கி ஆட்லறிகள், பீரங்கிகள், எம்.பி.ஆர்.எல்கள், மோட்டார்கள் குண்டுகளைப் பொழிய, குண்டு வீச்சு விமானங்களும் தொடர்ச்சியாகத் தாக்குதல்களை நடத்தி வந்தன.

இவ்வேளையில், புலிகள் நகர்வெதனையும் மேற்கொள்ளாது, தங்கள் முயற்சிகளை பிற்போடுவார்கள் எனக் கருதிய படையினர், புலிகளுக்கு எதிராக ஒரே நேரத்தில் பல முனைகளிலுமிருந்து பாரிய நகர்வுகளை மேற்கொள்ளத் திட்டமிட்டு, அதற்கேற்ப கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஐந்து மணியளவில் யாழ்.. நகர புறநகர் பகுதிகளூடாகவும் தென்மராட்சியில் சில பகுதிகளூடாகவுமென ஐந்து முனைகளில் ஒரே நேரத்தில் படை நகர்வை ஆரம்பித்தனர். எம்.பி.ஆர்.எல் களும் ஆட்லறிகளும் மோட்டார்களும் நகர்வுப் படையினருக்கு உதவியாக குண்டுகளை மழைபோல் பொழிய தரைப்படையினருக்கு கவசமாகச் சென்ற யுத்த டாங்கிகளும், கவசவாகனங்களும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தின. வான் வழியூடாக கிபிர் மற்றும் விமானங்களுடன் இணைந்து தாக்குதல் ஹெலிகொப்டர்களும் குண்டுகளைப் பொழிய, படையினர் நகரத் தொடங்கினர். கொழும்புத்துறை,, அரியாலை, மட்டுவில், சரசாலை, மீசாலைப் பகுதிகளில் தாக்குதல்களை நடத்தியவாறு முன்னேற முற்பட்ட போது புலிகளும் தங்கள் பதில் தாக்குதலை ஆரம்பித்தனர். அதிகாலை 5 மணி .முதல் யாழ்புறநகர் பகுதியிலும் அங்கிருந்து சுமார் 18 மைல் தூரத்தில் தென்மராட்சியில் மும் முனைகளிலும் கடும் போர் வெடித்தது. புலிகள் வசமுள்ள பகுதிகளினுள் நுழைய படையினர் கடுமையாக முயற்சித்த போதிலும், புலிகள் கடுமையான பதிலடி கொடுத்தனர். நேரம் செல்லச் செல்ல இழப்புகள் அதிகரிக்கத் தொடங்கின. யாழ். புறநகர்ப்பகுதியில் நடைபெற்ற மோதல்களில் கொல்லப்பட்டும் காயமடைந்தவர்களையும் ஏற்றிக் கொண்டு அம்புலன்ஸ்களும் இராணுவ வாகனங்கள் பலவும் பலாலி வீதியூடாக பறக்கத் தொடங்கின. இவ் வீதியால் சென்ற வாகனங்களின் கணக்கை வைத்தே படையினருக்கு பாரிய இழப்புகள் ஏற்பட்டிருக்கலாமென பொதுமக்கள் தெரிவித்தனர்.

கொழும்புத்துறை, அரியாலை, நாயன் மார்க்கட்டு பகுதியூடாக செம்மணி நோக்கி முன்னேற முயன்ற படையினர் மீது புலிகள் எம்.பி.ஆர்.எல்கள், ஆட்லறிகள், மோட்டார் குண்டுகளை சரமாரியாக ஏவியுள்ளனர். அத்துடன் பெருமளவு படையினர் புலிகளின் கண்ணிவெடிகளில் சிக்கி கால்களை இழந்ததுடன் கொல்லப்பட்டுமுள்ளனர். படையினரை குறிப்பிட்டளவு தூரம் முன்னேற விட்ட பின்னர், அவர்கள் மீது புலிகள் தாக்குதல்களை நடத்தியுள்ளதாகவே களமுனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. 35,000 ற்கும் மேற்பட்ட படையினர் நிலைகொண்டுள்ள குடாநாட்டில் 3500 புலிகள் வரையே இருப்பதாக படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டு வருகிறது. எனினும் ஐந்து முனைகளில் ஆயிரக்கணக்கான படையினர் முன்னேற முற்பட்ட போதிலும் அவர்கள் மீது புலிகள் மிகக் கடுமையான தாக்குதலை நடத்தியுள்ளனர். மாலை வரை இந்த மோதல்கள் மிக உக்கிரமாக நடைபெற்றுள்ளது. நூறுக்கும் மேல் புலிகள் கொல்லப்பட்டும், அதைவிட அதிகமானோர் காயமடைந்துமுள்ளதாக தெரிவித்த படையினர் தங்கள் தரப்பில் 9 அதிகாரிகள் உட்பட 78 பேர் உயிரிழந்ததாகவும் 225 பேர் மிக மோசமாக காயமடைந்ததாகவும் 225 பேர் சிறு காயமடைந்ததாகவும் தெரிவித்ததுடன், முதலில் சாவகச்சேரியை தாங்கள் கைப் பற்றி விட்டதாக கூறிய போதிலும் பின்னர் அதனை விடுத்து சரசாலைக்கு கிழக்கே 2 கி.மீ தூரம் முன்னேறியதாகக் கூறியுள்ளனர். எனினும் சரசாலைக்கு கிழக்கே தான் படையினர் முன்னரும் நிலை கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்த படை நகர்வை வெற்றிகரமாக முறியடித்து ஐந்து முனைகளிலும் படையினருக்கு பாரிய இழப்பை ஏற்படுத்தியுள்ளதாக புலிகள் அறிவித்தனர். இந்த மோதல்களில் நூற்றுக்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டும் பல நூறு படையினர் படுகாயமடைந்ததாகவும் கூறிய புலிகள் படையினரின் முன்னேற்ற முயற்சிகள் அனைத்தும் முறியடிக்கப்பட்டு விட்டதாகத் தெரிவித்துள்ளனர். இந்தத் தாக்குதல்களில் காயமடைந்த படையினரை பலாலியிலிருந்து கொழும்புக்கு ஏற்றி இறக்கிய இரு "அன்ரனோவ்" விமானங்களும் புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகி சேதமடைந்த நிலையில் அவசர அவசரமாக பலாலி தளத்தில் தரையிறக்கப்பட்டன. தென்மராட்சியில் மோதல்கள் நடைபெற்ற போது வடமராட்சி, கொடிகாமம், சரசாலை, கிளாலி பகுதிகளிலிருந்து படையினருக்கு உதவியாக, மிகக் கடுமையாக ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டிருந்தன. எனினும், புலிகளும் மிகக் கடுமையாக இவற்றுக்கு பதிலடி கொடுத்து, படையினரின் அனைத்து நகர்வு முயற்சிகளையும் முறியடித்த தாகவே செய்திகள் தெரிவிக்கின்றன.



புதிதாக வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்கள் மற்றும் போர்த் தளபாடங்கள் மூலம் புலிகளுக்கு கடுமையான அடிகொடுக்கலாமென்றே படைநகர்வொன்று ஒரே நேரத்தில் பல முனைகளிலும் ஆரம்பிக்கப்பட்டது. எனினும், அனைத்து முனைகளிலும் புலிகள் மிகக் கடுமையாக பதிலடி கொடுத்து படைநகர்வுகளை முறியடித்தமை படையினர் தரப்பில் பெரும் அதிர்ச்சியையே ஏற்படுத்தியுள்ளது.

கொழும்புத்துறை மற்றும் அரியாலை கிழக்குப் பகுதியில் நிலை கொண்டு யாழ் நகரின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவிருக்கும் புலிகளை அங்கிருந்து அப்புறப்படுத்தும் நோக்கமாகவே குடா நாட்டிற்கு புதிதாக நியமிக்கப்பட் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜயேந்திரா தலைமையில் "ஒப்பறேஷன் ரிவிகிரண" என்ற பெயரில், இந்தப் படை நடவடிக்கை கடந்த ஞாயிற்றுக் கிழமையும், திங்கட் கிழமையும் மேற்கொள்ளப்பட்டது. இந்த மோதல்களில் புலிகள் தரப்பில் 230 பேர் கொல்லப்பட்டும் நூற்றுக் கணக்கானோர் காணமடைந்ததாகவும் தெரிவித்த படையினர், தங்கள் தரப்பில் 9 அதிகாரிகள் உட்பட 140 பேர் உயிரிழந்தும் 600 பேர் காயமடைந்தாகவும் கூறினர். இந்த மோதலில் தங்கள் தரப்பில் 60 பேர் கொல்லப்பட்டதாக அறிவித்த புலிகள், படையினர் தரப்பில் 200க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் கூறியுள்ளனர். புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களை மீட்பதாகக் கூறி, இந்தப் பரிய படை நடவடிக்கை இடம்பெற்ற போதும் எவ்வளவு பிரதேசத்தை படையினரால் மீட்க முடிந்தது என்பது குறித்து படை அதிகாரிகள் எதனையும் கூற மறுத்து விட்டனர். அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட ஏவுகணை ரக எம்.பி.ஆர்.எல்கள் உட்பட, பல்வேறு வகையான மின .நவீனரக ஆயுதங்களை பயன்படுத்தியும் பாரிய இழப்பு ஏற்பட்டது மட்டுமே மிச்சமாயுள்ளது. 8 மணி நேரமாக இந்த ஆயுதங்களை பயன்படுத்தி புலிகளின் நிலைகள் அனைத்தையும் தாக்கி புலிகளை களைப்படையச் செய்த பின்னர் உடனடியாகவே அவர்களுக்கு எதிராக இந்தப் படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாக படைத் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

எனினும், எதிர்பார்த்த பலனை அவர்களால் பெற முடியாது போனதுடன் இந்த வகை நவீன ரக ஆயுதங்களுக்கு முன்னால் மிகச் சிறுதொகை எண்ணிக்கையை கொண்ட புலிகளால் எப்படித் தாக்குப் பிடித்து படையினரின் ஐந்து முனைகளூடான முன்னேற்ற முயற்சிகளையும் முறியடித்தனர் என்ற கேள்வி தற்போது படைத்தரப்பில் எழுந்துள்ளது. சமர் ஆரம்பித்த நேரம் முதல் அது முடிவடைந்த பின்பும் கொல்லப்பட்ட, காயமடைந்த படையினரை ஏற்றிக் கொண்டு வட பகுதியிலிருந்து 24 மணிநேரமும் விமானங்களும் ஹெலிகொப்டர்களும் கொழும்பை நோக்கிப் பறந்த வண்ணமேயிருந்தன. கொழும்பு வீதிகளில் எந்த நேரமும் அம்புலன்ஸ்கள் ஓடிக்கொண்டிருந்தயும் காணமுடிந்தது. முதல் நாள் போரில் எதுவித பலனும் ஏற்படாததால், அடுத்த நாளும் கொழும்புத்துறை பகுதியில் படை நடவடிக்கை இடம்பெற்றது. அதுவும் பலனளிக்காத நிலையில் படைநடவடிக்கை இடை நிறுத்தப்பட்டது. அல்லது கைவிடப்பட்டதாகவே ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்த நிலைமைகளால் குறைந்தது ஆயிரத்து ஐந்நூறுக்கும், மேற்பட்ட படையினர், யுத்தமுனைகளிலிருந்து அப்புறப் படுத்தப்பட்டுள்ளனர். புலிகள் தாக்குவதற்கு முன் அவர்களைத் தாக்கி நிலை குலையச் செய்ய வேண்டும் என்ற நோக்கிலேயே ஒரே நேரத்தில் பல முனைகளிலும் படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. எனினும் படையினருக்கு எதிராக பாரிய தாக்குதலை தொடுக்கத் தயாராயிருந்த புலிகள் படையினரின் பாரிய நகர்வை எதிர்கொண்டு, அவர்களுக்கு கடுமையான பதிலடி கொடுத்து அவர்களை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியதுடன், அடுத்து பாரிய தாக்குதலொன்றை படையினருக்கு எதிராக மேற்கொள்ளலாமென்ற அச்ச உணர்வையும் ஏற்படுத்தியுள்ளனர். இதனால், தேர்தலுக்கு முன்னர் படையினருக்கு எதிராக புலிகளின் பாய்ச்சல் இடம் பெறலாமென கருதப்படுகிறது.





# “மலையகத்தில் சிறுகதைகள், கவிதைகள், அரசியல் கட்டுரைகள் வெளிவரும் அளவுக்கு ஆய்வு பூர்வமான எழுத்துக்கள் அதிகம் வருவதில்லை”

**மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்கள் இன்று இலங்கையிலுள்ள கல்வியாளர்களுள் முதன்மையானவர். கொழும்பு பல்கலைக்கழக கல்விப் பீடத்தில் சமூக விஞ்ஞானத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். ஐக்கிய அமெரிக்காவின் ஒபர்ன் பல்கலைக்கழகத்தில் சில காலம் அதிதிப் பேராசிரியாராகக் கடமையாற்றியுள்ளார். சார்க் நாடுகளின் கல்வியியல் ஆராய்ச்சிச் சஞ்சிகையின் ஆசிரியபீட ஆலோசகராகவும், ஆசிரியர்கல்வி அதிகார சபையின் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். பத்துக்கு மேற்பட்ட கல்வியியல் நூல்களையும், ஏராளமான ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார்.**

**கடந்த இரு நூற்றாண்டுகளில் இலங்கை சமூகத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த மாற்றங்களுக்கு கல்வி எந்தளவுக்கு காரணமாக இருந்தது என கருதுகின்றீர்கள்?**

ஆங்கிலேயர் காலத்தில் (1800-1848) அறிமுகம் செய்யப்பட்ட பாடசாலைக் கல்வி முறை முதலில் ஆங்கிலக் கல்விக்கு முதன்மையளித்திருந்தது. விவசாயத்துறை சார்ந்த உயர்குடியினர் ஆங்கிலம் கற்ற மத்திய, உயர் மத்திய சமூகத்தினரை உருவாக்கினர். பெருந்தோட்ட பொருளாதார முறையுடன் தோன்றிய தனியார்துறை, வர்த்தகம், வங்கித்துறை, காப்புறுதித்துறை, என்பனவற்றைக் கொண்டு நடத்த தேவைப்பட்ட ஆங்கிலம் கற்ற வகுப்பினர் ஒரு தனி சமூகமாக வளர்ச்சி பெற்றனர். 1960 இன் பின் உயர் கல்வியை சுய மொழிகளில் படித்தவர்களும், அரசாங்கத்தின் மொழிக்கொள்கை மாற்றத்தின் காரணமாக உயர் பதவிகளுக்கு தகுதி பெற்றனர். இவ்வாறு பாடசாலை முறை வழங்கிய கல்வி தகுதியை விவசாயத்தை நம்பியிருந்த ஒரு சமூக அமைப்பில் புதிய நகர்ப்புற, மத்திய வகுப்பினரை உருவாக்க காரண மாக இருந்தது, படித்து பதவி பெற வேண்டும் என்ற ஊக்கம் காரணமாகவும், உயர் கல்வி நிலை வரை இலவசக் கல்வி வழங்கப்பட்டமையாலும் பல்வேறு பின் தங்கிய கிராமப்புற கீழ்மட்ட வகுப்பினரும் உயர் பதவிகளுக்கு தகுதி பெற்றனர். நகர்ப்புற சனத்தொகையும் வளர்ச்சி பெற்று கிராமப்பகுதியில் இருந்து குடியகல்வு அதிகரிக்கத் தொடங்கியது. இக்கல்வி முறை மூலம் நாடெங்கும் விரிவான ஒரு பாடசாலை கல்வி முறை, 12 பல்கலைக் கழகங்கள்நவீன வங்கித்துறை, சுதந்திர வர்த்தக வலயம், அதற்கப்பாலும் கைத்தொழில் நிலையங்கள் என்ற முறையில் புதிய வளர்ச்சிகள் ஏற்பட்டிருந்தன. இவை நவீனமயமாக்கத்தின் சில அம்சங்கள் எனலாம். மொத்தத்தில் 200 ஆண்டுகளில் ஏற்பட்ட இவ்வளர்ச்சிக்கு கல்வி ஒரு முக்கிய பங்களிப்பை செய்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

**நீங்கள் இலங்கையின் கல்வி வளர்ச்சி யின் சில நல்ல விளைவுகளையே எடுத்துக் கூறினீர்கள். ஆனால் அண்மைக் காலங்களில் நாட்டின் கல்வி முறைபற்றிய ஏராள மான கண்டனங்கள் எழுந்துள்ளனவே. அதுபற்றி என்ன கூறுவீர்கள்?**

அது உண்மைதான், நிதி நெருக்கடி காரணமாக உயர் கல்வி வளர்ச்சி வளர்முக நாடுகளுக்கு பாதகமானது, என்றும் அதனால் விளையும் சமூக நன்மைகள் (Social Returns) மிகவும் குறைவு என வெளிநாட்டு நிறுவனங்கள் தமது ஆய்வுகளின் ஊடாக கண்டறிந்தமையால் அவை உயர் கல்விக்கு ஊக்கமளிக்கவில்லை. மொத்தத்தில் மாணவர் தொகை பாடசலை முறையில் அதிகரிக்க அதிகரிக்க கல்வித் தராதரங்களின் வீழ்ச்சியும் தவிர்க்க முடியாததாயிற்று. இவ்வம்சம் 1990களின் இறுதியிலேயே இனங்காணப்பட்டு இன்று கல்வியின் தராதர மேம்பாடு பற்றி அதிகம் பேசப்படுகின்றது. புதிய சீர்த்திருத்தங்களின் விளைவுகளை உணர இன்னும் சில ஆண்டுகள் செல்ல வேண்டும்.

**இன்று பணிபுரிகின்ற 3000 பல் கலைக்கழக விரிவுரையாளர்களில் மலையகத்தவர் ஒரு 15 பேராவது தேறுவார்களோ என்பது சந்தேகமே.**

**மலையகக் கல்வி நிலை பற்றிய உங்கள் கருத்தென்ன? அண்மைக் காலத்தில் முன்னேற்றம் கண்டுள்ளதாக சிலரால் கூறப்படுகிறதே. அது உண்மையா?**

இன்று பணிபுரிகின்ற 3000 பல்கலைக்கழக விரிவுரையாளர்களில் மலையகத்தவர் ஒரு 15 பேராவது தேறுவார்களோ என்பது சந்தேகமே, 11 இலட்சம் அரசாங்க ஊழியர்களில் (அரச, அரசசார் துறை) விரல் விட்டு எண்ணக் கூடிய மலையக தமிழர்களே உள்ளனர் என்பது பெரிய ரகசியமல்ல. உயர் மட்ட பதவிகளில் ) செயலாளர், பணிப்பாளர், வெளிநாட்டு சேவை) பத்து பேருக்கும் குறை வானவர்களே உள்ளனர். பல்கலைக்கழக அனுமதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 60 வீத மாவட்டரீதியான அனுமதி பின் தங்கிய சமூகத்தினருக்கு உதவும் என நியாயப்-படுத்தப்பட்டாலும் மலையக மக்களைப் பொறுத்தவரையில் இக் கொள்கையானது வெறும் கண்துடைப்பாகவே அமைந்-துள்ளது. ஆசிரியர் பதவிகளுக்கு தெரிவுகள் செய்யப்பட்ட போது சில பொது விதிகள் தளர்த்தப்பட்டதைத் தவிர வேறு சந்தர்ப்பங்களில் கல்வியில் பின் தங்கிய வகுப்பினர் என்ற முறையில் அவர்களுக்கு ஏதேனும் சலுகைகள் வழங்கப்பட்டதாக கூற முடியாது. 1977ம் ஆண்டுக்குப் பின்னர் மலையக பாடசாலை மேம்பாட்டுக்கென வெளிநாட்டு உதவிகள் அனுமதிக்கப்பட்டமையினாலும் எல்லா வளர்முக நாடுகளிலும் ஆரம்ப கல்வி கட்டாயமாக்கப்பட்டமையாலும் தோட்டப் பாடசாலைகள் படிப்படியாக அரசால் பொறுப்பேற்கப்பட்டு வெளிநாட்டு உதவிகள் மூலம் 50 வீதமான பாடசாலைகளுக்கு அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டன. இடை நிலைக் கல்வி, உயர்கல்வி ஆகியவற்றில் தொடர்ந்து கிராமப் புறங்களுக்கும் தோட்டப்பகுதிகளுக்கும் இருந்த இடைவெளி அப்படியே இருந்து வருகின்றது. அரசியல் தலைமைத்துவங்கள் மலையக மக்களின் கல்வி வளர்ச்சியை சாதகமாக நோக்கினாலும் அதிகார மட்டத்தில் இம்மக்களும் கல்வியில் முன்னேற வேண்டும் என்ற விடயத்தில் அதிக அக்கறை காட்டப்படுவதில்லை. பாடசாலைக் கல்வியின் உயர்மட்டத்தில் மலையக மாணவரின் பங்கேற்பு இன்னும் குறைவாகவே உள்ளது. க.பொ.த.உயர்நிலை பரீட்சைக்கு அமர்வோர் 1,80,000 மாணவர் என்றால் அதில் மலையக மாணவர் தொகை 2000மாவது இருக்குமோ என்பது ஐயத்திற்குரியது. அதிலும் பெரும்பாலானவர்கள் கலை, மற்றும் வர்த்தக துறையிலேயே பயின்று வருவது குறிப்பிடத்தக்கது.

**மாணவர்களாக இருந்த காலத்தில் சமூக உணர்வுடன் செயற்பட்டவர்கள் பலர் இன்று முகவரி அற்றவர்களாகவே போய் விட்டார்கள். இவர்கள் ஒரு காலத்தில் அரசியல், கல்வி, இலக்கியம் போன்ற பல துறைகளிலும் எழுத்து, பேச்சு என்பவற்றிலும் வல்லவர்களாக இருந்தனர்.**

**எவ்வாறாயினும் இன்று எண்ணிக்கை அளவில் பலரும் கற்று வந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. ஆசிரியர்கள், பேராசிரியர்கள், கல்வி அதிகாரிகள், வழக்கறிஞர்கள், கணக்காளர்கள், பொறியியலாளர்கள், பணிப்பாளர்கள், வைத்தியர்கள், செயலாளர்கள் என்று சிலரையேனும் காணமுடிகின்றது. மலையக சமூக மேம்பாட்டுக்கு இவர்களுடைய பங்களிப்பு எப்படியானது? தங்கள் கருத்து என்ன?**

நீங்கள் கூறியபடி, ஒரு குறிப்பிட்ட தொகையான படித்தவர்களையே இன்று இனங்காண முடியும். அவர்களுள் ஒருசிலர் மட்டும் மலையக மக்கள், அவர்தம் கல்வி மேம்பாடு, சமூகமேம்பாடு என்பவற்றில் அக்கறை கொண்டு பணி புரிந்தார்களேயொழிய அவர்கள் மத்தியில் மக்கள் மேம்பாட்டுக்கான ஒரு . காத்திரமான இயக்கம் தோன்றியதாக கூற முடியாது. ஓர் அளவுக்கு மறைந்த இரா. சிவலிங்கம் மலையக இளைஞர் மத்தியில் உணர்வினை தூண்டி ஒரு எழுச்சியை ஏற்படுத்த முயன்றார். ஆயினும் அன்றைய சூழ்நிலையில் அவருடைய பணிகளும் அவரைப் பின் பற்றிய இளைஞர்களும் மலையகத்துள் நுழைந்து ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை.

மலையகத்தில் சிறுகதைகள், கவிதைகள், அரசியல் கட்டுரைகள் வெளிவரும் அளவுக்கு ஆய்வு பூர்வமான எழுத்துக்கள் அதிகம் வருவதில்லை. படைப்பிலக்கிய ஆர்வலர்கள் வளர்ந்துள்ள அளவுக்கு சமூக விஞ்ஞானிகள் உருவாகவில்லை. மாணவர்களாக இருந்த காலத்தில் சமூக உணர்வுடன் செயற் பட்டவர்கள் பலர் இன்று முகவரி அற்றவர்களாகவே போய் விட்டார்கள். இவர்கள் ஒரு காலத்தில் அரசியல்,கல்வி, இலக்கியம் போன்ற பல துறைகளிலும் எழுத்து, பேச்சு என்பவற்றிலும் வல்லவர்களாக இருந்தனர். சிறந்த அரசியல் நோக்கும் அவர்களிடம் இருந்தது. மலையக தொழிலாளர் என்றில்லாது உலகளாவிய தொழிலாளர்களின் மேம்பாட்டிலும் கூட, அவர்களுக்கு அக்கறை இருந்தது. ஆனால் அவர்களில் பலர் இன்று எங்கு சென்றார்கள் என்றே தெரியாது. மலையக அரசியல் இயக்கங்கள் வாளர்ச்சியடைந்து சென்ற ஒரு குறிப்பிட்ட முறைமையினால் இவர்கள் உள்வாங்கப்படவில்லை. இவர்கள் சமூகத்தில் இருந்து ஒதுங்கியதற்கு இத்தகைய போக்குகளும் ஒரு காரணமாக இருக்கலாம். மலையக அரசியலில் இவர்களுடைய பேச்சுக்கு இடமில்லாமல் போனதும், இவர்களுடைய சமூகம் நோக்கிய பங்களிப்பு இல்லாமல் போனதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். எனினும் மலையகத்தில் படித்தவர்கள் உண்மையில் ஒதுங்கி வாழ்கின்றனரா? அவ்வாறாயின் அதற்கான அரசியல், சமூகவியல் காரணிகள் யாவை? என்பது நுணுகி ஆராயப்பட வேண்டிய ஒரு விடயமேயாகும்.

**மலையகத்தில் படித்தவர்கள் உண்மையில் ஒதுங்கி வாழ்கின்றனரா? அவ்வாறாயின் அதற்கான அரசியல், சமூகவியல் காரணிகள் யாவை? என்பது நுணுகி ஆராயப்பட வேண்டிய ஒரு விடயமேயாகும்.**

**மலையக அரசியல், தொழிற்சங்க அமைப்புகளில் மலையக படித்த இளைஞர்களின் பங்களிப்பும், ஈடுபாடும் அருகியே காணப்படுகிறது. படித்த இளைஞர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்ற குறை பாடும் நிலவி வருகிறது. இது பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

மலையக்த்தில் பொதுவாகவே அரசியலில் ஒரு சாரார் ஏகபோக உரிமை செலுத்துகின்றார்கள்; படித்த இளைஞர்களுக்கு அரசியலில் பங்குகொள்ள முடியாத நிலை உள்ளது. அவர்கள் புறக் கணிக்கப்படுகின்றார்கள் என்ற முறைப்பாடு நீண்டகாலமாக இருந்து வருவதொன்று. இளமையிலேயே தொழிற்சங்க இயக்கத்தில் சேர்ந்து அதில் வளர்ந்தவர்கள் அதனையே வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டவர்களுடன் படித்தவர்கள், பட்டம் பெற்ற பின்னர் சென்று இணைந்து பணிபுரிவதில் இயல்பாகவே ஒரு சிக்கல் இருக்கின்றது.அதிகம் படித்தவர்கள் துரிதமாக அரசியலில் முன்னேறுவதால் தமக்குரிய இடம் பறிக்கப்படலாம் என மற்றவர்கள் நினைப்பதில் ஆச்சரிய மொன்றுமில்லை. ஆனால் இன்று எத்தகைய அரசியல் இயக்கமாயினும் அதற்கு படித்தவர்களின் பங்களிப்பு தேவைப்படுகின்றது. என்பதே உண்மை. இன்று எல்லா அரசியல் கட்சிகளிலுமே இந்தநிலைமை தோன்றியுள்ளதை நாம் காண முடிகின்றது. மலையக அரசியல் தொழிற்சங்க இயக்கங்கள் கூட இன்று படித்தவர்களினுடைய பங்களிப்பு தமக்கு தேவை என்ற உணர்வுடன் செயற்பட்டு வருவதை என்னால் அனுபவபூர்வமாக எடுத்துக் கூற முடியும்.

இருசாராரும் வழமையான சிந்தனையின் அடிப்படையில் எதிர் போக்குகளில் செல்வதில் பயனில்லை. படித்தவர்கள் தனிப்பட்டமுறையில் பங்களிப்பைச் செய்வதைவிட அரசியல் இயக்கங்களினூடாக செயற்பட்டு சமூக மேம்பாட்டுக்கு உதவ முடியும். இவர்களை போட்டியாளர்களாகக் கருதாது இவர்களுடைய துணையை நாடி இவர்களைப் பயன்படுத்திக் கொள்வது அரசியல் இயக்கங்களின் திறமையைப் பொறுத்தது. நடைமுறையில் கடந்த இரு தசாப்தகாலத்தில் மலையகத்தைச் சேர்ந்த பல படித்தவர்கள், பேராசிரியர்கள் பலதுறைகளில் அரசியலாளர்களுக்கு ஆலோசனைகளை வாங்கி வந்துள்ளார்கள். அரசியலாளர்களும் அவர்களுக்கு உரிய கௌரவத்தை வழங்கி வந்துள்ளார்கள். ஒரு வகையில் இது அண்மைக்கால நிகழ்வு என்றும் கூறமுடியும். எனது நோக்கில் குறிப்பாக இன்று மலையக அரசியல் இயக்கங்கள் கல்வியின் முக்கியத்துவத்தையும் கற்றவர்களின் தேவையையும் உணர்ந்தே செயற்படுவதாக கூறமுடியும். இந்நிலையில் வழமையான சந்தேகங்கள், முரண்பாடுகள் என்பவற்றை தொடர்ந்து எடுத்துச் செல்லாது இரு சாராரும் இணைந்து பணியாற்றுவதற்கான வாய்ப்புகளைப்பற்றி சிந்திக்க வேண்டும். உண்மையில் அறிவு யுகத்தில், தகவல்யுகம் எனக் கூறப்படும் நவீன யுகத்தில் இசைந்து வாழ வேண்டுமாயின் அரசியலாளர்கள் கற்றவர்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்தே செயற்பட வேண்டும்.

*பேட்டி கண்டவர் - திரு. வே. சண்முகராஜா.*

# தென்பகுதி வாக்குகளுக்காக நடைபெற இருக்கும் வடபுல படைநகர்வு

நிவேதா

இன்று எல்லோர் வாயிலும் அசிங்கமாகவும், அவலட்சணமாகவும் உச்சரிக்கப்பட்டு வரும் சொற்பதம் தேர்தல். ஆனால் இதற்கு பல அரசியல் கட்சிகளும் கொடுக்குக் கட்டிக்கொண்டு தேர்தல் களத்தில் குதிக்க தங்களை தயார்படுத்திக் கொள்கின்றனர். மக்கள் விரும்பியோ விரும்பாமலோ தேர்தலை நோக்கி தள்ளப்பட்டுள்ளன. அதாவது அடுத்த சில வருடங்களுக்கு தமது பிரதிநிதிகளாக குத்தகைக்கு சிலரை பாராளுமன்றத்திற்கு அமர்த்தவுள்ளனர்.

மரணிக்கும் உயிர்களைப் பற்றியும் கவனிக்காது, பிணம் தின்ன கழுகுகள் போட்டி போடுவது போன்று இத்தேர்தல் அமைந்துள்ளது. ஜனநாயகம் என்ற சொற்பதத்தின் கீழ் நடைபெறும் இத்தேர்தல், உண்மையாகவே ஜனநாயக சொற்பதத்தை அனுசரித்தா நடைபெறப் போகின்றது என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்த வண்ணம் காணப்படுகின்றது. மக்களைப் பற்றி எள்ளளவும் கருத்தில் கொள்ளாமல் கரிசனை கொள்ளாமலும் இருந்து தமக்கும் தாமே தலைவர் எனக் கூறிக் கொள்ளும் தலைவர்கள், இன்று மக்களுக்காக மக்களுக்காக என குரல் உரைத்து மார்பைத் தட்டிக் கதைக்கின்றனர். இவர்கள் செய்த அட்டூழியங்களுக்காக அபயக் குரல் எழுப்பியும், மார்பைத் தட்டி அழுத மக்கள் இன்று மௌனமாக சிரிக்கின்றனர். மக்களின் பிரச்சனைகளைக் கேட்க அந்த மாநாடு, இந்த சேவை என நடத்திக் கொண்டு அதனைத் தீர்ப்பதற்கு சிவில் அதிகாரிகள் சந்திப்பு, இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடல் என நாளொரு பொழுதும் சந்திப்புகளை மேற்கொள்கின்றனர் இத்தலைவர்கள்.

இந்த வகையில், பொதுத் தேர்தல் எப்படி அமையப் போகின்றது. எத்தனை தலைவர்கள் உருவாகப் போகின்றார்கள். எவ்வளவு ஜனநாயக கொலைகள் நடக்கும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். தற்போது ஜனநாயகத்தின் பேரில் கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இரண்டு வேட்பாளர்கள் தாம் போட்டியிலிருந்து ஒதுங்கிக் கொள்வதாக கட்சித் தலைவருக்கு கடிதம் எழுதி அதிலிருந்து ஒதுங்கியும் விட்டனர். தேர்தல் ஆரம்பமே இவ்வாறிருக்கும் போது முடிவு எவ்வாறிருக்கும். இதுவும் ஒரு ஜனநாயகம் தான் என மக்கள் மௌனமாக முணுமுணுக்கின்றனர்.

ஒரு கட்சியின் செல்வாக்கைப் பெற்றுக் கொள்ளும் வகையிலும், அக்கட்சியினால் தாம் இலாபம் அடையும் பொருட்டும் ஒரு பாடசாலை அதிபர் இவ்வாறு ராஜினாமா செய்த வேட்பாளரை வற்புறுத்தி உள்ளதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆனந்தசங்கரி நேரடியாக தெரிவிக்கின்றார். யாழ் தேர்தல் மாவட்டத்தில் தமிழர் விடுதலை கூட்டணி சார்பில் போட்டியிட இருந்த வேலாயுதம் சின்னத்தம்பி, லோகநாதபிள்ளை தம்பு ஆகிய இருவருமே விலகிக் கொண்டவர்களாவர்.

இதே சமயம், இப்பாடசாலை அதிபர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மேலும் சில உறுப்பினர்களுக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்களின் வீடுகளுக்கும் சென்று முன்னர் ராஜினாமா செய்தவர்களின் கடிதங்களை காண்பித்து, தேர்தலில் இருந்து ஒதுங்கிக் கொள்ளுமாறும் இல்லாவிட்டால் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்து வருகின்றார். நட்பு ரீதியாக விலகுமாறு கேட்கும் இவர், எதிர்காலத்தில் புலிகளால் ஆபத்து வரும் என்று கூட மிரட்டியிருக்கின்றார். மிரட்டல் போன்றும் மறுபுறம் ஆபத்துக்கு உதவும் நண்பன் போன்றும் இவர் செயற்பட்டு வருகின்றார். ஆனால், எந்தக் கட்சிக்காக இவர் வேண்டுகோள் விடுக்கின்றார் என்று அறிந்து கொள்வது கஷ்டமாக உள்ளது. ஏனெனில், இவர் எல்லாக் கட்சிக்கும் முகஸ்துதி பாடித் திரிபவர். தனது வருமானத்தில் கண்ணும் கருத்துமாய் நிற்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதின்நான்கு அரசியல் கட்சிகளும், ஆறு சுயேட்சைக் குழுக்களும் தேர்தல் களத்தில் குதிக்கின்றன. சுயேட்சையை பொறுத்தமட்டில் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சி இரண்டாக பிளவுபட்டதைத் தொடர்ந்து, அக்கட்சியின் இரண்டு அணிக்கும் சின்னம் பாவிக்கத் தடை விதிக்கப்பட்டதை தொடர்ந்து இரு அணிகளும் சுயேட்சையாக போட்டியிடுகின்றன. ரெலோவைப் பொறுத்த வரையில் தாம் புத்திஜீவிகளையும், சமூகப் பெரியார்களையும் உருவாக்க வேண்டுமென சுயேட்சையாக போட்டியிடுகின்றன.

பொதுசன ஐக்கிய முன்னணியை பொறுத்தவரையில், யாழ். மாவட்டத்தில் தமக்கு ஆட்சியை அமைக்க இதுவரை உதவியதன் பேரில், தமது கட்சி யாழ் மாவட்டத்தில் போட்டியிட மாட்டாது என உறுதி வழங்கியதன் கீழ் அக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வேல்முருகு தங்கராசா கட்சியின் தலைமைப் பீடத்தின் ஆசீர்வாதத்துடன் தேர்தலில் சுயேட்சையாக போட்டியிடுகின்றார்.

முழுமையான சிங்கள வேட்பாளரைக் கொண்ட ஒரு சுயேட்சை அணியும், வட பகுதியில் இடம் பெயர்ந்த முஸ்லீம்களின் நலனை நோக்கமாக கொண்ட ஓர் முஸ்லீம் குழுவும் சுயேட்சையாக இத்தேர்தல் களத்தில் நிற்கின்றனர்.

அரசியல் கட்சியை பொறுத்தமட்டில், தமிழ் வேட்பாளர் ஒருவரும் இல்லாத கட்சிகள் கூட யாழ். தேர்தல் மாவட்டத்தில் இம்முறை போட்டியிடுகின்றன. மக்கள் சேவை செய்ய ஓடோடி வந்த இக்கட்சிகளை பார்த்து மக்கள் ஆச்சரியத்தில் ஏங்கி நிற்கின்றனர். மக்கள் தான் பாவம். யாரிடம் சென்று இந்த நேரத்தில் உதவி கேட்பது என்று தெரியாது திரிசங்கு நிலையில் இருக்கின்றனர். தேர்தல் வேட்புமனு தாக்கல் செய்ய கொழும்பிலிருந்து வந்த கட்சியும் தலைமை வேட்பாளரின் மனைவி, பிள்ளைகள் இங்கிருந்த போதும் அவர்களை போய் பார்க்க கூட சுதந்திரம் வழங்கவில்லை. ஆனால் தேர்தல் மட்டும் சுதந்திரமாக நடக்கும் என்கின்றார்கள்.

சுமார் 15 வருட காலமாக, தமது குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சனையைத் தீர்க்க முடியாமல் கொழும்பில் அஞ்ஞாத வாசம் பூண்ட இவர், இன்று இவர் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு தமிழ் மக்கள் தமக்கு அதிகாரத்தை வழங்க வேண்டுமென அவ் அரசியல் கட்சியின் தலைமை வேட்பாளர் வேண்டுகோள் விடுக்கின்றார். பிள்ளையின் பெயரைக் கூட மறந்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இவர்கள் தான் ஜனநாயகப் பிரதிநிதிகள். தமது குடும்பப் பிரச்சினையை தீர்க்க முடியாத இவர்கள் எவ்வாறு நாட்டுப் பிரச்சினையை தீர்க்கப் போகிறார்கள்.

வயோதிப மடங்களை திறந்து வைப்பதனாலோ, அனாதை விடுதிகளுக்கு உதவி செய்வதன் மூலமோ அரசியல் செல்வாக்கினை பெற்றுக் கொள்ள முடியாது. அனாதைப் பிள்ளைகளை உருவாக்காமல் இருக்க வேண்டும். வீட்டிலுள்ள வயோதிபர்களுக்கான உதவிகளை மேற்கொள்ள வேண்டும்.

தேர்தலை முன்னிட்டு யாழ்ப்பாணத்தை சேர்ந்த பல வர்த்தகர்கள் யாழ். குடா நாட்டிலிருந்து வெளியேறி விட்டனர். சிலர் வெளியேற ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றனர். தேர்தல் பிரச்சாரத்துக்காக துண்டுப் பிரசுரங்கள் சுவரொட்டிகள் என்பன அச்சிடுவதற்கும். மதுபானம், சாறி, சேட், வேட்டி மற்றும் அலங்கார கொடிகள், பதாதைகள், கட்டவுட்டுகள் கட்டுவதற்காக, மக்களை கவருவதற்காக மக்களை சுரண்ட முற்படுகின்றனர்.

சென்ற தேர்தல் காலங்களை கருத்தில் கொண்டு, ஏனைய பகுதிகளில் நடந்த கடத்தல்கள் நடக்கலாம் என்ற பய பீதி காரணமாக இவ் வர்த்தகர்கள் வெளியேறுகின்றனர். படுத்த பாய்க்கு சொல்லாமலே ஊர் விட்டு ஊர் செல்கின்றனர்.

தற்போது வாக்களிக்கூடிய வகையில் இருக்கும் வாக்காளர்களின் விகிதாசாரத்தில் வேட்பாளர்களை வகுத்தால், சில ஆயிரம் வாக்குகள் கூட இவர்களுக்கு கிடைக்குமா? என்பது ஆச்சரியமான விடயமாக இருக்கின்றது. மக்களுக்கு முதலாவது வாக்களிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படுமா? என்ற கேள்வி ஏற்படுகின்றது.



யுத்தத்தில் வெற்றி கிடைப்பதன் மூலம் பொது சன ஐக்கிய முன்னணி ஆட்சிபீடம் ஏற வாய்ப்பளிப்பதுடன் யாழ். தேர்தல் மாவட்டம் முழுமையாக குழப்பிவிடுவதன் மூலம் இன்று அரசாங்கத்தை நம்பி இங்கு போட்டியிடும் கட்சிகளுக்கு சில வாக்குகள் கிடைக்கும் சாத்தியம் அதிகம். இவர்கள் 1994ம் ஆண்டைப் போல ஓர் கேலியான தேர்தலை நடத்தாதிருந்தால் அதுவே போதுமானது.

யாழ். தேர்தல் மாவட்டத்தை பொறுத்த மட்டில் தற்போது வாக்களிக்கக்கூடிய வகையில் இருக்கும் வாக்காளர்களின் விகிதாசாரத்தில் வேட்பாளர்களை வகுத்தால், சில ஆயிரம் வாக்குகள் கூட இவர்களுக்கு கிடைக்குமா? என்பது ஆச்சரியமான விடயமாக இருக்கின்றது. மக்களுக்கு முதலாவது வாக்களிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படுமா? என்ற கேள்வி ஏற்படுகின்றது. இதன் அடிப்படையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், செப்டெம்பர் 6ம் திகதி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் இதனை மிகமிக தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளது.

அதாவது போர் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் மக்கள் இடம் பெயர்வு நடைபெறும் போது மக்கள் எவ்வாறு வாக்களிக்க முடியும். எனவே, தற்போது நடைபெறும் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும். உக்கிர சண்டை ஒன்று ஏற்படும் போது ஓர் அசாதாரண நிலை ஏற்படும். இந்த அசாதாரண சூழ்நிலையினால் 1994ம் ஆண்டு பொதுத்தேர்தலை போன்று இதுவும் ஆகிவிடக் கூடாது, என்றும், ஆகவே சண்டையை உடன் நிறுத்துமாறும் ஜனாதிபதிக்கு அவசர கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தேர்தலை முன்னிட்டு யாழ் குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பார்ட்டிலிருக்கும் ஒரு சிறு பகுதியைத்தன்னும் தாம் படைநடவடிக்கை மூலம் கைப்பற்றிவிட வேண்டும் எனவும் இதன்மூலம் தென்பகுதி வாக்குகளில் கணிசமானவற்றை இலகுவில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அரசாங்கம் கருதுகின்றது. எனவே சென்ற வாரம் நடைபெற்றதைப் போன்று "ஒப்பரேஷன் தேர்தல்" என்ற மட்டுப்படுத்தப்பட்ட ராணுவ நடவடிக்கை இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப் படவிருக்கிறது.

சமாதானத்துக்கான யுத்தம் எனக் கூறிக் கொள்ளும் அரசாங்கம் ஏன் தேர்தலுக்கான யுத்தத்தை நடத்தக் கூடாது, என்ற கேள்வி கூட நியாயமானதுதான். இந்த வகையில் தமக்கு சாதகமான ஓர் பலனை ஏற்படுத்துவதில் இன்று அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.

சென்ற வாரம் நடைபெற்ற "ஒப்பரேஷன் தேர்தல்" படையினருக்கு பாரிய இழப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், இதனை இப்பொழுது வெளிக்கொண்டு வர முடியாது. இந்த இழப்பை ஈடுசெய்யும் வகையில் மீண்டும் ஒரு இராணுவ நடவடிக்கை மிக விரைவில் நடத்தப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நடவடிக்கையின் போது பாரிய இடப் பெயர்வை மக்கள் சந்திக்க வேண்டிவரும் என்றும், இதனுடன் தொடர்பு கொண்டிருக்கும் சில தொண்டர் நிறுவனங்கள் உடன் சேவைக்கு தயாரான நிலையில் இருக்குமாறும் அறிவுறுத்தல் தகவல்களை சர்வதேச மனித உரிமைகள் நிறுவனங்களின் பிரதிநிதிகள் வெளியிட்டுள்ளன.

யுத்தத்தில் வெற்றி கிடைப்பதன் மூலம் பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சிபீடம் ஏற வாய்ப்பளிப்பதுடன் யாழ். தேர்தல் மாவட்டத்தை முழுமையாக குழப்பிவிடுவதன் மூலம் இன்று அரசாங்கத்தை நம்பி இங்கு போட்டியிடும் கட்சிகளுக்கு சில வாக்குகள் கிடைக்கும் சாத்தியம் அதிகம். இவர்கள் 1994ம் ஆண்டைப்போல ஓர் கேலியான தேர்தலை நடத்தாதிருந்தால் அதுவே போதுமானது.

விரும்பியோ, விரும்பாமலோ அரசும் அதனுடன் இயங்கும் தமிழ்க் கட்சிகளும் யுத்தத்தினால் தமக்கு தவிச்ச முயல் அடிக்கக் கிடைக்குமென எதிர்பார்த்து நிற்கின்றனர். இம்முறையும் தமக்குத் தாமே வாக்குகளை அளித்துப் பாராளுமன்றம் செல்லாமல், மக்களினால் அளிக்கப்படும் நேர்மையான வாக்குகள் மூலம் செல்ல வேண்டும் என்று விரும்புகின்றனர்.

# திகாமடுல்ல தேர்தல் மாவட்டமும் மூன்று முஸ்லிம் பிரதிநிதித்துவங்களும்

எம்.எம்.எம்.நூறுல்ஹக்



எதிர்வரும் ஒக்டோபர் 10ந் திகதி நடைபெறவுள்ள 11வது பொதுத்தேர்தலின் போது திகாமடுல்ல மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகை ஏழாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்திலாவது இம்மாவட்டத்திலிருந்து தெரிவாக வேண்டிய மூன்று முஸ்லிம் பிரதிநிதித்துவங்களும் காப்பாற்றப்படுமா? என்பதை அலசுவதே இக்கட்டுரையின் இலக்காகும்.

விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைமையின் அறிமுகத்தின் பின்னர், 1989, 1994 ஆகிய காலங்களில் நடந்தேறிய இரு நாடாளுமன்றத் தேர்தல்களிலும் முஸ்லிம் உறுப்பினர்களின் தெரிவு, முறையே 1ம், 2ம் மாகவே அமைந்தன. இந்நிலைக்கான காரணங்களை இன்று தெளிவாக நிறுத்துப்பார்த்து, அதற்கான மாற்றீட்டு முறைமைகளை முன்வைக்கவும், கடைப்பிடிக்கவும் நல்லதொரு சந்தர்ப்பமாகவும் இருக்கின்றது.

அதுமட்டுமன்றி, முன்னைய இரு தேர்தல்களிலும் காணப்படாத இரு அம்சங்கள் இம்முறையே தேர்தலில் இம்மாவட்டம் பெற்றிருப்பதானது, "மூன்று முஸ்லிம் பிரதிநிதித்துவங்களை தேர்ந்தெடுப்பதை இலகுபடுத்தியுள்ளது" என்ற அரசியல் அவதானிகளின் அபிப்பிராயங்களையும் பரவலாகக் காணலாம். அவ்விரு அம்சங்களும் பின்வருவனவாகும்.

■ தேர்ந்தெடுக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆறிலிருந்து ஒன்றால் அதிகரிக்கப்பட்டு ஏழாக அமைந்திருப்பது.

■ இம்மாவட்டத்தில் ஐ.தே.கட்சி இரு சிங்கள வேட்பாளர்களை நிறுத்துவதென்ற மட்டுப்படுத்தலை கடைபபிடிக்க உத்தேசித்திருப்பது.

இந்தச் சூழலில் மூன்று முஸ்லிம் பிரதிநிதித்துவங்களை தெரிவு செய்வதிலிருந்து தவறுவதும், அதற்கான வாய்ப்பை நழுவச் செய்யும் வகையில் எந்தக் கட்சியின் முஸ்லிம் உறுப்பினர்கள் நடந்து கொண்டாலும் அது மாபெரும் வரலாற்றுத் தவறாகவும், சமூகத் துரோகமாகவும் வரலாறு பதித்துவைக்கும் என்பதிலும் வேறு கருத்திருக்காது.

எது எப்படி இருப்பினும், ஒரே கட்சியிலிருந்து மூன்று முஸ்லிம் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பது விதாசாரத் தேர்தல் முறையின் கீழ் மிகச் சிரமமான ஒரு காரியம் மட்டுமன்றி, நடைமுறைச் சிக்கல்கள் நிறைந்ததொன்று என்பதை கடந்த இரு பாராளுமன்ற பொதுத் தேர்தல்களும் நமக்கு பாடம் புகட்டி விட்டன.

இம்மாவட்ட முஸ்லிம் மக்கள் மத்தியில் எவ்வளவு பிரசாரங்களை விரிவுபடுத்தி, தெளிவூட்டினாலும், 25,000லிருந்து 30,000க்கு இடைப்பட்ட வாக்குகளை ஐ.தே.கவுக்கு அளிப்பதிலிருந்து தடுத்துவிட முடியாதென்ற பேருண்மையை இவர்கள் வெளிப் படுத்தியுள்ளனர். இந்நிலைப்பாடு இருக்கும் வரை, ஒரே கட்சியிலிருந்து ஒன்றாகவே அமையலாம்.

ஐ.தே.கவுக்கு முஸ்லிம்கள் வாக்களிப்பார்கள் என்பதை கடந்த 1994 பொதுத் தேர்தல் 1999 இல் நடைபெற்ற ஜனாதிபதித் [illegible]

நிரூபித்துள்ளனர். இந்நிலையில், கடந்த பொதுத் தேர்தல் போன்று, ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் தனித்து போட்டியிடுமாயின் மூன்று பிரதிநிதித்துவங்களை ஐ.தே.க கைப்பற்றும் சாத்தியங்களே உள்ளன. இந்நிலையில் அதிகரித்த வாக்குகளைப் பெற்ற கட்சி என்ற வகையில் பெறும் ஒரு ஆசனத்தினால் ஒரு முஸ்லிம் பிரதிநிதியை தேர்ந்தெடுக்க வாய்ப்பு ஏற்படும். இந்நிலையானது, ஐ.தே.க, கடந்த 1994 பொதுத் தேர்தலின் போது பெற்ற மொத்த வாக்குகளான 78, 767 தொடக்கம் 88,000 வரையான வாக்குகளைப் பெறும் வரை, இதே நிலை அமையும்.

அதே நேரம், ஸ்ரீ.ல.மு காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டு 60,500 தொடக்கம் 75,000 வரையான தொகைவாக்குகளை பெறுவதன் மூலம் இருபிரதிநிதிகளைத் தெரிவுசெய்யலாம். கடந்த பொதுத் தேர்தலின் போது, ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் பெற்றவாக்குகளை விட, அதிகமாகப் பெறும் வாய்ப்பில்லை என்பதே பெரும்பாலான அரசியல் அவதானிகளின் கணிப்பீடாகவுள்ளது.

"யார்குத்தினாலும் அரசியானால் சரி" என்ற நாட்டு மொழிக்கொப்ப, எந்த வகையிலோ மூன்று முஸ்லிம் பிரதிநிதிகளை வாக்களிப்பின் மூலம தெரிவு செய்து கொள்ளும் சந்தர்ப்பம் இம்முறை இங்கு தனித்து இருக்கிறது என்பதை அரசியல் அறிவுள்ள எவரும் மாற்றுக் கருத்தின்றி ஏற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அதேநேரம் 25.08.2000ம் அன்றைய நாளிதழ்களில் வெளியிடப்பட்ட ஊர்ஜிதம் செய்யப்படாத செய்தியின் படி, "ஸ்ரீ.ல.மு காங்கிரஸ், பொ.ஐ.ஐ.முன்னணியுடன் இணைந்து கதிரைச் சின்னத்தில் போட்டி இடுவதாகவும், அதன் வேட்பாளர் பட்டியலில் நாலு சிங்களவர். நாலு முஸ்லிம்கள், இரண்டு தமிழர்கள் இடம்பெறுவர்" என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இச்செய்தியின் பிரகாரம் நிகழுமாயின் இம்முறையும் பழைய குருடி கதவைத் திறவடி" என்பதற்கொப்ப மூன்று பிரதிநிதித்துவம் காப்பாற்றப்படாது போகலாம்.

ஏனெனில், பொ.ஐ.ஐ.மு வேட்பாளர் பட்டியலில் இடம்பெறும் நான்கு சிங்கள அபேட்சகருள் மூவர் 30,000 தொடக்கம் 35,000 வரைக்கான விருப்பத் தெரிவு வாக்குகளைக் கொண்டியங்கும் சாத்தியம் அதிகமாக அமையும். அதேவேளை அமைச்சர் அஷ்ரப் தவிர்ந்த ஏனைய மூவரும் 22,000 தொடக்கம் 27,000 [illegible]


பெறும் சாத்தியமே இங்குண்டு. இதற்கு, கடந்த 1989, 1994 அகிய இரு பொதுத் தேர்தல்களின் விருப்பு வாக்குகள் சான்றாகும்.

(இதில் ஜனாப் எம்.எச் சேகு இஸ்ஸடீன் 1989 இல் பெற்ற 39516 விருப்புவாக்குகளை விதிவிலக்காகவே கொள்ள வேண்டும். அவர் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸிலிருந்த போது அமைச்சர் அஷ்ரப்பிற்கு அடுத்தவராவார், கட்சியின் பின்னைய தலைவர் என்ற மதிப்பும், மரியாதையும், கருத்தும் மக்களிடம் இருந்தது. இந்நிலையில் இன்று ஸ்ரீ.ல.மு.கா யாரும் கருதப்படவில்லை என்பதும் அஷ்ரப்பின் தலைமைத்துவத்தின் பின்னர் அடுத்தவர் என்று யாரையும் குறிப்பிடும் வழக்கத்தையும் வெளிப் படுத்துவதாக இல்லை.

பொ.ஐ.ஐ.மு கடந்த 1999இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது பெற்ற 149,593 வாக்குகளை வைத்து நோக்கின், இணைந்து தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் ஏறத்தாழ 124,500 வாக்குகளைப் பெறும் சாத்தியமிருப்பதால் நான்கு பிரதிநிதிகளைப் பெறவாய்ப்பு இருக்கிறது. ஆகக் குறைந்தது, 110,000 [illegible]

ஏற்படும். இதனால் மூன்று சிங்களவர், ஒரு முஸ்லிம் என்ற அடிப்படையில் உறுப்பினர்கள் தெரிவாகலாம்.

இந்நிலை தோன்றிவிட அமைச்சர் அஷ்ரப் வழிவிடுவாரானால், ஐ.தே.க. வேட்பாளர் பட்டியலில் இம்முறை இரு சிங்கள வேட்பாளர்களை இடம்பெறச் செய்ய வேண்டும் என்ற ஏற்பாட்டினை எம்.எம்.முஸ்தபா (மயோன்) செய்திருப்பதாகக் கூறிய காலத்தில், அமைச்சர் அஷ்ரப் "இரு சிங்கள பாராளுமன்ற உறுப்பினர் தெரிவை ஊர்ஜிதப்படுத்திய நடவடிக்கையே இது" வென விமர்சித்த விமர்சன கணைகள் அமைச்சர் அவர்களுக்கும் பொருந்தி விடக் கூடியதாக மாறிவிடும். இந்நிலையிலிருந்து விடுபட்டு, இணைப்பிலும் நன்மையைப் பெற



வழிசெய்யும் ஒரு சூழலும் இருக்கின்றது அதே நேரம் ஐ.தே.க சார்பில் எந்த முஸ்லிம் பிரதிநிதியும் தெரிவாகாத நிலையினை தோற்றுவிக்கும். இந்நிலையானது பேரினவாதக் கட்சிகளின் சலசலப்பை முஸ்லிம்கள் 80% வீதம் தூர விலக்கும் எதிர்காலத்தையும் உருவாக்கும்.

இந்நிலையினை இங்கு நிரந்தப் படுத்துவதுடன் மூன்று, முஸ்லிம் பிரதிநிதிகளை ஒரே கட்சியிலிருந்து தெரிவு வாக்குகள் மூலம் தேர்ந்தெடுக்கவும் முடியும். அதற்கு அமைச்சர் அஷ்ரப் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைவிட ஜனாதிபதியின் வாக்குறுதிகளில் பேணப்படும் நேர்மைத் தன்மையிலேயே இது தங்கியுள்ளது. அதாவது பொ.ஐ.ஐ.முயுடன் இணைந்து ஸ்ரீ.ல.மு.கா போட்டியிடுவதாயின் அதன் வேட்பாளர் பட்டியலில் ஒரேயொரு சிங்கள வேட்பாளர் இடம்பெறல் வேண்டும்.

இது வெளிப்பார்வையில் பிழையான நிபந்தனை போன்று தெரிந்தாலும் சற்று ஆழமாக நோக்கின் இதுவொரு [illegible]

கூடியதே. பொ.ஐ.ஐ.முன்னணி இம்மாவட்டத்தில் தனித்து போட்டியிட்டால் கிடைக்கக் கூடிய ஆசனம் ஒன்று. அதேவேளை, ஐ.தே.க மூலம் இரு சிங்கள பாராளுமன்ற உறுப்பினர் தெரிவாவது நிச்சயம். ஆகவே இங்குவாழும் சிங்கள மக்களுக்கு கிடைக்க வேண்டிய மொத்த மூன்று பிரதிநிதிகளும் கிடைத்து விடுகின்றனர். முஸ்லிம்களுக்குக் கிடைக்க வேண்டிய மூன்று பிரதிநிதிகளும் ஒரேகட்சியிலிருந்து கிடைக்கும் பேற்றைப் பெறும்.

எக்காரணம் கொண்டும் ஐ.தே.கவுடன் இணைவதோ, ஆதரவு வழங்குவதோ இல்லை என்று அமைச்சர் அஷ்ரப் எடுத்துள்ள தீர்மானத்திற்கும். ஜனாதிபதியை பலப்படுத்துவதிலிருந்து விலகுவது இல்லை என்ற முடிவிற்கும் மூன்று பிரதிநிதிகளையும் தனது கட்சி சார்ந்தவர்களாக வென்றெடுப்பது உதவக்கூடியதாக அமையும் என்னும் யதார்த்தங்களையும் ஜனாதிபதிக்கு புரியவைப்பதிலும், தனது முன்னைய கோட்பாட்டிலிருந்து "அதாவது அடுத்த தேர்தலில் தனித்து போட்டியிடும்" என்ற கருத்தை வெளிப்படுத்தியிருந்தாலும் இணைந்து கொண்டதில் தவறில்லை என்பதை ஏற்கச்செய்ய ஏதுவாகும்.

"அடுத்த தேர்தலில் ஸ்ரீ.ல.மு.கா தனித்து போட்டியிடும்" என் ஜனாதிபதியும், பொ.ஜ.ஐ.மு. தலைவியுமான திருமதி சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்கவிடம் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் தூதுக்குழு 1999 நவம்பர் 10ம் திகதி தெளிவாக அறிவித்தது. இந்த அறிவிப்பைக் கேட்ட ஜனாதிபதி, "அடுத்த தேர்தலிலும் நாங்கள் இணைந்து செயல்படுவதுதான் நல்லது. விருப்பு வாக்கு முறை, விகிதாசார தேர்தலில் உட்கட்சி போட்டி ஆகியவற்றை அகற்ற நான் நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளேன். எனவே உங்கள் முடிவை மறுபரிசீலனை செய்யுங்கள்" என ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் தூதுக்குழுவினரிடம் கூறினார். "அத்தகைய மாற்றங்கள் வந்தால் எமது நிலைப்பாட்டை பரிசீலிப்போம். மாற்றம் வராதவரையில் தனித்து போட்டியிடுவது உறுதி" என்று ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் ஜனாதிபதிக்கு பதிலளித்தார்". (நன்றி. நவமணி 14.11.1999)

இணைந்து போட்டியிடும் பட்சத்தில் ஒரு சிங்கள வேட்பாளரை நிறுத்துவது பொ.ஐ.ஐ.முக்கு பாதகமானதல்ல என்பதை புரியவைப்பதிலும், ஏற்கச் செய்வதிலும் பாரிய பிரச்சினைகள் இருப்பதாகத் தெரியவில்லை. அதேநேரம் ஒருவருக்கு மேல் இருவர் நிறுத்தப்பட்டாலும், பாதகமான நிலையினையே தோற்றுவிக்கும் என்பதில் ஐயமில்லை.

கிழக்குப் பிரதிநிதித்துவங்களுக்குப் பதிலாக தேசியப் பட்டியல் மூலம் நியமனம் தருகின்றோம் என்ற அடிப்படையை வைத்து இம் மாவட்டத்தில் இணைந்து போட்டியிடுவதென்பதும் அர்த்தமில்லாத கூற்றே. ஏனெனில், ஐ.தே.க.தேசியப் பட்டியல் மூலம் இம்மாவட்டத்திற்கு ஒரு உறுப்பினரை தெரிவு செய்யும் என உறுதி கூறியிருப்பதையும் நோக்க வேண்டும். ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ், ஐ.தே.க பிரமுகர்களை விமர்சிப்பதில் அர்த்த புஷ்டி இருக்காது. தனித்துவம் எனும் சொல்லிலும் இனிமையும், வலுவும் இராது.

எனவே, எதிர்வரும் பொதுத் தேர்தலில் இம்மாவட்டத்திலிருந்து மூன்று முஸ்லிம் பிரதிநிதிகளை வாக்களித்து தெரிவு செய்யும் நிலையினை ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் ஏற்படுத்தித்தருமா?

அல்லது பேரின வாத கட்சிகளின் அடிவருடிகளாக இருந்து விலை பேசாது ஆதரவினை நல்கி, பெட்டிப் பாம்பாகிவிடுமா? அல்லது தனித்துவப் போராட்டச் சிந்தனைகளி லிருந்து நாம் இன்னும் விடுபடாது எமது தனித்துவமும், உரிமையுமே இன்னும் எங்கள் ஆட்சியின் மீட்சி என நிஜப்படுத்துமா? என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

> ஒரே கட்சியிலிருந்து மூன்று முஸ்லிம் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பது விதாசாரத் தேர்தல் முறையின் கீழ் மிகச் சிரமமான ஒரு காரியம் மட்டுமன்றி, நடைமுறைச் சிக்கல்கள் நிறைந்ததொன்று என்பதை கடந்த இரு பாராளுமன்ற பொதுத் தேர்தல்களும் நமக்கு பாடம் புகட்டி விட்டன.

**உண்மையில் தமிழர்கள் இலங்கையராகவும், தமிழர்களாகவும் வாழவே விரும்பினர். ஆனால் பேரினவாதம் தமிழர்களாக மட்டும் வாழ் என நிர்ப்பந்தித்தது.**

தமிழர் அரசியலின் முதலாவது கட்டம் 1833இல் கோல்புறூக் சீர்திருத்தத்துடன் ஆரம்பித்து 1921 வரை செல்கின்றது இக்காலத்தில் இன அடையாளம் முதன்மைப்படுத்தப்படாது. இலங்கையர் என்ற அடையாளமே முதன்மைப்படுத்தப்பட்டது. முத்துக்குமாரசவாமி இராமநாதன், அருணாசலம் போன்ற தலைவர்கள் தமிழ்த்தலைவர்களாக கருதப்படாது இலங்கையர் தலைவர்களாகவே கருதப்பட்டனர்.

சிங்கள மக்கள் மத்தியில் சிறந்த தலைவர்கள் வளர்ந்திராத ஒரு கட்டத்தில் சிங்கள மக்களின் அபிலாஷைகளுக்காக குரல் கொடுப்பவர்களாகவும் இவர்கள் விளங்கினர். சிங்கள மக்களின் பிரதி

பணியினை இலங்கையில் தொடக்கி வைத்தவர் இவர் என்றே சொல்ல வேண்டும். ஆங்கிலக் கல்வி மூலம் பெற்றுக் கொண்ட பன்முக அறிவினை ஆதாரமாகக் கொண்டே இப்பணிகளை இவர் மேற் கொண்டிருந்தார்.

இவருடைய இப்பணியினை இவருடைய மைந்தரான கலாயோகி ஆனந்த குமாரசுவாமி முன்கொண்டு சென்றார். ஆங்கிலத்தாயின் வயிற்றில் பிறந்து, ஆங்கிலப் பெண்ணையே திருமணம் செய்து, ஆங்கில நாட்டிலேயே நீண்டகாலம் வாழ்ந்த போதும் ஆனந்தகுமாரசுவாமி மேலைத்தேச கலாசாரங்களிலிருந்து விலகி, கீழைத்தேச கலாசாரங்களை வளர்ப்பதில் ஈடுபாடுகாட்டினார்.

1905 ம் ஆண்டு "சமுதாய சீர்திருத்தச் சங்கம்" எனும்

உறுப்பினராக இருந்தபோது மேற்கொண்ட பணிகளும், கல்வித் தகைமையும், சிங்களவர்கள் இவரை ஆதரிக்கத் தூண்டின. இதைவிட மார்க்கஸ் பர்ணாந்து கிறிஸ்தவராகவும், கரவாச் சாதியைச் சேர்ந்தவராகவும் இருந்தமை, உயர் "கொய்கம" சாதிப் பிரிவைச் சேர்ந்தவர்கள் இராமநாதனை ஆதரிக்கத்தூண்டியிருந்தது.

1916ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும், ரி.எஸ். ஜெயவர்த்தனா என்ற சிங்களவரோடு போட்டியிட்டு இராமநாதன் வெற்றி பெற்றார். இத்தேர்தலிலும் படித்த சிங்களவர்களில் பெரும்பான்மையோர் இராமநாதனையே ஆதரித்தனர்.

1915 சிங்கள-முஸ்லீம் கலவரம் நடைபெற்றது. இதன்போது ஆங்கிலேய அரசாங்கம் இதனை கடுமையாக நசுக்கும் நடவடிக்கைகளில் இறங்கியிருந்தது. பிற்காலத்தில், பிரதமராக இருந்த டி.எஸ் சேனநாயக்கா, எவ்.ஆர். சேனாநாயக்கா உட்பட பல சிங்கள அரசியல் தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில்

தெரிந்த ஒன்று. இதனை வெளிப்படுத்தும் ஓவியப்படம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபமேடையில் இப்போதும் தொங்க விடப்பட்டுள்ளது. இக்கலவரம் தொடர்பாக "1915 இனக்கலவரமும், இராணுவச் சட்டமும்" என்ற நூலையும் எழுதியிருந்தார்.

பௌத்த ஆலயங்களின் சொத்துரிமைச் சட்டம் நிறைவேற்றப்படல், வெசாக் விடுமுறைத் தினச் சட்டம் நிறைவேற்றப்படல், என்பனவற்றிற்கும் காரணமாக இருந்ததோடு, சிங்கள மக்கள் மத்தியில் மொழிப் பற்றையும் தேசிய உணர்வையும் ஊட்டியிருந்தார். 1904ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 3ம் திகதி ஆனந்தாக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அவர், சிங்கள மக்களைப் பார்த்து "சிங்கள நாக்குகள்

தொழிலாளர்களின் நலன்களுக்காக பாடுபட்டார்.

கொழும்பு நகரின் சேரிகள், தோட்டங்கள் என அழைக்கப்படும் ஏழை மக்களின் குடியிருப்புக்கள் எல்லாவற்றிற்கும் சென்று அவர்கள் நலன்கள் மேம்பட உழைத்தார். இதற்காக லண்டனுக்கு சென்று லண்டன் மாநகரசபை நகரத் தொழிலாளர்கள் தொடர்பாக என்னென்ன பணிகளை ஆற்றுகின்றது என்பவற்றை ஆய்வு செய்து இலங்கையின் நகர்ப்புறங்களிலும் அவை மேற்கொள்ளப்பட வேண்டும் என சிபார்சு செய்தார்.

அரசியல் விடயங்களைப் பார்க்கும் போது அடித்தள மக்களின்



# தமிழர்களாக மட்டும் வாழ்! என நிர்ப்பந்தித்த பேரினவாதம்

நிதிகள் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களாக இருந்தபோது, தமிழ்ப்பிரதிநிதிகள் மட்டும் சுதேச மதங்களில் ஒன்றான சைவர்களாக இருந்தமையும் சிங்கள மக்களைக் கவர்ந்திருந்தது.

உண்மையில், இக்காலகட்டத்தில் கிறிஸ்தவ மதப் பரவலுக்கு எதிரான உணர்வே சிங்கள மக்கள் மத்தியில் மேலோங்கியிருந்தது. பல கிறிஸ்தவ மிஷனரிகள் போட்டி போட்டுக் கொண்டு மதமாற்ற வேலைகளிலும் கிறிஸ்தவ மதபரப்பலிலும் ஈடுபட்ட போது சிங்கள பௌத்தர்களை அதுவே பெரிதாக பாதித்திருந்தது. இச்செயற்பாட்டை எதிர்த்தவர்களாக தமிழ்ப் பிரதிநிதிகள் இருந்தபோது இப்பிரதிநிதிகளை ஆதரிக்க அவர்கள் தலைப்பட்டனர். சேர். முத்துக்குமார சுவாமி கண்டிய மக்களின் விவாகம் சம்பந்தமாக சிங்கள மக்கள் விரும்பாத ஒரு கட்டளைச் சட்டத்தை நிறைவேற்ற முனைந்தபோது, அதனை பலமாக எதிர்த்தார். அதேபோல சிங்கள மக்களைப் பாதிக்கின்ற கிராம சபைச் சட்டத்தை அரசு நிறைவேற்ற முயன்ற போதும் எதிர்த்து நின்றார்.

ஆசியாவிலேயே முதன் முதலாக பாரிஸ்டர் பட்டம் பெற்றவரும் இவரே! இவ்வாறு ஒரு கல்வியாற்றல் உடையவராக இருந்தமையும் சிங்கள பௌத்தர்கள் விரும்பக் காரணமாக இருந்தது. இதைவிட, கிறிஸ்தவ கல்விமான்கள் ஐரோப்பிய கலாச்சாரத்தையும் ஐரோப்பிய பண்பாட்டையும் தூக்கிப் பிடிக்க, இவர் கீழைத்தேச பண்பாடு கலாசாரங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தமையும் சிங்கள மக்களைக் கவர்ந்திருந்தது.

இவர் கீழைத்தேச கல்விமுறை, கலாசாரம், மதம் என்பன தொடர்பாக பல கட்டுரைகளையும் எழுதியதுமல்லாமல், ஆங்கிலத்தில் அரிச்சந்திர புராணத்தையும் எழுதியிருந்தார். அத்தோடு தாயுமானவர் சுவாமிகளின் அரிய பாடல்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருந்தார்.

உண்மையில், அந்நியராட்சியால் அழிவுண்டு போன கீழைத்தேச பண்பாடு, கலாசாரம் பற்றிய சிந்தனைகளை மீளப்புனரமைக்கும்

அமைப்பினை உருவாக்கி அதனூடாக தனது பணிகளை மேற்கொண்டார். அனுராதபுரம், பொலனறுவை போன்ற பழைய தலைநகரங்களில் அழிந்து கிடந்த கோவில்கள், விகாரைகள், தூபிகள், கட்டிடங்கள், வாவிகள் என்பவற்றைப்பற்றி நடுநிலை நின்று ஆராய்ந்து பல நூல்களை எழுதினார். ஓவியங்கள், சிற்பங்கள், சிலைகள் என்பனவற்றை நுணுக்கமாக ஆராய்ந்து அது பற்றிய கலைக்களஞ்சியங்களை உருவாக்கினார். சிவநடனம், இராச புத்திர ஓவியங்கள் கண்டிக் கலையும் அதன் எழுச்சியும் வீழ்ச்சியும், இந்தியக்கலையின் சிறந்த பகுதிகள், மத்தியகாலச் சிங்களக் கலை, இந்தோனேசிய கலைச்சரித்திரம் போன்றன இவற்றுள் முக்கியமானவை ஆகும். இப் பணிகளினூடாக கீழைத்தேச கலைகளை மட்டுமல்ல சிங்களக் கலைகளையும் ஆனந்தகுமாரசுவாமி மீள் உருவாக்கம் செய்திருந்தார்.

1912ம் ஆண்டு, குறூ-மக்கலம் சீர்த்திருத்தத்தின்ப்படி, படித்த இலங்கையர் பிரதிநிதிக்கான தேர்தல் நடைபெற்ற போது பெரும்பான்மையான படித்தசிங்களவர்கள் இராமநாதனுக்கே தமது வாக்குகளை அளித்து வெற்றி

**இராமநாதன், சிங்கள கரவா சமூக கிறிஸ்தவரான மாக்கஸ் பர்ணாந்து என்பவருடன் போட்டியிட்டு வெற்றி பெற்றார். ஏற்கனவே இவரது மாமனாரான முத்துக்குமாரசுவாமி, மைத்துனரான கலாயோகி ஆனந்த குமாரசுவாமி என்பவர்களின் மூலம் கிடைத்த செல்வாக்கும், நியமன உறுப்பினராக இருந்தபோது மேற்கொண்டபணிகளும், கல்வித் தகைமையும் சிங்களவர்கள் இவரை ஆதரிக்கத் தூண்டின.**

பெறச் செய்தனர். இத்தேர்தலில் இராமநாதன், சிங்கள கரவா சமூக கிறிஸ்தவரான மாக்கஸ் பர்ணாந்து என்பவருடன் போட்டியிட்டு வெற்றிபெற்றார். ஏற்கனவே இவரது மாமனாரான முத்துக்குமாரசுவாமி, மைத்துனரான கலாயோகி ஆனந்த குமாரசுவாமி என்பவர்களின் மூலம் கிடைத்த செல்வாக்கும், நியமன

அடைக்கப்பட்டனர். சேர்.பொன் இராமநாதன் சிங்களத் தலைவர்களுக்கு எதிரான இத் தாக்குதல்களை கடுமையாக கண்டித்தார். எதுவித நிபந்தனையுமில்லாமல் அவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் என அரசை வற்புறுத்தினார். அரசு அதற்கு இணங்காத போது முதலாம் உலக யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த யுத்தகாலச் சூழ்நிலையிலும் இங்கிலாந்துக்கு சென்று மகாராணியாருடன் பேசி, கலவரத்தை நிறுத்தியதுமல்லாமல் கைது செய்யப்பட்ட சிங்களத் தலைவர்களையும் விடுவிக்கச் செய்தார்.

**தமிழ் தேசிய அரசியல் அன்றிலிருந்து இன்று வரை**

**அரசியல் தொடர் 13**

**- ஆதிசங்கரர் -**

அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்ட தேசாதிபதியையும் வாபஸ் பெறச் செய்தார்.

அவர் நாடுதிரும்பிய போது, துறைமுக வாசலுக்கு வரவேற்கச் சென்ற சிங்களத்தலைவர்கள் குதிரையைக் கழற்றிவிட்டு, குதிரை வாகனத்தில் இராமநாதனை அமரச் செய்து காலிவீதி வழியாக இராமநாதனின் வீடு வரை தாமே இழுத்துச் சென்றனர். இச்சம்பவம் இலங்கையர்கள் அனைவருக்கும்

சிங்கள மொழியைப் பேசாவிடின் வேறுயார்தான் இதைப் பேசப் போகின்றார்கள்" என்று கர்ச்சித்தார்.

(IF SINHALESE LIPS WILL NOT SPEAK THE SINHALESE LANGUAGE WHO ELSE IS THERE TO SPEAK IT)

நீண்டகாலமாகவே அரச உத்தியோகத்தில் இருந்த சேர்- பொன் அருணாசலம் 1913ல் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்று அரசியலில் ஈடுபடத் தொடங்கினார்.

இலங்கையர் என்ற அடையாளத்தில் நின்று அவர் மேற்கொண்ட பணிகளில் இரண்டு பணிகள் முக்கியமானவை.

ஒன்று இலங்கைத் தேசியத்திற்கான அடித்தளத்தை இட்டமையாகும். இதற்காக 1917 இல் அரசியற் சீர்திருத்தக் கழகத்தை உருவாக்கி பூரண சுதந்திரக் கோரிக்கையை வற்புறுத்தினார். பல்வேறு பிரதேசங்களிலும் இதற்காக பிரச்சாரம் செய்தார். இலங்கை மக்களுக்கென ஐக்கியப்பட்ட ஒரு தேசிய இயக்கம் தேவை எனக் கருதி இனரீதியாகவும் பிரதேசரீதியாகவும் பிளவுண்டிருந்த எல்லா அமைப்புக்களையும் இணைத்து 1919இல் இலங்கைத் தேசிய காங்கிரசை உருவாக்கினார். அதன் முதலாவது தலைவராகவும் அவரே பதவியேற்றார்.

இரண்டாவது, இலங்கையில் சமூகமாற்றத்திற்கான அரசியலை ஆரம்பித்து வைத்தமையாகும்! அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றதும் அவர் முதன் முதலாக உருவாக்கிய அமைப்பு சமூக சேவைச் சங்கமாகும். இச்சங்கத்தின் மூலம் கொழும்பு நகரத்தில் வாழும் ஏழைத்

நலன்களிலிருந்தே அதனைப் பார்த்தார். இவரைப் பின்பற்றியே ஏ.ஈ.குணசிங்கா போன்ற தொழிற் சங்கத் தலைவர்கள் தொழிற் சங்க அரசியலுக்கு வந்தனர்.

இவ்வாறு இலங்கையர் என்ற அடையாளத்தினை உயர்த்திப் பிடிப்பது தொடர்பாக சிங்கள அரசியல் தலைவர்களிலும் பார்க்க மிக உயர்ந்த அளவில் தமிழ்த் தலைவர்கள் செயற்பட்ட போதும் 1920களின் ஆரம்பத்தில் எல்லாமே தலைகீழாக மாறின.

1921ம் ஆண்டு, "மானிங்" அரசியற் சீர்திருத்த முயற்சிகள் நடந்த போது மேல் மாகாணத் தமிழருக்கான பிரதிநிதித்துவம் தொடர்பாக ஒப்பந்தம் செய்து கொண்ட சிங்களத் தலைவர்கள், பின்னர் ஒப்பந்தத்தை மீறி தமது பேரினவாத முகத்தை காட்டத் தொடங்கினர். அதிகாரம் கொஞ்சம் கொஞ்சமாக இலங்கையர்களின் கைகளுக்கு மாறிய போது "அவை சிங்களவர்களுக்கு மட்டுமே" என்ற வகையில் செயற்படத் தொடங்கினர்.

விளைவு, இதுவரை இலங்கையர் என்ற அடையாளத்தை உயர்த்திய தமிழ்த் தலைவர்கள் தமிழர் என்ற அடையாள அரசியலை நோக்கி நகரத் தொடங்கினர். தேசிய காங்கிரசை உருவாக்கிய அருணாசலம், மனம் புண்பட்டு தேசிய காங்கிரசின் சாதாரண அங்கத்தவர் பதவியிலிருந்தும் இராஜினாமாச் செய்தார். தமிழர்களை ஒன்று திரட்டி "தமிழர் மகாஜன சபை" என்ற அமைப்பை உருவாக்கினார்.

தமிழர் மகாஜனசபையின் தோற்றத்துடன் இலங்கையர் என்ற அடையாளம் தமிழர்களைப் பொறுத்தவரை அழியத் தொடங்கி விட்டது.

உண்மையில், தமிழர்கள் இலங்கையராகவும்? தமிழர்களாகவுமே வாழவிரும்பினர். ஆனால் பேரினவாதம் அவர்களை தமிழர்களாக மட்டும் வாழ் என நிர்ப்பந்தித்தது.

# "இலங்கை இந்தியர் வரலாறு"

## நூல் கூறும் வரலாற்றுத் தகவல்கள்



### ஏஜன்சி நிலையமுறை

தொழிலாளர்கள் திரட்டப்படுவதை மேற்பார்வை செய்யவும், அதற்கு நிதி வழங்கவும், 1904ம் ஆண்டில் கரையோர ஏஜன்சி நிலையமொன்று அமைக்கப்பட்டது. தொழிலாளர்களைத்திரட்டுவதற்கு ஏற்படுத்தப்பட்ட மற்றுமொரு முறை இதுவாகும். தோட்ட உரிமையாளர்கள் இந்நிலையத்தில் ஒன்றிணைந்து நிதியை ஒழுங்கு செய்தனர். எனவே இக்காலப் பகுதியில் இந்நிலையத்தின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட கங்காணிகள், கட்டுப்பாட்டுக்குட்படாத கங்காணிகள் என்று இரு வகையானோர் இந்தியாவில் தொழிலாளர்களைத் திரட்டுவதில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையத்துக்கான நிதியில் ஒரு பகுதியை இலங்கை அரசாங்கமும், வழங்கி வந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் அரசாங்கமும் தொழிலாளர்களைத் திரட்டும் பணியில் ஈடுபட வேண்டும் என்று தோட்ட உரிமையாளர்கள் கோரினர். அக்காலத்தில் அரசாங்கம் இதுபோன்ற விஷயங்களில் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடித்தமையால் அக்கோரிக்கையை ஏற்றுக் கொள்ள மறுத்தது.

புதிய முறையின்படி, அரசாங்கமும், தோட்ட நிர்வாகமும் நிதி வழங்கின. தோட்டங்களின் சார்பாக தொழிலாளர்களின் செலவுக்கு வழங்கப்பட்ட பணம் கங்காணி அல்லது தொழிலாளியின் கணக்கில் பற்று எழுதப் பெற்றது. எனவே இவ்வாறான புதிய திரட்டுமுறைகள் தொழிலாளர்களின் கடன் பிரச்சினையைக் குறைப்பதாக அமையவில்லை. தொழிலாளர்களைத் திரட்டுவதற்கென்று ஏற்படுத்தப்பட்ட திட்டங்கள் ஒவ்வொன்றும் தோட்ட உரிமையாளர்களின் பணத்துக்குப் பாதுகாப்பளித்து சிக்கனமான முறையில் தொழிலாளர்களைத் திரட்டுவதை நோக்கமாகக் கொண்டிருந்தன. எனவே தான் இலங்கையில் வாழ்ந்த இந்தியத் தொழிலாளர்கள் கடனில் பிறந்து, கடனில் வாழ்ந்து, கடனில் மடிகின்றார்கள் என்று இந்திய தொழிலாளர்களுக்கான கட்டுப்பாட்டதிகாரி ஒருவர் கூறினார்.

தொழிலாளியின் கடன் பளு, "துண்டு" என்னும் மற்றொரு திட்டப்படி வழங்கப்பட்ட முற்பணத்தின் காரணமாக மேலும் அதிகரித்தது. தோட்ட நிர்வாகி தொழிலாளர்

### துண்டு முறை

களுக்கு வழங்கும் முற்பணம் யாவும் துண்டில் குறிக்கப்பட்டு அப்பணம் முழுவதும் திரும்பச் செலுத்தப்படும் வரை தொழிலாளர்கள் தொடர்ந்து குறிப்பிட்ட தோட்டத்திலேயே வேலை செய்ய வேண்டியிருந்தது. திருமணங்கள், பண்டிகைகள் முதலியன இடம் பெறும் போது முற்பணத்தைப்பெற்றே செலவு செய்யும் நிலையிலிருந்த தொழிலாளிகளின் கடன் சுமை எப்போதும் அதிகரித்தே வந்தது. இக்கடன் சுமை அவனைத் தோட்டத்துடன் நன்கு பிணைத்து வைத்திருந்தது. ஒரு தோட்டத்தில் தேவைக்கு அதிகமான தொழிலாளர்கள் காணப்பட்டால், தோட்ட நிர்வாகி தான் வழங்கிய முற்பணத்தைத் தொழிலாளி திருப்பித் தரும் பட்சத்தில் குறிப்பிட்ட தொகையான தொழிலாளர்களைத் தோட்ட சேவையிலிருந்து விடுவிப்பதாக உறுதியளித்து ஒரு "துண்டு" வழங்குவார். கங்காணி இத்துண்டுடன் தொழிலாளர் பற்றாக்குறையாகக் காணப்படும். வேறு தோட்டங்களுக்குச் சென்று அங்கிருந்து தொழிலாளர்களின் கணக்கில் மேலதிகமாக முற்பணங்களைப் பெற்றுப் பழைய தோட்ட நிர்வாகிக்குச் செலுத்தினான். எனவே துண்டு முறை தொழிலாளர்கள் கடன்பட்ட இடங்களை மாற்றினவேயொழிய, கடன் பளுவைக் குறைக்க உதவவில்லை. அவர்களை வாழ் நாள் முழுவதும் கடனாளியாக இருக்கச் செய்வதே துண்டு முறையின் முக்கிய இயல்பாக இருந்தது. இத்துண்டு முறையினால் கங்காணிகள் காலத்துக்குக் காலம் தமது தொழிலாளர் குழுவுடன் வெவ்வேறு தோட்டங்களுக்கும் செல்லக் கூடியதாக இருந்தது.

தோட்ட உரிமையாளர்கள், கங்காணிகள் கேட்கும் தொகையை முற்பணமாகத் தரமறுக்கும் போது, கங்காணிகள் அவர்களிடம் துண்டைப் பெற்று அத்தொகையைத் தர விரும்பும் வேறு தோட்ட உரிமையாளர்களை அணுகினர். புதிய தோட்ட உரிமையாளர்களிடம், தொழிலாளர்கள் சார்பில் மேலும் முற்பணங்களைப் பெற்று தொழிலாளர்களின் கடன்பளுவை மேலும் அதிகரித்தனர். எனவே தான் துண்டை வழங்கும் தோட்ட உரிமையாளர் கணக்கில் உள்ள கடன் தொகைக்கு மேலதிகமான தொகையை அதில் குறிப்பிடக் கூடாதென்றும், புதிதாக வேலை வழங்கும் தோட்ட உரிமையாளர் துண்டில் காணப்படும் தொகைக்கு மேலதிகமான தொகையை முற்பணமாக வழங்கக் கூடாதென்றும் தோட்ட உரிமையாளர் சங்கம் தடைவிதித்தது. ஆரம்பத்தில் வழங்கப்படும் முற்பணம் ஆளுக்கு 15 ரூபாவுக்கு அதிகமாக இருக்கக் கூடாதென்றும், தொழிலாளர்கள் தோட்டங்களுக்கு வந்து சேருவதற்கான பயணச் செலவு தொழிலாளரைச் சேராது என்றும், முற்பணத் தொகையை பொறுத்த வரையில் அவ்வாண்டு இறுதி வரை தொழிலாளர்கள் தொடர்ந்து தோட்டத்தில் வேலை செய்தால் கடன் திருப்பிச் செலுத்தப் பட்டதாகக் கருதப்பட்டு அவர்களுக்குச் சார்பாக கழிக்கப்படலாமென்றும் இச்சங்கம் விதித்தது. சிக்கனமான முறையில் தொழிலாளர்களைத் திரட்டி அவர்களைக் கொண்டு ஆகக் கூடிய அளவு நன்மை பெறமுயன்ற தோட்ட உரிமையாளர்களே தம்மைக் கட்டுப்படுத்தும் இத்தகைய விதிகளை ஏற்படுத்திக் கொள்ளும் அளவுக்குத் தொழிலாளர்களின் கடன் பளு மேலோங்கி இருந்தது. ஆயினும் சங்கத்தின் முயற்சிகள் தொழிலாளர்களின் கடன்பளுவைக் குறைக்க உதவவில்லை. ஏனெனில் பல தோட்டங்கள் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்ந்திருக்கவில்லையாதலால் அதன் தீர்மானங்களை ஏற்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. மேலும் உறுப்பினராக இருந்த சில தோட்டங்கள் கூட துண்டில் குறிக்கப்பட்டுள்ள தொகைக்கு மேலதிகமான பணம் முற்பணமாக வழங்கப்படக் கூடாதென மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை மீறி நடந்தன. துண்டுமுறையில் இருந்த இத்தகைய குறைபாடுகளின் காரணமாக 1921ம் ஆண்டில் அரசாங்கம் அம்முறையை ஒழித்தது. தோட்ட உரிமையாளர்கள் அம்முறை ஒழிக்கப்படுவதை எதிர்த்தனர். துண்டு முறை ஒழிக்கப்பட்டமையால் தோட்டத் தொழிற்துறைக்கு 40 இலட்சம் பவுண் இழப்பு ஏற்பட்ட போதிலும் அதன் காரணமாக தொழிலாளர்களுக்கும், தோட்ட உரிமையாளர்களுக்கும் இடையில் இருந்த உறவு சீரடைய ஆரம்பித்தது.

எவ்வாறாயினும் பொதுவாகக் கூறும் இடத்து, தொழிலாளர்களின் கடன் பளுவைக் குறைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் யாவும் தோல்வியுற்றன. தொழிலாளர்கள் இலங்கையில் வாழ்க்கையை ஆரம்பிக்கும் போது கடன் படாமலும், பொய்யான கடன்களை தொழிலாளர்கள் மீது சுமத்தும் சந்தர்ப்பங்களை கங்காணிக்கு அளிக்காமலும் இருந்தால் மட்டுமே அவர்களுடைய கடன் பளுவை நீக்க முடியும் என்று ஆலோசிக்கப்பட்டது. இந்திய அரசாங்கமும், இலங்கை அரசாங்கமும், இந்தியத் தொழிலாளர்கள் இலங்கையில் நிரந்தரமாக குடியேறியதும் கங்காணிகளைக் கொண்டு இந்தியாவில் தொழிலாளர்களை திரட்ட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. எனினும், கங்காணி தொடர்ந்து தொழிலாளர்களுக்கு கடன் வழங்குபவனாக விளங்கி வந்தான். சில இடங்களில் கங்காணிகளின் கடைகளிலே தொழிலாளர்கள் பொருட்களை வாங்கினர். தொழிலாளர்கள் கங்காணிக்கும், கங்காணிகள் தோட்ட நிர்வாகிகளுக்கும் கடன் பட்டிருந்தனர். கங்காணி தோட்ட நிர்வாகத்திடமிருந்து கடன்பெற்று தொழிலாளர்களுக்கு கடன் வழங்கினார். தொழிலாளி கங்காணிக்கு செலுத்தவேண்டிய கடன் பணம் அவரது சம்பளத்திலேயே கழிக்கப்பட்டது. இக் கணக்குகளை வைத்திருந்த கங்காணி முற்பணத்திற்கு வட்டியும் அறவிட்டான். கடன் சுமையால் அடிப்படையிலே தொழிலாளர்களுக்கும், கங்காணிகளுக்கும் இடையில் உறவும், ஒப்பந்தமும் ஏற்பட்டது.

அறியாமை காரணமாக தொழிலாளர்கள் கங்காணிகளைக் கொடூரமான பேராசைக்கு இலக்காக வேண்டியிருந்தது. இக்கங்காணிகளின் பரம்பரையினர் ஓரிரு தலைமுறைக்குப் பின்னர் தம்மை தோட்ட உரிமையாளர்களாக்கிக் கொண்டதில் வியப்பில்லை. கங்காணி கடையை நடத்தும் பட்சத்தில் தொழிலாளி இரண்டு வழிகளில் இன்னல் அடைந்தான். அவன் பெற்ற கடனுக்கு உயர்ந்த வட்டியும், வாங்கிய பொருட்களுக்கு உயர்ந்த விலையையும் அளிக்க வேண்டியிருந்தது. மலாயாவில் போலல்லாது இலங்கையில் கங்காணிகளுக்கூடாகவே தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களுக்கு சம்பளங்களை வழங்கியது. இதனால் இலங்கையில் கங்காணிகள், தொழிலாளர்கள் மத்தியில் கூடிய செல்வாக்குச் செலுத்தக் கூடியதாகி இருந்தது.

**கங்காணி கடையை நடத்தும் பட்சத்தில் தொழிலாளி இரண்டு வழிகளில் இன்னல் அடைந்தான். அவன் பெற்ற கடனுக்கு உயர்ந்த வட்டியும் வாங்கிய பொருட்களுக்கு உயர்ந்த விலையையும் அளிக்க வேண்டியிருந்தது.**


கங்காணிகள் பொதுவாக உயர் சாதியைச் சேர்ந்தவர்களாகவும், பெரிய குடும்பங்களின் தலைவர்களாயும் தமிழ் நாட்டுக் கிராமங்களில் வாழ்ந்த சகல வகுப்பினருடைய மரியாதைக்குரியவர்களாகவும் காணப்பட்டனர். இதனால் தொழிலாளர்கள் தமது வேலை சம்பந்தமான எல்லாப் பிரச்சினைகளிலும் கங்காணிகளிடமே ஆலோசனை கேட்டனர். அவர்கள் குடியேறிய புதிய நாட்டில், கங்காணி அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பவனாகக் கருதப்பட்டான். இவ்வாறான கங்காணி, தொழிலாளி உறவுகள் பிற்காலத்தில் தோட்டத் தொழிலாளர் மத்தியில் வளர்ச்சியுள்ள அரசியல், சமூக தலைமைப் பீடங்களின் இயல்பினை நிர்ணயித்தன. இன, மொழி ஒற்றுமையின் அடிப்படையில் கங்காணிகள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக எல்லா சமயங்களிலும் நடக்கவில்லை. பிற்காலத்தில் தோட்டத் தொழிலாளர்களின் அரசியல், குடியியல் உரிமைகளுக்குப் பேரபாயம் விளைவிக்க பல்வேறு சக்திகளும் எடுத்த நடவடிக்கைகளை முறியடிக்கும் தகுதி வாய்ந்த வல்லமை மிக்க அரசியல் தலைமைப்பீடமொன்று உருவாக முடியாததற்கு, தொழிலாளர் மத்தியில் கங்காணிகள் கொண்டிருந்த செல்வாக்கு ஒரு முக்கிய காரணி என்று கூறலாம். இந்தியத் தொழிலாளர்கள், இலங்கைக்கு வந்து பிரித்தானிய முதலாளித்துவத்தாலும், உள்ளூர் அரசியல் சக்திகளாலும் இன்னல்களை அனுபவிப்பதற்கு முன் அக்கரையில் வைத்தே கங்காணிகளின் கொடுமைகளுக்கு இலக்காகினர். தோட்டத் தொழிலாளர்களின் சோக வரலாறு கங்காணிகளினால் அக்கரையில் வைத்தே ஆரம்பித்து வைக்கப்பட்டது.

**துண்டு முறை தொழிலாளர்கள் கடன்பட்ட இடங்களை மாற்றினவேயொழிய கடன்பளுவைக் குறைக்க உதவவில்லை. அவர்களை வாழ் நாள் முழுவதும் கடனாளியாக இருக்கச் செய்வதே துண்டு முறையின் முக்கிய இயல்பாக இருந்தது.**

முற்றும்.

# கேள்விக்குறியாகியுள்ள ஸ்பைட்டின் தலைவிதி

ஞானதரன்.



பிஜியின் தலைவிதியை நிர்ணயிக்கப் புறப்பட்ட ஜோர்ஜ் ஸ்பைட்டின் தலைவிதி இப்போது கேள்விக் குறியாகியுள்ளது. மே மாதம் பிஜியில் நடைபெற்ற, தோல்வியில் முடிவடைந்த சதிக்குத் தலைமை தாங்கிய புரட்சிக் குழுவின் தலைவரான ஜோர்ஜ் ஸ்பைட் மீது, தேசத் துரோகக் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடர்வதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு நாட்டின் மேல் நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வழக்கை விசாரித்த நீதிபதி ஒருவரே இது தொடர்பான இறுதி முடிவை மேல் நீதி மன்றம்தான் மேற்கொள்ள வேண்டும் எனத் தீர்ப்பளித்திருக்கின்றார். விடுதலையை எதிர்பார்த்திருந்த ஸ்பைட்டுக்கு இந்தத் அதிர்ச்சியைக் கொடுத்திருப்பதுடன், அவரது அரசியல் எதிர்காலத்தையும் கேள்விக் குறியாக்கியுள்ளது.

இராணுவ ஆட்சியாளர்களுடன், ஸ்பைட் கைச்சாத்திட்ட உடன்படிக்கை செல்லுபடியாகக் கூடியது எனவும், அதன் அடிப்படையில் ஸ்பைட் விடுதலை செய்யப்பட வேண்டும் எனவும், அவரது ஆதரவாளர்கள் பிஜியின் பிரதம நீதவான் Sailesi Temo முன்னிலையில் கோரிக்கை விடுத்தார்கள். இதனை ஏற்றுக்கொள்ள மறுத்த பிரதம நீதவான், இது தொடர்பாக தன்னால் எந்தஒரு தீர்வையும் சொல்ல முடியாது எனவும், ஆகையால், இது தொடர்பான இறுதி முடிவை மேல் நீதிமன்றமே முடிவு செய்ய வேண்டும் எனத் தீர்ப்பளித்தார். அது வரையில் ஸ்பைட்டும், அவரது ஆதரவாளர்களும் தடுப்புக் காவலிலேயே தொடர்ந்தும் வைக்கப்பட்டிருப்பார்கள்.

பீஜியின் அரசாங்கத்தில், செல்வாக்கு வாய்ந்த இந்தியர்களின் ஆதிக்கத்தை இல்லாதொழிக்கும் நோக்கத்துடன், திடீர்ச் சதிப் புரட்சியை நடத்திய ஸ்பைட், அப்போதைய பிரதமர் மகேந்திர சௌத்ரி உட்பட பல அமைச்சர்கள், அரசாங்க அதிகாரிகளை எட்டு வாரங்களாகப் பணயக் கைதிகளாக வைத்திருந்தமை, தெரிந்த செய்திதான். இதனைத் தொடர்ந்து, இராணுவம் அதிகாரத்தை இறுக்கிய போது, ஸ்பைட்டும் ஆதர வாளர்களும் ஆயுதங்களுடன் சரணடைவது தவிர்க்க முடியாததாகிவிட்டது. அதே வேளையில் ஒரு ஒப்பந்தத்திலும் அவர் இராணுவ ஆட்சியாளர்களுடன் கைச்சாத்திட்டுக்கொண்டார். ஸ்பைட்டின் கைதும் - அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதும், சட்டத்தை துஷ்பிர யோகம் செய்யும் நடவடிக்கைகள் என்பதுதான் ஸ்பைட்டின் சட்டத் தரணிகளின் வாதம்.

ஸ்பைட்டுக்கும் அவரது ஆதர வாளர்களுக்கும் மன்னிப்பு வழங்கப்படும் என்ற உறுதி மொழியைத் தொடர்ந்தே- தமது பாதுகாப்பிலிருந்த பணயக் கைதிகளை ஸ்பைட் விடுதலை செய்தார். அதனால்தான், ஸ்பைட்டின் கைது- அதனைத் தொடர்ந்து அவர் தடுத்து வைக்கப்பட்டிருப்பது ஆகியன சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்யும் செயல்கள் என ஸ்பைட்டின் சட்டத்தரணிகள் வாதிடுகின்றார்கள். இருந்த போதிலும், அரச தரப்புச் சட்டத்தரணிகளின் வாதம் வேறுவிதமாக உள்ளது. அதாவது ஒரு நெருக்கடியின் மத்தியிலேயே அந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதனால், அது செல்லுபடியற்றதாகிவிடும் என்பதுடன், அதனை அங்கீகரிக்க வேண்டியதும் இல்லை என்பதுதான் அவர்களது நிலைப்பாடு. விசாரணைக்கு உட்படுத்தப்படுவதிலிருந்து இவர்களுக்கு எந்த விதமான விதிவிலக்கும் இல்லை. எனவே அவர் தேசத்துரோகக் குற்றச் சாட்டின் பேரில் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனவும் இவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். ஸ்பைட்டுக்கும் இராணுவ ஆட்சியாளர்களுக்கும் இடையேயான சமாதான உடம்படிக்கை தற்போதும் நடைமுறையில் உள்ளது ஆனால், அதில் மன்னிப்பு உள்ளடக்கப்படவில்லை எனவும் இவர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

இந்த இரண்டு நிலைப்பாடுகளுக்கும் இடையில், ஸ்பைட்டின் எதிர்காலம் சிக்கித் தவிக்கின்றது. இது தொடர்பாக, பிஜியிலுள்ள சட்டத்துறை வட்டாரங்கள் முரண்பாடான தகவல்களைத்தான் வெளியிட்டுள்ளன. அதாவது தேசத் துரோகக் குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகளிலிருந்து தப்பிப்பதற்காக ஸ்பைட்டுக்கு 50 வீதம் சாத்தியக் கூறுகள் உள்ளதாக இவர்கள் சுட்டிக்காட்டு கின்றார்கள். விசாரணைகள் நடத்தபடப்டாலும், ஆயுதங்களைச் சேகரித்தது, சட்டவிரோதமான முறையில் கூடியது போன்ற சிறிய குற்றச்சாட்டுக்கள் தான் இவர்கள் மீது சுமத்தப்படலாம் எனவும் இந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

பூர்வீகக் குடிமக்களின் உரிமைகளுக்காகவே இந்தச் சதிப் புரட்சியில் தாம் ஈடுபட்டதாக கிளர்ச்சியாளர்கள் எப்போதும் வாதிட்டுவருகின்றார்கள். இந்திய வம்சாவழியினரை அதிகமாகக் கொண்டுள்ள அமைச்சரவையில், பூர்வீக மக்களின் உரிமைகள் ஒடுக்கப்பட்டதாகவும் இவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

இந்தப் பிரச்சினை, பிஜி அரசுக்கும் புதிய நெருக்கடிகளைக் கொடுக்கத் தொடங்கியுள்ளது. தேசத்துரோகக் குற்றச் சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டால், சர்வதேச ரீதியான அழுத்தங்கள் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது, கொமன்வெல்த் அமைப்பின் தீர்மானங்களை மேற்கொள்ளும் குழுவிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள பிஜி, அவ்வமைப்பிலிருந்தே நீக்கப்பட்டுவிடக் கூடிய சூழ்நிலைகள் காணப்படுகின்றன. இந்த சர்வதேச சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டே தமது எதிர்காலத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலையில் பிஜி அரசு உள்ளது.

ஜோர்ஜ் ஸ்பைட்டின் கிளர்ச்சியாளர்களுக்கும், இராணுவ ஆட்சியாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டைத் தொடர்ந்தே, பிரதமர் சௌத்ரி உட்பட பணயக்கைதிகளாக வைக்கப்பட்டிருந்த அமைச்சர்கள் விடுவிக்கப்பட்டனர். இருந்த போதிலும், வழமை நிலையை பிஜியில் கொண்டுவருவதற்கு இன்னும் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கும் என பதவி நீக்கப்பட்ட பிரதமர் சௌத்ரி அப்போதே கூறியிருந்தார். இராணுவத்தின் ஆதரவுடன் அமைக்கப்பட்ட புதிய அர சாங்கத்தில் பிரதமர் பதவி அவருக்கே மீண்டும் வழங்கப்படாதது சௌத்ரிக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது என்பது உண்மைதான். இந்த ஏமாற்றத் துடன் வெளிநாடுகளில் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டு பிரச்சாரங் களை மேற்கொண்டுவரும் சௌத்ரி, பிஜியில் மீண்டும் ஜனநாயகத்தைக் கொண்டு வருவதற்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் கேட்டு வருகின்றார்.

இருந்த போதிலும், புதிய ஜனாதிபதியும், புதிய பிரதமரும் தெரிவு செய்யப்படுவார்கள் என்ற உறுதிமொழியின் பேரிலேயே சௌத்ரியும் அவரது ஆதரவாளர்களும் விடுவிக்கப்பட்டார்கள் என்பதும் குறிப் பிடத்தக்கது. புதிய அரசாங்கம் ஒன்று தெரிவுசெய்யப்பட்டபோதிலும், நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் இராணுவத்தின் பங்கு பணிகளே அதிகமானதாக உள்ளது. பதவி நீக்கப்பட்ட பிரதமர் சௌத்ரிக்கு புதிய அரசில் எந்வொரு பங்கையும் கொடுக்காத இராணுவம், பல சமூகத்தவர்களும் பங்கேற்கக் கூடிய விதத்திலான அரசியல் அமைப்பையும் இடைநிறுத்தம் செய்திருக்கின்றது. பணயக் கைதிகளை விடுவிப்பதற்காக ஸ்பைட் விதித்த நிபந்தனைகளில் இதுவும் ஒன்றாக உள்ளபோதிலும், சர்வதேச சமூகம் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அதேவேளை, இந்திய வம்சாவழியினர் மத்தியிலும் இது பதற்ற நிலையை தோற்றுவித்துள்ளது. பல சமூகத்தவர்களையும் அங்கீகரிக்கும் அரசியல் அமைப்பின் மூலமே தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள முடியுமென அவர்கள் கருதினார்கள். இப்போது தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் என்ற அச்சத்தில் நாட்டைவிட்டு வெளியேறுவதிலேயே இவர்கள் அதிகளவு அக்கறை காட்டுகின்ற ார்கள். அதிகளவு நிலவுரிமையை கோரி போராடும் பூர்வீகக் குடிகள் கடந்த மாதத்தில் இந்தியர்களுக்குச் சொந்தமான பல உடமைகளை தம் வசப்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள். அதிகளவு வருமானத்தைப் பெற்றுத் தரும் உல்லாச பயணிகள் களிப்பிடங்கள் பலவும் இதில் அடங்கும். இந்த நிலையில் பிஜிக்கு அதிகளவு அந்நிய செலாவணியை தேடித்தரும் உல்லாசப் பயணத்துறையும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. ஜுலை மாதத்தில் அமைக்கப்பட்ட புதிய அரசாங்கத்தில் இந்திய வம்சாவழியைச் சேர்ந்த ஒருவருக்கு மட்டும் இடம் வழங்கப்பட்டுள்ள போதிலும் அவருக்கு அமைச்சரவை அந்தஸ்து வழங்கப்படவில்லை. இந்தப் புதிய அமைச்சரவை புதிய அரசியல் அமைப்பு ஒன்றை தயாரிக்கும் எனவும் இரண்டு வருடங்களுக்குள் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதன் மூலம், சர்வதேச சமூகத்திலிருந்து கிடைக்கக்கூடிய நெருக்குதல்களிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்வதுதான் புதிய அரசாங்கத்தின் நோக்கம் ஆனாலும், இந்த நிலைப்பாட்டுக்கு சர்வதேச சமூகம் முழுமையான ஆதரவை தரவில்லை என்பது கவனிக்கத்தக்கது. முக்கியமாக மக்களால் ஜனநாயக ரீதியான தேர்தல் ஒன்றில் தெரிவு செய்யப்பட்ட சௌத்ரி, மேற்கொண்டு வரும் பிரச்சாரங்கள் சர்வதேச கவனத்தை அதிகளவுக்குப் பெற்றுள்ளது.

இந்நிலையில் தடுப்புக்காவல் கைதியாகவுள்ள ஸ்பைட்டின் விவகாரம் அந்நாட்டு அரசாங்கத்தை பெரிதாக்கியுள்ளது. இவ்விவகாரத்தில் எவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பது என்பது அரசாங்கத்துக்கு பிரச்சினையை கொடுக்கும் ஒரு விடயமாகவே உள்ளது.



**ஸ்பைட் அரசியலில் ஒரு நரித்தனமானவர், ஆபத்தானவர் என தற்போதைய ஆட்சியாளர்கள் கருதுவதும் தெரிகின்றது. அதனால் அவர் மீது ஏதாவது ஒரு வகையில், நடவடிக்கை எடுப்பதுதான் அவர்களது நோக்கமாகவும் உள்ளது.**

பிஜியில், வழமைக்கு மாறான முறையில் புரட்சி ஒன்றின் மூலம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட போது, ஸ்பைட் அரசியலில் சக்தி வாய்ந்த ஒருவராகவே கருதப்பட்டார். அதன் பின்னர் அவர் மேற்கொண்ட ஒவ்வொரு நடவடிக்கையின் மூலமும் அரசியலில் தந்திரமான காய்களை நகர்த்தக் கூடிய ஒருவராகத் தன்னைக் காட்டிக் கொண்டார். அதே வேளையில் பிஜியின் பூர்வீகக் குடிமக்களின் அதிகாரபூர்வமான ஒரு குரலாகவே அவருடைய குரல் வெளிப்பட்டது. தன்னுடைய கொள்கைகளில் முழுமையான நம்பிக்கை கொண்ட ஒருவராகவே அவர் வெளிப்பட்டார். இந்திய வம்சாவழியினரால் பிஜியின் பூர்வீகக் குடிமக்கள் ஒடுக்கப்படுகின்றார்கள் என்ற அவரது நம்பிக்கைதான் அவரது அரசியலுக்கே மூலதனமாக அமைந்தது.

நான் என்னவாக இருக்கவேண்டும் என பிஜியின் மக்கள் விரும்புகின்றார்களோ நான் அதனை ஏற்றுக் கொள்வேன் என பி.பி.சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் ஸ்பைட் தெரிவித்திருந்தார். அந்தளவுக்கு சுதேசிய மக்களின் தலைவராக அவர் தன்னை வெளிப்படுத்திக் கொண்டார். புரட்சியை அவர் மேற்கொண்ட போது அதற்கு மக்களுடைய ஆதரவு கிடைக்காது என கூறப்பட்டபோதும், அதனையிட்டு அவர் கவலையடைந்ததாக தெரியவில்லை. திடசங்கற்பமும் எதற்கும் அஞ்சாத தன்மையும் கொண்ட ஸ்பைட், செல்வாக்கு மிக்க அரசியல் குடும்பம் ஒன்றில் பிறந்தவர். 1987ல் இடம்பெற்ற புரட்சியை நடத்திய ரபுக்காவின் அரசாங்கத்தில் ஒரு சிரேஷ்ட உறுப்பினராக இருந்த, ஸாம்ஸ் ஸ்பைட்டின் மகன் தான் இவர். ஸாம்ஸ் ஸ்பைட் ஒரு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. புரட்சி மூலம் ஆட்சியை கைப்பற்றிய ரபூக்கா சில வருட காலத்தில் பதவியை இழந்தார்.

பிஜியின் மிகப் பெரிய வர்த்தக புள்ளியாக விளங்கிய ஜோர்ஜ் ஸ்பைட்டின் வர்த்தக முயற்சிகள், கடந்த வருடம் மகேந்திர சௌத்ரி பொதுத்தேர்தலின் மூலம் பதவிக்கு வந்ததன் பின்னர் பெரிதும் பாதிக்கப்பட்டது. பிஜியின் முக்கிய தொழில் துறைகளில் ஒன்றான தும்புத் தொழில் துறையுடன் தொடர்புபட்ட இரண்டு நிறுவனங்களின் தலைமைப் பதவிகளிலிருந்தும் ஸ்பைட் நீக்கப்பட்டார். முன்னைய ஆட்சியாளர்களால் இப்பதவிக்கு ஸ்பைட் நியமிக்கப்பட்டிருந்தார். இதனைவிட பிஜியில் விலையுயர்ந்த மரங்களுடன் தொடர்பு பட்ட வர்த்தக முயற்சி ஒன்றில் ஈடுபட்டிருந்த அமெரிக்க நிறுவனம் ஒன்றிலும் ஸ்பைட் முக்கிய பங்கை வகித்தார். சௌத்ரி அரசாங்கத்தின் கீழ் இந்தத் தொழில் துறையும் பாரியளவில் வீழ்ச்சியடைந்தது. இதனைவிட மோசடிக் குற்றச்சாட்டு ஒன்றின் பேரில் காப்புறுதி நிறுவனம் ஒன்றில் இவர் வகித்த பதவியிலிருந்தும் நீக்கப்பட்டிருந்தார். வர்த்தகத் துறையில் ஏற்பட்ட பாதிப்பு- பதவி நீக்கம் என்பன மகேந்திர சௌத்திரியைப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தை ஸ்பைட்டிடம் வளர்த்தது. அவுஸ்திரேலிய பல்கலைக் கழகம் ஒன்றில் வர்த்தகத் துறையில் பட்டம் பெற்றிருந்த ஸ்பைட் பட்ட மேற் படிப்பை அமெரிக்காவில் தொடர்வதற்காக அவரது தந்தையின் எஸ்.வி.ரி. கட்சியால் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இந்தப் பின்னணியில், பிஜியின் பூவீகக்குடிகளின் பெயரில் புரட்சியை ஜோர்ஜ் ஸ்பைட் அரங்கேற்றியிருந்தாலும், இதில் தனிப்பட்ட பழிவாங்கல்கள் சம்பந்தப்பட்டுள்ளது என்பதை மறைக்க முடியவில்லை. உண்மையில், பூவீகக் குடிமக்களின் உரிமைகள் என்ற கோஷத்தில் மறைந்திருந்து கொண்டு, தனது தனிப்பட்ட அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு ஸ்பைட் முனைந்துள்ளார் என்றே அவதானிகள் கருதுகின்றார்கள். தற்போதைய விசார ணைகளின் போது, ஸ்பைட்டை ஒரு பூர்வீக மக்களின் தலைவனாக ஏற்றுக் கொண்டு, நடத்துவதா அல்லது, தனிப்பட்ட நபரின் ஆட்சிக் கவிழ்ப்பு- தேசத் துரோகமாகக் கருதிச் செயற்படுவதா என்பதுதான் பிரச்சினையாகியுள்ளது.

ஸ்பைட் அரசியலில் ஒரு நரித்தனமானவர், ஆபத்தானவர் என தற்போதைய ஆட்சியாளர்கள் கருதுவதும் தெரிகின்றது. அதனால் அவர் மீது ஏதாவது ஒரு வகையில், நடவடிக்கை எடுப்பதுதான் அவர்களது நோக்கமாகவும் உள்ளது. அதற்கு சட்டத்தை எப்படிப் பயன்படுத்திக் கொள்வது என்பதுதான் இப்போதைக்கு அவர்களது பிரச்சினை!

# கறையான்கள்

*கதிர் சயந்தன்.*

தூக்கம் கலைந்து மெதுவாய்க்கண்களை கசக்கியபடியே எழுந்து பாயில் உட்கார்ந்தான் செந்தூரன். இராத்திரி பெய்த பெருமழை மேலே வேயப்பட்ட ஓலையி-னூடாக உள்நுழைந்து சாணம் போட்டு மெழுகிய நிலத்தில் ஆங்காங்கே தேங்கியிருந்தது. செந்தூரன் அண்ணாந்து நோக்கினான். வரிசையாய் வேயப்பட்ட எந்த அறிகுறியும் இன்றி கூரையின் மீது ஏதோ குப்பையை போட்டு விட்டது போல கிடுகுகள் சிதிலமடைந்து அவற்றின் ஆயுட்காலம் முடிவடைந்து விட்டதை கட்டியம் கூறி நின்றன.

போர்வையை உதறி எழுந்து பாயினைச் சுருட்டி வைத்து விட்டு எதேச்சையாய் திரும்பியவனின் கண்களுக்கு இரவு படித்து விட்டு பக்கத்தில் வைத்த இரு கொப்பிகள் மீது கறையான்கள் மேயத்தொடங்கியிருப்பது தெரிந்தது. பதறிப்போய் கொப்பிகளை எடுத்தான்.

"நல்ல காலம்... பார்க்காமல் விட்டிருந்தால் போச்சு... சனியன் பிடிச்ச கறையான்" செந்தூரன் வாய் விட்டுத்திட்டியவாறே கொப்பிகளை, அருகில் தடிகளால் வரிசையாய் அடுக்கப்பட்டு பொலீத்தீன் விரிக்கப்பட்டிருந்த தட்டினில் வைத்து விட்டு, வெளியில் வந்து சுவரோடு சாய்ந்து அமர்ந்து கொண்டான்.

விறாந்தைக்கு முன்பாக சின்னதாக ஒரு பந்தி இறக்கி அமைக்கப்பட்டிருந்த அடுக்களைக்குள் அம்மா ஈரம் ஊறிய தென்னம்பாளைக-ளோடும் பொச்சுமட்-டைகளோடும் போராடிக்-கொண்டிருப்பது தெரிந்தது. அப்பா வாசலில் உட்கார்ந்து தேனீர் குடித்துக் கொண்டிருந்தார்.

"என்னங்கோ... உப்பிடியே போனா மழை வெள்ளமெல்லாம் வீட்டுக்குள்ளை வந்திடும் போல இருக்கு. இந்த ஒரு ராத்திரி மழைக்கே சுவரெல்லாம் ஈரம் ஊறி கூரையெல்லாம் ஒழுகினால் மாரியிலை எப்படித்தாங்கப் போகுது? அம்மா கேட்டாள்.

"ஓம் நிமலா... கூரை வேய எப்படியும் ஒரு நூறு மட்டை கிடுகாவது வேணும். இங்கை ஒரு மட்டை இருபதுக்கும் முப்பதுக்கும் தான் போகுது. இந்த மாரிக்குச் சமாளிப்பம். பிறகு பார்க்கலாம்.. சரி... நான் வெளிக்கிடுறேன்." அப்பா எழுந்தார்.

"என்ன இந்த விடியக்காலையில வெளிக்-கிடுறியள்?"

"ம்... வெயிலுக்கு முதல் தொடங்கினாத்தான் ஒரு நூறு நூற்றம்பது தேங்காயாவது உரிக்கலாம். நான் வர்றன்." அப்பா எழுந்து நடந்தார்.

செந்தூரன் கிணற்றடி நோக்கிப் போனான். கிணற்ற டியில் நின்ற போது எதிர் வீட்டு பாரிஜாக்கா தன் பத்து வயது மகன் பாலுவை தூக்கத்திலிருந்து எழுப்புவது துல்லியமாகக் கேட்டது.

"பாலு... பாலு... எழும்பு... எழும்பிப்படி."

மாலையிலிருந்தே வெகுதொலைவில் கேட்கத் தொடங்கிய குண்டுச்சத்தங்கள் இரவு வரை தொடர்ந்து கொண்டிருந்தன. முன்னால் வைக்கப்பட்டிருந்த குப்பி விளக்கொளியில் உட்கார்ந்து செந்தூரன் படித்துக் கொண்டிருந்தான். நாளைக்கு அவனுக்குப் பரீட்சைகள் ஆரம்பமாக இருந்தன.

"பின்னேரத்தில் இருந்தே ஒரே சத்தமாக்கிடக்கு. ஒண்டுமா விளங்கேல்ல." அருகிலிருந்த அம்மா சொன்னாள்.

"ம்..." ஒற்றை வார்த்தையில் பதில் சொல்லிவிட்டு மீண்டும் பார்வையை புத்தகத்தினுள் பதித்த சற்று நேரத்தில் "பக்.. பக்" என்ற முன்னறிவிப்பு சத்தத்தோடு விளக்கு அணைந்து போனது.

"சரி.. நாளைக்குப் பாப்பம்." செந்தூரன் எழவும் அம்மா தடுத்தாள்.

"கொஞ்சம் பொறு... நான் பாரிஜாட்டைப்போய் எண்ணை வாங்கி வாறன்"

"வேண்டாமம்மா... நாளைக்குப்படிக்கலாம்." சலித்துக் கொண்டே கூறினான்.

"செந்து, நாளையான் சோதினைக்கு ஏதும் முக்கியமாப் பாக்கக்கிடக்கும். இரு." என்ற அம்மா சிறிது நேர மௌனத்தின் பின் சற்று உணர்ச்சிவசப் பட்டவளாய் தொடர்ந்தாள்." உன்ரை அண்ணன் தான் தொடர்ந்து படிக்காமல் போட்டான். நீயாவது படிச்சு பெரியாளா வர வேணும் எண்டது தான் எங்கடை விருப்பம்." அம்மா எழுந்து போனாள்.

ராகுலன், செந்தூரனை விடவும் நான்கு வயது மூத்தவன். செந்தூரனின் குடும்பம் ஊரிலிருந்து இடம்பெயர்ந்து வந்து, தெரிந்த சிலரின் உதவியால் இந்தத் தோட்டத்தில் இடம் கிடைத்து சின்னதான ஒரு வீட்டைக்கட்டி முடிக்கும் வரை அவன் தான். அப்பாவோடு சேர்ந்து சகல வேலைகளையும் பார்த்தான்.

காட்டிற்குச் சென்று தடிகள் வெட்டிக்கொண்டு வருவதாயிருந்தாலும் சரி, களிமண் குழைத்து வீட்டின் சுவரெழுப்புவதாயிருந்தாலும் சரி சகல பொறுப்புக்களையும தன்மேல் இழுத்துப் போட்டுக் கொண்டு ஓடித்திரிந்தவன் ஏனோ தெரியவில்லை ஒரு சில நாட்களில் ஒரேயடி யாகவே வீட்டை விட்டுப் போய்விட்டிருந்தான்.

செந்தூரன் நன்றாக ஞாபகமிருக்கிறது. ராகுலன் வீட்டை விட்டுப் போய் ஒரு வருடம் கழிந்திருக்கும். ஒரு நாள் பள்ளிக்கூடம் முடிந்து வீடு வந்தவன் வாசலில் மோட்டார் சைக்கிள் ஒன்று நிற்பது தெரியவே ஆச்சரியத்தோடு உள்ளே நுழைந்தான். ராகுலன் அம்மாவோடு பேசிக்கொண்டிருந்தான்.

"வாற மாசம்."

ராகுலனின் கேள்விகளுக்கு சிரத்தையின்றி பதிலளித்தவாறே "அதையே" வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தவன் கொஞ்ச நேரத்தில் அதைத் தொட்டுத்தூக்க முயற்சித் தபோது ராகுலன் தடுத்தான்.

"செந்து... வேண்டாம்."

"ஏனண்ணா?" என்பது போல இவன் பார்வையால் கெஞ்ச, அதை எடுத்து தன் மடியில் வைத்துக் கொண்டே கூறினான்.

"நெஞ்சை நிமிர்த்தி நாங்கள் சாகத்தான் போறம் எண்டு போய்ச்சாக எங்களுக்கு மட்டுமில்லை வேறு யாருக்கும் விருப்பமில்லைத்தான்... ஆனா என்ன செய்யிறது? ஒண்டு சொல்லுற னம்மா... நான் இந்த வழிக்கு விரும்பி வர வேயில்லை. தள்ளப்பட்டம். எல்லாவழியும் அடைக்கப்பட்ட போது எந்த வழிதான் இனி ஒன்று தள்ளப்பட்டம்."

செந்தூரனுக்கு ஆச்சரியமாயிருந்தது. இந்த ஒரு வருடத்தில் அண்ணன் நிறையவே பேசக்கற்றுக் கொண்டிருக்கின்றான்.

"வா... வா... என்னடா வெயிலுக்கு தொப்பி ஒண்டு போடக்கூடாதே?" ராகுலன் இவனைப்பார்த்துக் கேட்கவும் சந்தோசமாய் ஓடிப்போய் அவனருகில் அமர்ந்து கொண்டவனின் கவனத்தை பக்கத்தில் சுவரோடு சாத்திவைக்கப்பட்டிருந்த "அது" தான் முதலில் ஈர்த்தது.

"என்ன நல்லாப்படிக் கிறியோ?"

"ம்"

"சோதினை எப்ப?"

"நீ இதைத்தூக்கக் கூடாது எண்டுதான் நான் தூக்கினன்."

"ஓ... அவர் தூக்கக்கூடாதென்று இவர் தூக்கினாராம். நல்லா வசனம் பேசுறார்." அதுவரை அமைதியாய் இருந்த அம்மா செல்லமாய்க் கோபித்துக் கொள்ள, ராகுலன் பலமாகச் சிரித்தான்.

"ம்... நான்னு வருடங்கள் ஓடிவிட்டது." செந்தூரன் பெருமூச்சொன்றை விடுவித்துக் கொண்டான். எதிர் வீட்டில் அம்மாவின் குரல் கேட்டது.

"பிள்ளை பாரிஜா... ஒரு காப்போத்தல் மண்ணெண்ணை இருந்தாக்குடு பிள்ளை. போன முறை வாங்கினதையும் சேர்த்து நிவாரணம் வந்தவுடன் தாறன்."

வினாத்தாள்கள் கையளிக்கப்பட்டு, சில நிமிடங்கள் கடந்த போதும் செந்தூரனின் பார்வை வேறெங்கோ வெறித் திருந்தது. அவனது கண்கள் லேசாய்ப் பனித்திருந்தன.

இன்று அதிகாலையிலேயே யுத்தச்செய்தி வானொலியில் அறிவிக்கப்பட்டு, அப்போதிருந்த இறந்தவர் களின் விபரமும் வெளியிடப்பட்டுக் கொண்டிருந்தது. அம்மா வானொலியே கதியென அதனருகிலேயே உட்கார்ந்திருந்தாள். செந்தூரன் பரீட்சைக்கு புறப்படுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்த அக்கணத்தில்த்தான் அந்தப் பெயரும் காற்றில் கலந்து ஒலித்தது.

"திருமாறன் என்ற ழைக்கப்படும் உருத்திர மூர்த்தி ராகுலன் சூர்யா என்றழைக்கப்படும்.." வானொலி தொடர்ந்து அறிவித்துக் கொண்டிருக்க அம்மா அப்படியே சாய்ந்து அழுது அரற்றி மயங்கிப் போனாள். ஓடிப்போய் அப்பாவை அழைத்து வந்து அம்மாவின் மயக்கத்தை தெளிவித்து தொடர்பு கொள்ளுமாறு கூறப்பட்ட இடத்திற்கு அவர்கள் புறப்பட்ட போது செந்தூரனும் கூடவே புறப்பட, அப்பா தடுத்தார்.

"செந்தூரன் நீ இப்ப சோதினைக்குப் போ... முடிஞ்சாப் பிறகு அந்த இடத்திற்கு வா.. நாங்கள் முதல்ல போறம்."

"இல்லையப்பா... நானும் வாறன். சோதினை அடுத்த முறையும் பார்க்கலாம்."

"வேண்டாம் செந்து... நீ முதலில் சோதினைக் குப்போ..." இம்முறை அம்மா அழுது வீங்கிய கண்களோடு சொல்லவும், செந்தூரன் சம்மதித்தான்.

திடீரென எழுந்து விமானமொன்றின் பேரிரைச் சல் அவனது நினைவுத் தொடரை அறுத்தெறிய சுற்றும் முற்றும் பார்த்தான். அருகில் இருந்தவர்களது முகங்களில் பெருமளவு பதட்டம் குடிகொண்டி ருந்தது. சடுதியாய் விமானம் தாழப்பறந்து மேலெழும் இரைச்சலும் கூடவே தொடர்ந்து மூன்று குண்டுகள் வெடிக்கும் காதைப்பிழக்கும் சத்தமும் கேட்க, மாணவர்கள் அல்லோலகல்லோலப்பட்டு சிதறி வெளியே ஓடத் தொடங்கினார்கள்.

செந்தூரன் கட்டத்தை விட்டு வெளியே வந்து நின்று கொண்டான்.

"மிக அருகில் எங்கோ குண்டு விழுந்திருக்க வேண்டும்."

மீண்டுமொரு முறை விமானம் தாழப்பறந்து குண்டுகளை வீசிவிட்டு மறைந்து போகவும் சிதறிக்கிடந்த வினாத்தாள்களை எடுத்து வந்து மீண்டும் இருக்கையில் அமர்ந்து கொண்டவன் அருகிலிருந்த மாணவியைப்பார்த்தான். அவளது முகம் முழுவதும் வியர்ந்து கைகள் இலேசாய் நடுங்குவது போல் தெரிந்தது.

வெகு தொலைவில் குண்டுச் சத்தங்கள் மிக மெலிதாக இப்பொழுதும் கேட்டுக்கொண்டிருந்தன.


இரவு அம்மாவும் அப்பாவும் வீட்டிற்கு வரவில்லை. நாளையும் பரீட்சை என்பதால் செந்தூர னை மட்டும் அனுப்பியிருந் தனர். நாளைய பரீட்சைக்குப் படிக்கின்ற நிலையில் அவன் இல்லை. பாயினை விரித்துப் படுத்து நெடுநேரமாயும் தூக்கம் வராது புரண்டுக் கொண்டிருந்தவன் எப்பொழுது தூங்கிப் போனானோ மறு நாள் வெகு சீக்கிரமாகவே கண்விழித்துக் கொண்டான். இராத்திரி கனவினில் அண்ணாவின் முகம் அடிக்கடி வந்து போனது." நெஞ்சை நிமித்தி நாங்கள் சாகத்தான் போறம் எண்டு போய்ச்சாக எங்களுக்கு மட்டுமில்லை, வேற யாருக்குமே விருப்பமில்லைத் தான். ஆனா என்ன செய்யிறது?" அவனது வார்த்தைகள் எங்கிருந்தோ எதிரொலிப்பது போலவும், குண்டுகள் வீழ்ந்து புகை மண்டலத்தின் நடுவே எதிர்வீட்டுப் பாரிஜாக்கவின் மகன் இரத்த வெள்ளத்தில் மிதக்க அருகே அவன் வயதொத்தவர்கள் இவனைப் பார்த்து ஏளனமாகச் சிரிப்பது போலவும்...

"நேற்றைய சம்பவங்களின் பிரதிபலிப்பாக இருக்கும். என நினைத்துக் கொண்டே அருகிலிருந்த விளக்கை கொழுத்தி விட்டு எழுந்த வனின் கண்களுக்கு இரவோடிரவாக அருகிலிருந்த அந்தப் புத்தகத்தட்டின் பொலீத்தினையும் தாண்டி மேமெழுந்த கறையான்கள் இரண்டு மூன்று புத்தகங்களை சாப்பிடத் தொடங்கியிருப்பது தெரிந்தது.

மனதிற்குள் இனம் புரியாத ஒரு சினம் ஏற்பட்டது. புத்தகங்களை எடுத்து வைத்து விட்டு கறையான்களோடு சேர்த்து அந்த பொலீத்தினை மடித்து எடுத்துக்கொண்டு வெளியே வந்தவன் ஆவேசம் வந்தவனாய் அதைக் கீழே போட்டு கால்களால் மிதித்துத் தேய்க்கத் தொடங்கினான். இப்பொழுது பாரிஜாக்கா வீட்டில் பாலு எழுந்து உரத்த குரலில் படித்துக் கொண்டிருப்பது தெளிவாகக் கேட்டது.

> "நெஞ்சை நிமிர்த்தி நாங்கள் சாகத்தான் போறம் எண்டு போய்ச்சாக எங்களுக்கு மட்டுமில்லை வேறு யாருக்கும் விருப்பமில்லைத்தான்... ஆனா என்ன செய்யிறது? ஒண்டு சொல்லுறனம்மா... நான் இந்த வழிக்கு விரும்பி வரவேயில்லை. தள்ளப்பட்டம். எல்லாவழியும் அடைக்கப்பட்ட போது எந்த வழிதான் இனி ஒன்று தள்ளப்பட்டம்."





# பாரதியின் கவிதையியல்

டான நிலத்தைப் போல் அறிவில் உயர்ந்து நின்று உள்ளுணர்வில் அனுபவங்களை வாங்கிக் கொண்டு, உலகத்தைக் கவிக்கண்ணால் பார்த்து, ஓடைகளாகவும், சிற்றாறுகளாகவும்பாய்ந்து துள்ளி ஓடும் கவியாற்றலை, பாயவைக்கும் திறமை கொண்டவன் கவிஞன். இயற்கையின்

படைப்பிலே மனிதன் சிகரம் என்றால், மனிதனின் படைப்பிலே கவிதை உயர்ந்து நிற்கிறது. கவிஞனிடம் சிந்தனை இருக்கலாம், அழகுணர்ச்சி இருக்கலாம், ரசனை உணர்ச்சி இருக்கலாம், ஆனால் இவையெல்லாம் மட்டுமே கவிதையாகி விடாது. கவிதை இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டு நிற்கிறது. பாரதியைப் பற்றி வந்திருக்கிற இரண்டு

விமரிசனங்கள்–

1. பாரதி பெற்றது விளம்பரம்.

அவரை நாம் அசிங்கமாகக் கொண்டாடுகிறோம்.

2. பாரதியைப் பிடித்தக் கொண்டு

அனைவரும் வீணே

தொங்குகிறார்கள்.

இந்த மாதிரியான விமரிசனங்கள் பாரதி பற்றிய நம் பார்வையை இன்னும் ஆழமாக்க வேண்டி வந்துள்ளவை. பாரதி எப்படிப்பட்ட கவிஞன்? கம்பனையும், வள்ளுவரையும், இளங்கோவையும் - தனக்கு முன் இருந்த கவிஞர்களை வணங்கி, அவர்களைப் போற்றி அவர்களுக்கு விழா எடுக்க வேண்டும் என்று நினைத்த பரந்த மனத்தினன். தன் எழுத்துக்களுக்கு சரியான அங்கீகரிப்பு கிடைக்கவில்லை என்ற ஆதங்கம் அவனுள் நிறையவே இருந்தாலும், மராட்டியிலும், இந்தியிலும், வங்காளத்திலும், தெலுங்கிலும் இலக்கியத்தில் என்ன நடக்கிறது என்பதைப் புரிந்து, அந்த இலக்கியக் கர்த்தாக்களையெல்லாம் போற்றியவன். தன் பொருட்டுச் சேர்க்கப்படும் புகழ், புகழல்ல. தேசமுழுமைக்கும் சேர்த்துக் கிடைக்கும் புகழே பெரிது என்று நினைத்து இறுமாந்திருந்தவன். தன் நாட்டுக் கவிஞர்களை மட்டும் என்று இல்லை, ஷெல்லி, பைரன், ஷேக்ஸ்பியர், விட்மன் என்று பிறகவிஞர்களையும் பாராட்டுவதில் கொஞ்சம் கூட தயக்கம் காண்பிக்காதவன். குமரகுருபரனுக்குப் பிறகு நானூறு ஆண்டுகளாக தேங்கிக் கிடந்த நமது கவிமரபை மாற்றி, புதுவழி காட்டி, கவிதைக்கு உயிரூட்டியவன். விண்ணை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்த கவிஞர்களால் மொழி சிறைப்பட்டுக் கிடந்த வேளையில், மொழியை வெளியே கொண்டு வந்து, அகில இந்தியக் கண்ணோட்டத்துடனும், அறிவியல் கண்ணோட்டத்துடனும் மொழியை உயிர்ப்பித்தவன். வெறும் தமிழ்ப் புலமையை மட்டும் துணைகொண்டு பேசாமல், விஞ்ஞானக் கருத்துக்களை பாடலில் அமைத்து, கவிதையை மண்ணுடன் தொடர்பு கொண்ட ஒன்றாக மாற்றியவன். யாப்புத் தளையிலிருந்து விடுபட்ட கவிஞர்கள் இன்று புதுக்கவிதை எழுத முடிவதென்றால், அதற்கு முன்னோடியாக, மூலமாக இருந்து வழிகாட்டியவன் பாரதி. மகாகாளியையும், சக்தியையும், மற்ற தெய்வங்களையும் பாடின பாரதி, கடவுள் வணக்கம் என்பதையே ஒரு குறியீடாகப் பயன்படுத்தி, மக்களை உலகைப் பார்க்கத் தூண்டினான். அவர்களிடம் சமூகப் பிரக்ஞையை ஏற்படுத்த முனைந்து வெற்றி பெற்றான். மகாசக்தி என்பது மக்கள் சக்தி என்பது புரியாமல், சமூகப் பார்வையை, சமூகக் கடமையை நமது சனாதனதர்மம் ஏற்க வேண்டும் என்ற புதிய விழிப்பை அறியாமல், பாரதியை நாம் குருடர்களாய் இருட்டில் நின்று கொண்டு சாடுகிறோம். மக்கள் மொழிக்கும் இலக்கிய மொழிக்கும் உள்ள வேறுபாடு மறைய, வெகு ஜனங்களையும் தனது கவிதைகள் சென்று எட்ட வேண்டும்; அதேசமயம் காவியத்தின் அழகும் கெடாமல் இருக்க வேண்டும் என்று விரும்பி, வார்த்தைகளில் தெளிவையும், எளிமையையும் புகுத்தியவன் பாரதி. பின்னால் வந்த இலக்கியங்கள் ஏற்படுத்திய நடை தான் மக்கள் மொழி வேறு, இலக்கிய மொழி வேறு என்றாக்கியது. பாரதி தான் துருவ நட்சத்திரமாக நின்று வழிகாட்டும் ஒருவனாகத் தன்னைப் பாவித்துக் கொள்ளவில்லை. தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டு வரும் படைப்பாளிகளுக்கு வெறும் ஒரு கை காட்டியாக மட்டுமே தான் இருக்க விரும்பினான்.

மனத்தில் தோன்றியதைக் கொட்டும் பழக்கமுள்ள பாரதி, "வசன கவிதை" என்ற சொற்பிரயோகத்தைத் தான் எங்கும் குறிப்பிட்டு எழுதவில்லை. வசனத்தில் பல பரிசோதனை முயற்சிகள் செய்து பார்த்தவன். இதனாலேயே "ஞானரத"த்தையும், "வசன கவிதை"யையும் கூட இயற்றினான். தொல்காப்பிய காலத்திலிருந்த மரபை மீறி புது முயற்சிகள் செய்தல் தமிழ்க் கவிதையில் வழக்கமாயிருக்கிறது. ஆனால் எந்தக் கவிஞனுக்கும் தான் எழுதின கவிதையைப் பற்றி குறிப்பெழுதவாய்ப்புக் கிடைக்கவில்லை. கவிதையின் அங்கலட்சணங்களைக் கூறும்




நூல்கள் இருக்கின்றன. ஆனால் அதன் ஆத்ம லட்சணத்தை கவிஞனுக்கும், 'இயற்கைக்கும் தோன்றும் சம்போகத்தையோ, இதனால் கவிதை உருவாகும் விதத்தைப் பற்றியோ, கவிஞன் கவிதையை உருவாக்கப்படும் பிரசவ வேதனையைப் பற்றியோ எந்தக் கவிஞனும் சொல்லவில்லை, பாரதியைத் தவிர. பாரதி மட்டுமே 112 இடங்களில் கவிதை பற்றிய குறிப்புகளைத் தருகிறான்.

தெளிவுறவே அறிந்திடுதல், தெளிவுறவே மொழிந்திடுதல், சிந்திப்போர்க்கே ஆனந்தக் கனவு பல காட்டல், (மேலும்) கண்ணீர்த்துளி வர உள்ளுருக்குதல் என்று இவை யாவையுமே அன்னை அருளாக, கவிதை செய்யும் தொழில் செய்யவரும் கருவிகளாக பாரதியின் பார்வையில் பட்டன. கவிதையைப் பற்றி பாரதி கொண்டிருந்த கருத்துக்களை தொகுத்தாலே அவனது கவித்துவமும், பார்வையும் நன்கு புரியும்.

**நன்றி - (சுபமங்களா வாசகர் வட்டம் சார்பில், பேராசிரியர். தி. வேணுகோபால் நடத்திய பாரதி தொடர் சொற்பொழிவிலிருந்து... தொகுப்பு- சீதாலஷ்மி விஷ்வநாத்)**

**சுப்பிரமணிய பாரதியின்**
**79வது ஆண்டு**
**இறந்த நாள் நினைவாக**



கலாநிதி

## விக்ரமபாகு கருணாரத்ன பார்வையில்

தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ் கட்சிகள் பலவும், தமிழ்த் தலைவர்கள் பலரும் தேர்தல் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியோடு இணைந்து கொண்டுள்ளனர். தோட்டத் தொழிற்துறையோடு சம்பந்தப்பட்ட கட்சிகளில் சிலரும் அவர்களோடு சேர்ந்து கொண்டுள்ளனர். முக்கியமாக மனோ கணேஷன், அவர்களோடு இணைந்து கொண்டது சம்பந்தமாக தோட்டப் பகுதி போராட்டப் போக்குடைய இடது சார்புக் குழுக்களிடையே தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது . மயில் அடையாளத்துக்கு உரிமை கூறும் N.W.W வைச் சேர்ந்தபலர் "இது பாரிய காட்டிக் கொடுப்பொன்று" என என்னிடம் கூறினர். தோழர் வாசுதேவ நாணயக்காராவும் தோழர் ரஹ்மானும் நானும் தோழர் மனோ கணேஷனை அழைத்து இடது சார்பு முன்னணியொன்றாக ஒன்று சேர்வோம் எனக் கலந்துரையாடினோம். பாராளுமன்றத்தை கலைத்ததின் காரணத்தால் அது முடியாமல் சென்றது. எவ்வாறாயினும் உத்தேசிக்கப்பட்ட முன்னணிக்கு "இடது சார்பு" என அடையாளமிடுவது பற்றி மனோ தொடர்ந்து எதிர்ப்பைத் தெரிவித்தார். "ஜனநாயக முன்னணி" என அடையாளமிட அவருக்குத் தேவையாக இருந்தது. இவ்வாறான ஒரு பெயரை இடுவது ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சார்பானவர்கள் என நான் அவரிடம் கூறினேன். நான் அந்தச் சந்தர்ப்பத்திலேயே நினைத்துக் கொண்டேன், மனோவினுடைய முயற்சி ஐ.தே.கட்சிக்குத் தாவுவதாக இருக்க வேண்டுமென்று.

ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி இறுக்கமானதாக நோக்கும் என மனோ கணேஷன் நினைப்பது பற்றி என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. இவைகளைப் பற்றி நினைத்துப் பார்ப்போமாயின் ரணிலின் மாயங்களைப் பற்றி எங்களால் விளங்கிக் கொள்ள முடியும். சென்ற 17ம் திகதி பொரளையில் தாய் நாட்டை பாதுகாக்கும் அமைப்பின் கூட்டமொன்று நடைபெற்றது. இந்த சிங்கள இனவாதிகளின் கூட்டத்தின் பிரதான பேச்சாளராக இருந்தவர் ரணில் விக்கிரமசிங்காவாகும். உண்மையாகவே, அன்று அக்கூட்டத்திற்கு ஐ.தே.க. சமூகமளிக்காவிடில் அன்று கூட்டமொன்று நடந்திருக்கவே மாட்டாது. அதனோடு ஒப்பிடும் போது இனவாதிகளுக்கு சக்தியையளித்து முன்கொண்டு செல்வது ரணில் விக்ரமசிங்கா அவர்களேயாகும். அதனோடு சேர்ந்து தான் அதிகாரத்துக்கு வந்தால் தமிழ் மக்களுக்கு சலுகைகள் வழங்கப் போவதாகவும் கூறுகின்றார். இருந்தாலும் இக்கட்சிகள் ரணிலோடு இணைந்துள்ளன. இவைகளுக்காகத் தான் என நான் நினைக்க மாட்டேன். புலிகள் ஐ.தே.கட்சியை வெற்றிக் கொள்ள உதவி செய்வதாக அவர்கள் நினைக்கிறார்கள், போலும். ஜனாதிபதித் தேர்தலின் போது புலிகள் ரணிலுக்கு உதவி செய்தனர் எனக் கதைக்கின்றனர். சந்திரிகா குண்டுத் தாக்குதலின் போது, மரணித்திருந்தால் ரணில் வெற்றிபெற இடமிருந்ததெனவும் வாதிக்கின்றனர். புலிகள் இயக்கம் ரணிலை வெற்றியடையச் செய்ய முயற்சித்தார்கள் என்று இதனாலேயே அவர்கள் கூறுகின்றனர்.

1994ம் ஆண்டு சந்திரிகாவின் வெற்றிக்கு, புலிகள் உதவி செய்தனர் எனவும் வாதிட இடமுண்டு. பிரேமதாஸா, காமினி போன்றோர் கொலை செய்யப்பட்டதால் சந்திரிகாவுக்கு சாதகமாக அமைந்தது. உண்மைதான். இதன்படி, இந்த முறை அவ்வாறே ஐ.தே.கட்சிக்கு புலிகள் உதவி செய்வதாக சிலர் வாதிக்கின்றனர். எப்படியும் ஒரு அரசாங்கம் சரிந்து வீழ்ந்து புதிய அரசாங்கமொனறு உருவாகும் போது, வட கிழக்கு யுத்த திட்டங்களில் சிக்கல்கள் உருவாவதுண்டு . அதன்படி புலிகளுக்கு ஓரளவு இலாபம் கிடைக்கலாம். அவ்வாறின்றி தூர நோக்கோடு சிந்திக்கும் போது சந்திரிக்காவுக்குப் பதிலாக அதிகாரத்துக்கு வந்ததென்று தமிழ் மக்களுக்கு கிடைக்கும் நன்மைகள் பற்றி என்னால் நினைத்துப் பார்க்க முடியாது.

இந்த இரண்டு சாராருக்கும் எதிராகவும், இனவாதிகளுக்கு எதிராகவும், தொழிற்சாலைகளிலும் பாரிய போராட்டமொன்று தற்போது ஆரம்பமாகியுள்ளது. 3000 ரூபா அதிக சம்பளத்திற்கான போராட்டமொன்று இப்போது கிளர்ந்தெழுந்துள்ளது. அதனைச் சிதைத்தெறிய தேர்தல் சூட்டினால் முடியாது போயுள்ளது. சென்ற செப்டம்பர் 1ம் திகதி நடைபெற்ற இரண்டாவது கட்டமும் வெற்றியளித்துள்ளது. இப்போது பொ.ஜ.முன்னணியும், ஐ.தே.க கட்சியும், ஜே.வி.பி.யும் ஒன்றாக இணைந்து இது பற்றி என்னவென்று தெரியாமல் கலவரமடைந்த நிலையில் இருக்கின்றனர். காரணம், சாதாரணமாக தேர்தல் ஒன்று வந்தால் வகுப்புவாதப் போராட்டங்கள் இடையே நிறுத்தப்படும். இந்தப் போராட்டம் அது போன்றல்ல. இந்த மூன்று கட்சிகளும் முயற்சிப்பது இந்தப் போராட்டத்தை இடையில் நிறுத்திவிட்டு, தேர்தல் அரசியலில் ஈடுபடுவதற்கு இருந்தாலும் அது முடியாமல் போயுள்ளது. வடகிழக்கு யுத்தத்தைக் காட்டிப் பயங்காட்டினாலும் இந்தப் போராட்டம் நின்று விடுவதாக இல்லை. 3000 ரூபா அதிக சம்பளத்தைப் பெறுவதற்கான போராட்டமே தற்போது முன் கொண்டு செல்லப்படுகிறது.

வட கிழக்கு தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு நிறைவான ஒத்துழைப்பு கிடைப்பது இந்தச் சம்பள உயர்வுப் போராட்டத்தின் மூலமேயாகும். இது யுத்த செலவுகளுக்கு நேரடித் தாக்கங்களை ஏற்படுத்தும் போராட்டம் அரசாங்கம் விஷேட பொலீஸ் பிரிவொன்றை ஏற்படுத்தி அது பற்றி ஆராய்ந்து பார்க்க உத்தரவிட்டுள்ளமை அதனாலேயேயாகும்.


சுதந்திரமான
நியாயமான
தேர்தலுக்காக
அர்ப்பணிப்புடன்
செயற்பட
மஞ்சள் ரிபன் ஒன்றை
அணியுங்கள்
அணிவியுங்கள்
கட்டுங்கள்.
ஜனநாயகத்திற்கான அமைப்பு

# அதிகரித்துவரும் மாணவர் மீதான அத்துமீறல்கள்

இன்று நாடு வன்முறைகள் மலிந்த பூமியாக மாறிவருகின்றது. சிறுவர், முதியோர், பெண்கள் போன்ற பிரிவினர்கள் மீது பல்வேறு வகைகளில் வன்முறைகள் புரியப்படுகின்றன. அண்மைக் காலமாக மாணவர்கள் மீதான வன்முறைகள் அதிகரித்து, காணப்படுகிறது. வடக்கு கிழக்கு பகுதிகளில் யுத்தமே மாணவ சமுதாயத்திற்கு எமனாக மாறியுள்ளது. தென் இலங்கையில் சமூக பொருளாதார காரணிகள், மாணவர் களை கசக்கி பிழிகின்றன.

அண்மையில் விபுலானந்த வித்தியாலய மாணவன் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் கொல்லப் பட்டுள்ளார். இப்பாதகச் செயலை புரிந்தவர்கள் யாரென்று தெளிவாகவில்லை. ஆனால் அண்மையில் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட கல்லூரி மாணவன் சோம சுந்தரம் சஜ்ஜீவனின் நெருங்கிய நண்பனாக ஜெயராஜ் இருந்துள்ளார். இம் மாணவன் தனது சகோதரனுடன் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் இப்பரிதாக முடிவுக்கு இலக்காகி உள்ளார்.

கடந்த 18.02.200 திகதியன்று மட்டக்களப்பு களுவங்கேணியில் மாணிக்கவேல் விஜதர்சன் என்ற மாணவன் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரியவருகிறது. இவரின் கொலைக்கு இராணுவமே பொறுப்பு என்று இறந்தவரின் தாயார் தெரிவித்துள்ளார். போரின் உக்கிரத்தால் வடக்கு கிழக்கு மாணவ சமுதாயத்தின் மீது புரியப்படும் ஏனைய வன்முறைகள் யாவும் வெளியே வராது அமுங்கிப் போய்க் கிடக்கிறது.

இதேவேளையில் தென் இலங்கையில் சமூக பொருளாதார காரணிகளால் மாணவ சமுதாயம் பல்வேறுபட்ட கொடுமைகளுக்கு உள்ளாகி வருகின்றது. கொலன்னாவைப் பகுதியில் சபுன் குமார என்ற 12 வயது மாணவனை ஈவிரக் கமற்ற கொலைக்காரன் ஒருவன் கொலை செய்து விட்டு உடலை சேற்றுக்குள் புதைத் துள்ளான். இறந்த மாணவனின் தாயாருக்கும் கொலைக் காரனுக்கும் ஏற்பட்ட வாய்த்தக் கத்துக்கு பலிவாங்கும் நோக்குடன் இக்கொலை நடந்துள்ளது.

கடவத்தை பகுதியில் அநாதை இல்லமொன்றில் படித்து வந்த அனுசியா என்ற மாணவியை காப்பகத்தில் உள்ளோர் பாலியல் வல்லறவுக்கு உள்ளாக்கியுள்ளனர். இவ் மாணவிக்கு ஏற்பட்ட நோய்களுக்கு காப்பக நிர்வாகிகள் உரிய சிகிச்சை வழங்கவில்லை. இதனால் மாணவி ராகம வைத்திய சாலையில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். பண்டாரகம பகுதியில் வறுமை தாங்க முடியாத இளம் தாய் தனது இரண்டு குழந்தைகளையும் வெட்டி கொன்று விட்டு தானும் தற்கொலை செய்துள்ளார். வியகம பகுதியில் 27 மாணவர்கள் தடுப்பு காவலில் உள்ளனர்.

அங்கிரிய கல்ல கொஸ்கின்ன என்ற இடத்தில் 11 வயது நிரம்பிய மாணவனான விஜித்திர பண்டார சுதந்திரமாக பட்டம் பறக்க விட்டுக் கொண்டிருக்கும் போது கொலை செய்யப்பட்டுள்ளான். இதே போல் வேறுபகுதியில் 11 வயது மாணவனை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கிய 24 வயது நிரம்பிய காமுகன் ஒருவன் பின்பு அம்மாணவனை கொலையும் செய்துள்ளான். மின்னேறியா பகுதியில் நிறை போதையில் வந்த தந்தையால் சரிதா பத்மினி என்ற மாணவி பரிதாபகரமாக கொலை செய்யப்பட்டுள்ளார். தந்தையார் தாயாரை கத்தரிக்கோலால் தாக்கும் போது இடையே புகுந்ததால் இம்மாணவிக்கு இந்நிலை ஏற்பட்டுள்ளது. இன்று இந் நாட்டிலே வறுமை, பாலியல், வாய்த்தர்க்கம், போதை போன்ற பல்வேறு காரணிகளால் மாணவ சமுதாயத்திற்கு மரணம் ஏற்படுகின்றது. கடந்த ஓகஸ்ட் மாதத்தில் மட்டுமே இத்தகைய துயர நிகழ்வுகள் ஏற்பட்டுள்ளன.

இலங்கை பொருளாதாரத்தை மறு சீரமைக்கின்றோம் என கூறிக் கொண்டவர் களால் இன்று ஏற்படுத்தப்பட்ட நாசமே இன்று மக்கள் படும் துயரத்திற்கும் காரணமாகியுள்ளது. மனித கூட்டத்தில் பெரும் பகுதியினர் மனிததூசுகளாக மாற்றப்பட்டுள்ளனர். இதனால் கொலைகள் மிக் மலிவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சமூகத்தின் ஏற்றத்தாழ்வு மிகப்பெரிய இடைவெளியாகியுள்ளது. கீழ் மட்டத்தில் உள்ளவர்களுக்கு இருந்த சமூக பாதுகாப்புகள் அனைத்தும் துடைத் தெறியப் பட்டுள்ளன. இதனால் பல் வேறுபட்ட சமூக கொடுமைகளுக்கு மனித சமுதாயம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

**என். ஜனகன்**

# பத்திரிகையாளர் மீது பாய்ந்த அம்மணிகள்

கொழும்பு இந்து மகளிர் மன்றம் கொள்ளுப்பிட்டியிலுள்ள முதியோர் இல்ல கட்டிட நிதிக்காக அண்மையில் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் தென்னிந்திய நடிகை ரேவதியை அழைத்து வந்து கலை நிகழ்ச்சியொன்றை நடத்தியது.
இதில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டு, சென்ற தமிழ், சிங்கள பத்திரிகையாளர்களை நிகழ்ச்சி அமைப்பாளர்களான இந்து மகளிர் மன்னிக்கவும் அம்மணிகள் அநாகரிகமாக நடத்தியுள்ளார்கள். அது மட்டுமன்றி புகைப்படப்பிடிப்பாளர்களை படமெடுக்க விடாமலும் தடுத்துள்ளார்கள்.
இந்த அம்மணிகள் பத்திரிகையாளர்கள் மீது நடத்திய பாச்சல் மிகவும் கண்டிக்கப்பட வேண்டியதொன்றாகும். அதேநேரம் தென்னிந்தியாவிலிருந்து வந்த நடிகை ரேவதி தமிழில் பேசி சபையோரின் கரகோஷத்தைப் பெற இந்த அம்மணிகளோ நுனிநாக்கில் ஆங்கிலம் பேசி சபையோரின் வெறுப்பையும் வாங்கிக் கட்டிக் கொண்டார்களாம்.

# புதிய முகங்களின் தேர்தல் கால பூச்சாண்டிகள்

கடந்த 17 வருடங்களுக்கு மேலாக வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் துன்பங்களையே தொடர் வரலாறாக்கிக் கொண்டு துவண்டு போயிருக்கும் இவ் வேளையில் மக்கள் 11வது பாராளுமன்ற தேர்தலை சந்திக்கவுள்னர். இவர்களின் வாக்கு சீட்டுகளை நம்பி ஜனநாயக வழிக்கு திரும்பியுள்ளதாக கூறிக் கொள்ளும் தமிழ் கட்சிகள் வடக்கு கிழக்கில் சகல பகுதிகளிலும் போட்டி போடுவதற்கு தயாராகியுள்ளன. வடக்கு கிழக்கில் தொடரும் போர் நடவடிக்கைகளினால் இடப்பெயர்வுகளும் உயிர் இழப்புகளும் பட்டினிச் சாவுகளும் மென்மேலும் நம்மை வோதனைக் குள்ளாக்கியே வருகின்றன. அனர்த்தனங்களும் அவலங்களுமே வாழ்வாக தமிழினம் அழிந்து கொண்டிருக்கிறது. ஆனால் தமிழ்க் கட்சிகளோ இது பற்றி எந்தச் சிந்தனைகளும் அற்றவர்களாகவே செயற்படுகின்றனர். இவை அனைத்தும் பாராளுமன்ற ஆசனத் துக்கே ஆகும்.

அம்பாறை, மட்டக்களப்பு தொகுதிகளில் போட்டியிடுவதற்கென தமிழ் கட்சிகள் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ள அதே வேளை, இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் வாழும் மக்கள் பொருளாதார நெருக் கடிகளாலும் பாதுகாப்புக் கெடுபிடி களாலும் தேர்தல் குறித்து பெரிதாக. அலட்டிக் கொண்டதாக தெரிய வில்லை. தேர்தலில் தமிழ்க் கட்சிகள் அக்கைகாட்டி வருகின்றன. மக்கள் ஆதரவு தங்களுக்குண்டு என கூறிக் கொண்டு ஏழுக்கும் மேற்பட்ட தமிழ் கட்சிகள் களத்தில் குதித்துள்ளன. ஆனால் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் யுத்த கெடுபிடியின்றி அமைதியான சுமூகமான வாழ்வு எங்கே எப்போது என ஏங்கிக்கொண் டிருக்கின்றனர்.

எது எப்படியிருந்தாலும், வடக்கு கிழக்கில் 1977ம் ஆண்டுக் காலப்பகுதி வரை நடைபெற்ற தேர்தல்கள் ஓரளவு ஜனநாயக சூழலிலேயே இடம்பெற்றன. ஆனால் அதற்கு பிற்பாடு இடம்பெற்ற அனைத்து தேர்தல்களும் ஊழல் நிறைந்த வையாகவே இருந்தன. அரசியற் கட்சிகளும் மக்களும் சுயமாக செயற்படக் கூடிய நிலைமைகள் இருக்கவில்லை. ஆயுதக் கலாசாரமே அங்கு நிலவியது. இதனால் நேர்மை யற்ற முறையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவா னார்கள். இதே போன்று 11வது பாராளுமன்ற தேர்தலும் ஊழல் மோசடி நிறைந்த தாகவே அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

வடக்குக் கிழக்கில் மொத்தம் 31 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள் ளார்கள், தமிழ்க்கட்சிகள் ஒரு சின்னத்தின் கீழ் போட்டியிட்டால் 22 உறுப்பினர்களை தெரிவு செய்ய முடியும். ஆனால், தமிழ் கட்சி களிடையே ஏற்பட்டுள்ள போட்டியில் தமிழ் பிரதிநிதிகள் அம்பாறை, திருகோணமலை, மாவட்டங் களிலிருந்து தெரிவு செய்யப்படுவது கேள்விக் குறியாகியுள் ளது.

இம்மக்களின் வாக்குகளை பெறுவதே இத்தமிழ் கட்சிகளின் நோக்கமாகக் காணப்படுகின்ற அதே வேளை இவர்களி டையே ஒற்றுமை சீர்குலைந்து போய் உள்ளதையும் எப்படி தமிழ் மக்களின் பிரதி நிதிகளாக இவர்கள் வரமுடியும் என்றும் தமிழ் மக்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

மறுபுறம் யாழ் மாவட்டத்தில் வேட்புமனு தாக்கல் செய்துள்ள புதிய ஜனநாயக கட்சியினர் கடந்த காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை கேலித்தனமாக பேசிவிட்டு இன்று தேர்தல் களத்தில் ஆசன சுகத்திற்காக இறங்கியுள்ளனர். அன்று முதலாளித்துவ பாராளுமன்ற அரசியல் சூதாட்டத்திற்கான மற்றொரு களம் என்று கூறி வந்தவர்கள் இன்று தேர்தலில் குதித்துள்ளனர். இது ஒரு நேர்மையான முயற்சியா? குறுகிய பாராளுமன்ற அரசியலா? இது ஒரு வேடிக்கையே. யுத்தமும் வன்முறைகளும் இம்மக்களை துன்புறுத்தும் வேளைகளில் கொழும்பில் இருந்து. கொண்டு பத்திரிகைகளில் அறிக்கை விட்டதும் வடக்கு கிழக்கு மக்களின் கடந்த கால துயரங்களைப் பற்றி பேசியதெல்லாம் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்குத்தான் என்பது இப்போது புரிகின்றது. அதுவும் கடந்த பொதுத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற வாசுதேவ நாணயக்கார தனது பதவிக்காலம் முடியும் தறுவாயில் மீண்டும் பாராளுமன்றம் செல் வதற்காகவே புதிய ஜனநாயக இடதுசாரி முன்னணியை தோற்று வித்தார். இதே முன்னணியில் தான் புதிய ஜனநாயக கட்சியினர் போட்டியிடுகின்றார்கள். யாரைத்தான் நம்புவது என்பது தமிழ் மக்களை பொறுத்தவரை ஒரு குழப்பமான நிலைதான்.

தேர்தல் முடிவுகள் எப்படி அமையும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். இத்தேர்தல் மூலம் தமிழ் மக்களின் வாக்குகளை பெறவுள்ள தமிழ் கட்சி உறுப்பினர்கள் இனியாவது பேரினவாதக் கட்களுக்கு துணைபோகாது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைக் காண்பதற்கு இவர்கள் தம்மாலான பங்களிப்பை நல்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் பேரவா ஆகும். அதை விடுத்து கடந்த கால நிலை தான் இனியும் தொடருமாயின் வரலாறு இவர்களை மன்னிக்கும் என்பதை நாம் ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது.

**நம்பிராஜன்**

# கொழும்பு புகைவண்டியில் திட்டமிட்டு திருட்டு தமிழ் மக்களே அவதானமாக இருங்கள்

வவுனியாவிலிருந்தும், கொழும்பில் இருந்தும், புறப்படுகின்ற இரவு தபால் புகை வண்டிகளில் திட்டமிட்டு திருட்டுக் குழுவொன்று கொள்ளையடிக்கின்றது.

இத் திருடர்கள் பிரயாணிகள் போல் புகை வண்டியில் பயணம் செய்கின்றனர். பிரயாணிகள் ஆழ்ந்து நித்திரையானவுடன் அவர்களது உடமைகளை கொள்ளையடிக்கின்றனர். இரவு 1.30 மணிக்குப் பின்பு தான் இவர்கள் தம் கைவரிசையை காட்டுகின்றனர். குறிப்பாக அனுராதபுரம், புதிய நகரம், சாலியபுர புகையிரத நிலையங்களிலேயே இக் கொள்ளைச் சம்பவங்கள் கூடுதலாக நடைபெறுகின்றன. சில பெண்களின் கழுத்தில் உள்ள நகைகள் கூட இவ்விதத்தில் கொள்ளையடிக்கப்படுகின்றன. முக்கியமாக தமிழ் பிரயாணிகளிடம் மட்டுமே இவ்விதம் கொள்ளையடிக்கப்படுகின்றது. சிலர் சி.ஐ.டி பொலிசார் போல் நடித்து தம் கைங்கரியத்தை செய்கின்றனர். புகையிரத சிற்றூண்டிச்சாலைக்கு போவோர் மிரட்டப்பட்டு அவர்களது பணப்பேஸ் அபேசாக்கப் படுகின்றது . ஜன்னல் வழியாக தலையை நீட்டும் தமிழ் பெண்களின் கழுத்தில் உள்ள நகைகள் பறித்தெடுக்கப்படுகின்றது. இதனை கவனத்தில் எடுப்பார் எவரும் இலர். தமிழ் மக்களே நீங்கள் தான் கவனமாக இருக்க வேண்டும்.

# பயோடேட்டா

| | |
|---|---|
| கௌரவப் பெயர் | : ஒற்றைக் கண் பக்கிரி |
| அடையாளம் | : சாராய நெடி |
| தகுதி | : பாதாள உலகத் தொடர்பு |
| நிரந்தரத் தொழில் | : கூலிக்கு கொலை செய்வது |
| பெற்றோர்கள் | : பார்த்ததில்லை |
| நண்பர்கள் | : அரசியல்வாதிகள் |
| எதிரிகள் | : பொலிஸ்காறர்கள் |
| பொழுது போக்கு | : அடிக்கடி சிறைக் கம்பிகளை எண்ணுவது |
| எரிச்சல்படுவது | : வைத்த குறி தவறும்போது |
| கவலைப்படாதது | : ஜெயில் வாசம் |
| ரசிப்பது | : சிதைந்து போன உடல்களை |
| விரும்புவது | : போதைப் பொருட்களை |
| ஒரே சந்தோஷம் | : தேர்தல் கால ஓடர்களை நினைத்து |



தொடர்- 12

# அவன் விதி

மிகயீல் ஷோலகவ்



"ஜெர்மனியர் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் முதலில் என்னை நொறுங்கப் புடைத்தார்கள். பிறகு நாய்களை ஏவிவிட்டார்கள். அவை என் உடம்பைக் குதறி யெறிந்து விட்டன. சதை துண்டு துண்டாகப் பிய்ந்து விழுந்தது. முண்டக் கட்டையாக, ரத்தமயமான உடம்புடன் என்னை முகாமுக்குத் திரும்பவும் இட்டுச் சென்றனர். தப்பியோட முயன்றதற்காக ஒரு மாதம் தனிக் கொட்டடியில் அடைத்து வைக்கப்பட்டேன். இவ்வளவுக்கு பிறகும் உயிருடன் தான் இருந்தேன்... எப்படியோ என் உடலில் உயிர் தங்கியிருந்தது!

"கைதியாகி நான் பட்ட தொல்லையெல்லாம் உமக்குச் சொல்வது கிடக்கட்டும், நினைத்தாலே உள்ளமெல்லாம் பதறுகிறது. அங்கே ஜெர்மனியில் நாங்கள் அனுபவிக்க வேண்டியிருந்த மிருகத்தனமான சித்திரவதைகளை எண்ணிப் பார்த்தால், அந்த முகாம்களில் சித்திரவதைப் படுத்திக் கொல்லப்பட்ட எனது எல்லாத் தோழரையும் நினைத்துக் கொண்டால், நெஞ்சு வீங்கித் தொண்டைக் குழிவரையும் வந்து அடிக்கிறது; மூச்சுத் திணறுகிறது....

"அந்த இரண்டு ஆண்டுகளிலும் எங்களை மந்தை விரட்டுவது போன்று இங்குமங்கும் அவர்கள் இழுத்தடித்தது இருக்கிறதே- அடேயப்பா! ஒரு முகாமிலிருந்து இன்னொரு முகாமுக்கு அவர்கள் விரட்டிய விரட்டில் நான் ஜெர்மனியில் ஒரு பாதியை அலைந்து தீர்த்திருப்பேன் என்று நினைக்கிறேன். சாக்ஸனியில் சிலிகேட் தொழிற்சாலையில் வேலை செய்தேன்; ரூர் பிரதேசத்தில் ஒரு சுரங்கத்தில் நிலக்கரி தோண்டினேன்; பவேரியாவில் மண் வெட்டுவதில் நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்தேன். தியுரிங்கியாவில் கொஞ்ச நாள் வேலை செய்தேன். என் கால் படாத நிலம் ஜெர்மனியில் ஏதாவது எஞ்சியிருந்ததா என்பது சைத்தானுக்கே வெளிச்சம். அங்கே விதம்விதமான இயற்கைக் காட்சிகள் ஏராளம். ஆனால் நமது வீரர்களை அவர்கள் சுட்டுக் கொன்றதும், அறைந்து புடைத்ததும் எங்கும் ஒரே மாதிரியாகத்தான் இருந்தது. அந்த நாசமாய்ப் போன விஷப் பாம்புகள், அந்தப் புல்லுருவிகள் அங்கே எங்களை அடித்துக் கொன்றது போல, நம் நாட்டில் மிருகங்களைக் கூட அந்த மாதிரி எவனும் ஒருபோதும் அடித்திருக்க மாட்டான். எங்களைக் குத்துவார்கள், உதைப்பார்கள்; ரப்பர் குறுந்தடியோ, அவர்கள் கைக்கு அகப்படட ஏதாவது இரும்புக் கட்டியோ, எது கிடைத்தாலும் அது கொண்டு எங்களை நொறுக்குவார்கள். துப்பாக்கிக் கட்டைகளாலும் தடிகளாலும் அடிப்பதையோ, சொல்லவே தேவையில்லை. கணக்கா, வழக்கா நாங்கள் பட்ட குத்தும் அடியும்!

"அவர்கள் எதற்காக அடித்தார்கள் என்று கேட்கிறீரா? நான் ருஷ்யன் என்பதற்காக, இன்னும் உயிரோடு உலகில் இருந்தேன் என்பதற்காக; அவர்கள் பொருட்டு உழைத்தேன் அல்லவா? அதற்காக எடுத்ததற்கெல்லாம் உதையும் குத்தும். ஏறுமாறாகப் பார்த்தால் அடி; தவறுதலாகக் காலடி வைத்தால் அடி; அவர்கள் விரும்பின மாதிரித் திரும்பா விட்டால் அடி. அடிக்கிற அடியில் என்றாவது ஒரு நாள் உயிரையே பறித்து விட வேண்டும் என்பதற்காக அடித்தார்கள்; எங்கள் ரத்தக் குழாய் வெடித்துப் புரையேறி, நாங்கள் அடிபட்டே சாக வேண்டும் என்பதற்காக அடித்தார்கள். எங்களையெல்லாம் உயிரோடு உள்ளே தள்ளிப் பொசுக்கு வதற்குப் போதுமான உலைகள் ஜெர்மனி முழுவதிலும் இல்லை போலிருக்கிறது. அதனால்தான் இப்படி அடித்து மிதித்து உயிரைக் கசக்கிப் பிழிந்தார்களோ என்னவோ.

"நாங்கள் எங்கே போனாலும் ஒரே மாதிரியான உணவே எங்களுக்குத் தந்தார்கள். பாதி மரப்பொடியும் பாதி மாவுமாகக் கலந்து செய்த"எர்சாட்ஸ்" ரொட்டி நூற்றைம்பது கிராம், இத்துடன் நீர் நிறைந்த டர்னிப் சூப்பு, அவ்வளவு தான். சில இடங்களில் குடிப்பதற்கு சுடுநீர் தந்தார்கள், சில இடங்களில் அதுவும் கிடையாது. ஆனால் இதையெல்லாம் பற்றிப் பேசிப் பயன் என்ன? நீயே மதித்துக் கொள்; போர் மூளுவதற்கு முன்பு நான் எண்பத்தாறு கிலோகிராம் இருந்தேன். இலையுதிர் காலம் வாக்கில் ஐம்பதுக்கு மேல் எடை ஏறவில்லை. தோலும் எலும்பும்; அந்த எலும்புகளைத் தாங்கிப் போகக்கூட வலுவில்லை. அவ்வளவு தான். ஆனாலும் உழைக்க வேண்டியிருந்தது; ஒரு சொல் மறுத்துப் பேசக் கூடாது. நாங்கள் செய்த வேலையோ, சுமை வண்டிக் குதிரைகூட இவ்வளவு வேலை செய்தால் சில நேரங்களில் படுத்துவிடும் என்று நினைக்கிறேன்.

"செப்டெம்பர் தொடக்கத்தில் சோவியத் போர்க் கைதிகளாகிய எங்களில் நூற்று நாற்பத்திரண்டு பேரை குஸ்ட்ரினுக்கு அருகிலிருந்த முகாமிலிருந்து பி-14 முகாமுக்கு அனுப்பினார்கள். அந்த முகாம் டிரெஸ்டனிலிருந்து வெகு தொலைவிலில்லை. அப்பொழுது ஏறக்குறைய ஈராயிரம் பேர் அந்த முகாமில் இருந்தோம். ஒரு கல் குவாறியில் நாங்கள் எல்லாரும் வேலை செய்தோம். ஜெர்மானியக் கற்களைக் கையாலேயே உடைப்பதும் நொறுக்குவதும் எங்கள் வேலை. ஒருவன் நாளொன்றுக்கு நான்கு கன மீட்டர்கள் உடைக்க வேண்டும் என்று கணக்கு. எங்களுக்கோ உடம்பில் உயிரை ஒட்டி வைத்துக் கொண்டிருப்பதே பெரும் பாடாயிருந்தது. இந்த அழகில் இவ்வளவு வேலையைச் சுமத்தினால் எப்படியிருக்கும், நீயே எண்ணிப்பாரு. அப்புறம் உண்மையிலேயே இதன் விளைவு தொடங்கிற்று. இரண்டு மாதத்துக்குப் பின்பு எங்கள் குழுவிலிருந்த நூற்று நாற் பத்திரண்டு பேரில் ஐம்பத்தேழு பேர்மட்டுமே எஞ்சினோம். எப்படியிருக்கிறது கதை, அண்ணே? நாங்கள் என்ன பாடுபட்டிருப்போம், ஊம்? இங்கே யானால் எங்களுக்கு உடனொத்த தோழர்களைப் புதைப்பதற்கே நேரம் போதவில்லை; இதற்கிடையில் ஜெர்மன்காரர்கள் ஸ்டாலின் கிராடைப் பிடித்து விட்டதாகவும், சைபீரியாவுக்குள்ளே விரைவாய் முன்னேறுவதாகவும் ஒரு வதந்தி கிளம்பியது. துயரத்திற்குப்பின் துயரமாக வந்து எங்களைத் தலை நிமிர வெட்டாதபடி தரை யோடு தரையாக அழுத்தி வைத்திருந்தன. என்னவோ, அங்கேயே, அந்த ஜெர்மன் மண்ணுக்குள்ளேயே எங்களைப் புதைத்துவிடும்படி நாங்கள் கேட்டுக் கொண்டது போலே முகாம் காவலாளிகளோ குடிப்பதும் இரைந்து பாடுவதுமாக வந்தது வருகிற தென்று ஒரே கும்மாள மடித்துக் கொண்டிருந்தார்கள்.

"ஒரு நாள் மாலை வேலையிலிருந்து குடிசைக்குத் திரும்பி வந்தோம். நாள் முழுவதும் பெய்த மழையில் எங்கள் கந்தைகள் சொட்டச் சொட்ட நனைந்து போயிருந்தன. குளிர்காற்றினால் நாங்கள் எல்லோரும் நடுங்கிக் கொண்டிருந்தோம். எங்கள் பற்கள் கடகடவென்று அடித்துக் கொள்வதை நிறுத்தவே முடியவில்லை. துணிகளையும் உடம்பையும் உலர்த்துவதற்கோ சற்றே குளிர் காய்வதற்கோ இடமே இல்லை. உயிரே போய்விடும் போலப் பசி வேறு; சாவதே மேல் என்று கூடத் தோன்றியது. ஆனால் அவர்கள் மாலை நேரங்களில் எங்களுக்கு ஒரு போதும் உணவே தருவதில்லை.

"கேட்டாயா? நான் எனது கந்தைகளைக் கழற்றி, எனது படுக்கைப் பலகை மேல் எறிந்து விட்டு, நாளொன்றுக்கு நான்கு கன மீட்டர் கல் உடைக்கச் சொல்கிறர்கள். ஆனால் நம்முள் ஒருவரைப் புதைக்க ஒரு கன மீட்டர் ஏராளமாயிற்றே என்று சொன்னேன். நான் சொன்னதெல்லாம் அவ்வளவு தான். ஆனால் நீ நம்புவாயோ மாட்டாயோ, எங்களிலே ஒரு சொறிநாய்ப் பயல் இருந்தான். அவன் போய், நான் மனம்கசந்து சொன்னதை முகாம் கமாண்டரிடம் கோள் மூட்டிவிட்டான்.

தொடரும்....

# விளையாட்டு





## இந்திய அணியிலிருந்து அஸாருதீன், ஜடேஜா இடைநிறுத்தம்

எதிர்வரும் அக்டோபர் மாதம் 3ஆம் திகதி கென்யாவின் தலை நகர மான நைரோபியில் நடைபெறவுள்ள சர்வதேச ஒரு நாள் கிரிக்கட் போட்டித் தொடரில் பங்குபற்றவுள்ள இந்திய அணியில் இருந்து முன்னாள் தலைவர் முகமட் அஸாருதீன், அஜேய் ஜடேஜா மற்றும் சுழல் பந்து வீச்சாளர் நிக்கின் சோப்ரா ஆகியோர் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

ஆட்ட நிர்ணய சதி தொடர்பாக இவர்கள் மூவரும் விசாரணைக்கு உள்ளாகியிருப்பதாலே இந்த முடிவை எடுத்ததாக இந்திய கிரிக்கெட் தேர்வுக் குழுவின் தலைவர் சந்து போர்தே தெரிவித்துள்ளார்.

நைரோபியில் நடைபெற வுள்ள இந்த சுற்றுப் போட்டியில் டெஸ்ட் அந்தஸ்து பெற்றுள்ள 10 நாடுகள் கலந்து கொள்ளவுள்ளன.

இதற்கிடையில், இந்திய அணியின் பயிற்றுவிப் பாளராக தொடர்ந்தும் கபில் தேவை வைத்திருப்பதா என்பது தொடர்பான இறுதித் தீர்மானம் விரைவில் எடுக்கப்படவுள்ளது. கபில் தேவும் ஊழல் குற்றச் சாட்டுக்களில் சிக்கியிருக்கும் ஒருவர் என்பது குறிப் பிடத்தக்கது.

எவ்வாறெனினும் நைரோபி போட்டித் தொடரிலும் இந்திய அணிக்கு தலைமை தாங்க சவுரோவ் கங்குலியே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

போட்டித் தொடரில் கலந்து கொள்ளவிருக்கும் இந்திய அணியின் விபரம் வருமாறு:-

சவ்ரோ கங்குலி (அணித்தலைவர்), ராகுல் ட்ராவிட், சச்சின் டென்டுல்கர், சடகோபன் ரமேஷ், வினோத் கம்லி, ஹேமங் பதானி, எஸ்.ஸ்ரீராம், யவ்ராஜ் சிங், ஜெகப் மாட்டின், முகமட் கைப், அஜய் ரத்ரா, ரூபன் போல், விஜய் தாஹியா, ரொபின் சிங், சுனில் ஜோஷி, ரீதின்டர், சிங் சோதி, அணில் கும்லே, அஜித் அகர்கார், வெங்கடேஷ் பிரசாத், அமித் பண்டாரி, சாகிர்கான், திருக்குமரன், டெபாஷிஸ் மொஹாலன்த்தி.

ஜகார்த்தாவில் நடந்து முடிந்த ஆசிய மெய்வல்லுநர் போட்டிகளில் தமயந்தி தர்ஷா சிறப்பாக விளையாடி இரண்டு தங்கப் பதக்கங்களை பெற்றுள்ளார்.

200 மீற்றர் ஓட்டத்தில் அண்மையில் சுசந்திகாவினால் நிலைநாட்டப்பட்ட சாதனையையும் இவர் முறியடித்ததுடன் 4X100 அஞ்சல் ஓட்டப் போட்டியிலும் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

ஜகார்த்தாவில் பதக்கம் பெற்றவர்களுக்கு புத்தம் புதிய கார்களை பரிசளிக்க விளையாட்டமைச்சு தீர்மானித்துள்ளது.

குறு நாவல்



# என்று அந்தப்பேதை உரைத்தான்

## செ. யோகநாதன்

அதைக் கேட்க தனசேகரனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. இருபது ஆண்டுகளின் பிறகு நாடு திரும்பியவனை, நிலவுகின்ற சூழ்நிலை மிகவும் ஆச்சரியத்தையும் எரிச்சலையும் கோபத்தையும் மனதினுள்ளே கிளர்ந்தெழ வைத்தது. இவற்றில் பாதிக்குப் பாதி பத்திரிகைகள், "இன்டர்நெட்", "பி.பி.ஸி" வானொலிச் செய்திகள் மூலம் அவன் அறிந்திருந்த போதிலும் அது உண்மை நிகழ்வுகளை நேருக்கு நேராகப்பார்க்கிறபோது பத்தில் ஒரு மடங்கு கூட வராது போலிருந்தது. தன்னோடு ஒன்றாகவே பல்கலைக் கழகத்தில் படித்த மகிந்த வீரசேகர பண்டார இப்போது முக்கியமான அமைச்சராக இருந்தான். மிகவும் எளிமையானவன். அவனிடம் தமிழ் கூட கேட்டுப்படித்து, இவனுக்கு முக்கியமான சிங்களப் பேச்சு முறைகளைச் சொல்லிக் கொடுத்திருக்கிறான். தோசை என்றால் அவனுக்கு மிகவும் பிடிக்கும். பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து ஒவ்வொரு சனிக்கிழமையும் கண்டிக்குப் போய் அவர்கள் இருவரும் தோசை சாப்பிடுவர்கள். மகிந்த வீரசேகர பண்டாரவை அவனது நண்பர்கள் "தோசை பண்டார" என அழைத்துக் கேலி பண்ணுகின்ற போது அவன் பெருமிதமாகச் சிரித்துக் கொள்வான். அவனையும் தவறாமல் சந்திக்க வேண்டும்.

சுதாகரன்தான் அந்தக் கூட்டத்தைப் பற்றி தனசேகரனுக்குக் கூறினான். இப்போதுள்ள நிலையிலே தமிழ் சிங்கள மக்களிடையே நெருக்கமான புரிந்துணர்வினை உண்டாக்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள "விமுக்தி" என்ற கலாச்சார நிறுவனம் தனது இரண்டாவது ஆண்டு விழாவைக் கொண்டாடுகின்றதென்றும், அதற்கு தவறாமல் போக வேண்டுமெனவும் சுதாகரன் சொல்லியிருந்தான். "விமுக்தி" நிறுவனத்தில் தமிழ் அதிகாரிகளும் முக்கியபங்கு வகிப்பதாக சுதாகரன் சொன்ன போது தனசேகரனுக்கு சந்தோஷம் உண்டாயிற்று.

"கட்டாயம் நாம் இருவரும் போவோம்.."

தனசேகரனை அர்த்த புஷ்டியோடு பார்த்தான் அவன்.

"எதில் போவது?"

"ஓட்டோவில் தான்..'"

தயக்கமும் யோசனையும் சுதாகரனின் முகத்தில்.

"வேணாம்..."

"ஏன்?" ஆச்சரியம் மிதந்தது தனசேகரனின் குரலிலே. கண்களில் கேள்வியோடு அவனை ஏறிட்டான்.

"ரவுண் ஹோலுக்குப் பக்கதிலேதான் கூட்டம் நடைபெறுகிற இடம், முக்கியமான இடங்களில் நிறைய சோதனைச் சாவடிகள் இருக்கும். ஓட்டோவில் போனால் கட்டாயம் செக்கிங் இருக்கும்..."

"எல்லாருக்குந்தானே..."

"நீங்க இஞ்சை வந்து ஆறு நாள் தான். பல விஷயங்கள் அனுபவப்பட்டதுக்குப் பிறகுதான் தெரியும்."

"சுதா நீங்க என்ன சொல்லுறியள்...?"

"ஒன்றுமில்லை. பஸ்ஸில போவம். ரவுண்ஹோலுக்குப் பக்கத்திலை இறங்கி, விசாரித்துத் தான் போகவேணும்... இடத்தைக் கண்டு பிடிக்கிறதொன்றும் பிரச்சினை இல்லை."

155 இலிருந்து இறங்கியபோது நகரசபை மண்டபத்தின் சுற்றுப்புறத்திலே சனநடமாட்டம் அருகிக் காணப்பட்டது. தனசேகரன், சுதாகரனிடம் எந்தப் பக்கமாகப் போவது என்று கேட்டான். சுதாகரனும் எதிரே விரிந்து கிடக்கும் வீதிகளைப் பார்த்து, எந்தப் பக்கம் போக வேண்டுமென்பதனை யூகம் செய்ய முயன்று கொண்டிருந்தான். தனசேகரனின் முகம் மலர்ந்தது. "அங்கை பாருங்க சுதா... பொலிஸ் கார் ஒன்று வந்து நிற்குது எல்லாரையும் விட பொலிஸ் காரரிட்டை இடங்கேட்கிறது தான் நல்லது. சரியாகச் சொல்லுவினை... நான் இருந்த இடங்களிலையெல்லாம் இப்படித்தான். நான் பொலிஸ்காரரை விசாரித்து வழி அறிந்து கொள்ளுறனான்" நடந்தவனிடம் சுதாகரன் எதையோ சொல்ல முயன்றான். அதற்குள் அவர்களை பொலிஸ்காரர் தாங்கள் இருந்த பக்கமாகக் கூப்பிட்டார்கள்.

தனசேகரன், சுதாகரனிடம், "அந்த இடத்திற்குப் பேரென்ன?" என்று கேட்டான்.

ஏகவசனத்தில், "என்ன விஷயம்? எங்கே இருவரும் போகிறீர்கள்?" என்று சிங்களத்தில் கேள்வி வந்தது. சுதாகரனும் தனசேகரனும் ஒருவரையொருவர் குழப்பமாகப் பார்த்தனர். பிறகு சுதாகரித்தவாறே தனசேகரன் ஆங்கிலத்தில் கூறினான்.

எதற்காக அந்த இடத்திற்குப் போகவேண்டும்?

முறிந்த ஆங்கிலத்தில் கேள்வி வந்தது சுதாகரன் சொன்னான்.

"அழைப்பிதழ்?"

"பத்திரிகையில் செய்தி வந்தது?"

"எந்தப் பத்திரிகை?"

"வீரகேசரி, தினக்குரலில்..."

"சிங்களப் பத்திரிகை படிக்கிறதில்லை..."

"ஏன்?"

"படிக்கத் தெரியாது..."

"இப்போது அரசமொழி என்ன தெரியுமா?"

தனசேகரனுக்கு மனதினுள்ளே தணல் சுவாலையிட்டு வெடித்தது. தனது சுய கௌரவத்தின் மேல் அந்தக் கேள்வி முள்ளென அழுத்துவதாக உணர்ந்தான்.

"ஐடென்டி கார்ட், டைக் காட்டு"

இருவரும் அடையாள அட்டையை எடுத்தனர்.

"என்ன தொழில்?"

"நெதர்லாந்தில் விவசாயத்துறைப் பேராசிரியர்"

"கம்யூட்டர் இஞ்சினியர்..."

பொலிஸ்காரர், காரின் உள்ளே உட்கார்ந்திருந்த இன்னொரு அதிகாரியிடம் அவர்களை அனுப்பினார். பின்னாலே வந்து அவரிடம், "இவர்கள் மேல் சந்தேகம் உள்ளது. நீங்கள் விசாரிக்க வேண்டும் சேர்" என்றார்.

அதிகாரியும் சிங்களத்தில் கேள்வியைத் தொடங்கினார். தனசேகரன் தங்களுக் சிங்களம் தெரியாது என்று ஆங்கிலத்திலேயே பதில் சொன்னான். அதிகாரி இருவரையும் மேலுங்கீழுமாகப் பார்த்தவாறு யோசித்தார்.

"அந்தக் கூட்டத்தில் உங்கள் பங்களிப்பு என்ன?"

"தமிழ், சிங்கள இனம் ஒன்றையொன்று விளங்கிக் கொண்டு முன்னேறுவது பற்றி இந்தக் கூட்டத்தில் பேசப்படப்போவதாகச் சொன்னார்கள். அதைப் பற்றி அறிய நாங்கள் விரும்புகிறோம்..."

"அது நடைமுறை சாத்தியமாகக் கூடியதா?"

அதல்ல விஷயம். அதை நாங்கள் விரும்புகிறோம்."

"நான் நீங்கள் சொல்வதை நம்பவில்லை."

தனசேகரன் பார்வையில் ஆச்சரியம்.

"ஏன்?"

"அப்படியானால் நீங்கள் சிங்களம் படித்திருப்பீர்கள்.."

தனசேகரனுக்கு நெஞ்சினுள் கோபம் திமிறிற்று. இவனுக்கு முகத்தில் தனது பதிலால் திகைப்பினை ஏற்படுத்த வேண்டுமென்று கிளர்ந்த ஆவேசத்தை தானாகவே தணித்துக் கொண்டான். அப்போது சுதாகரன் தன்னெதிரே வந்து கொண்டிருந்த இரண்டு இளைஞர்களை நேயமாகப் பார்த்தான.

அவர்கள் இருவரும் அவனுக்கு அருகே வந்தனர். அருகில் நின்ற பொலிஸ் அதிகாரியைப் பார்த்ததும் நிலைமையை அவர்கள் புதிதாக விளங்கிக் கொண்டிருக்க வேண்டும்.

சிங்களத்திலே சொன்னான். வாட்டசாட்டமான இளைஞன்." இவர்கள் எமது கூட்டத்திற்காக வந்து கொண்டிருக்கிறார்கள். எமது கூட்டம் வகுப்பு வாதப் போக்குகளுக்கு எதிரானது..." என்றான்.

"நீங்கள் யார்?"

"நாங்கள் இருவரும் பத்திரிகையாளர்கள்... வானொலியிலும் பகுதி நேரமாக வேலை செய்கிறோம்..."

"ஓ..." லேசாக இறுகிற்று அதிகாரியின் முகம். "யாரையும் இப்போது இலகுவில் நம்பமுடிவதில்லை. அதுதான் நுணுக்கமான முறையிலே விசாரணைகள் செய்ய வேண்டி இருக்கிறது...."

"கூட்டம் தொடங்கப் போகிறது...."

பத்திரிகையாளர்கள் பரபரத்தனர். "இவர்களைப் பற்றி நீங்கள் எந்தவிதமான சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை. எதற்கும் எங்களின் முகவரியை உங்களுக்காகத் தருகிறோம்..."

"வேண்டியதில்லை. இவர்களை அழைத்துக் கொண்டு போங்கள்... அதோ இன்னும் இரண்டு பேர் வருகிறார்கள். அவர்களை நான் விசாரிக்க வேண்டும்."

தனசேகரனது மனதிலே வழமையான உற்சாகம் தோன்றவில்லை. கடும் அவமானத்துக்கு உட்பட்ட மனோநிலையோடு அவர்களைப் பின் தொடர்ந்தான்.

கூட்டம் நடைபெறும் இடம் வந்தது.

அழகழகான வண்ணத் துணிகளில் மொழியே தேவையற்ற மனதை அள்ளியெடுக்கின்ற ஓவியங்கள். அருகிலே போய்ப் பார்த்தனர். பட முடிவின் தொங்கலில் இரண்டு வரிகளில் சிங்கள எழுத்துக்கள், தனசேகரன் சுதாகரனைக் கேள்வியோடு பார்த்தான். சுதாகரனது மனதினை ஏமாற்றம் முள்ளெனச் சுரண்டிற்று.

"உள்ளே போய் இருப்பம்... கூட்டம் தொடங்கி விட்டது." என்றான் சுதாகரன்.

மண்டபம் முழுவதும் அனேகமாக இளைஞர்களும், யுவதிகளும் நிறைந்திருந்தனர். தலைமைப் பேருரை நிகழ்ந்து கொண்டிருந்தது. சிங்கள உரையை இளைஞர் ஒருவர் தமிழில் மொழி பெயர்த்துக் கொண்டிருந்தார். அகோரமான வெப்பத்தினிடையே லேசான தென்றல் தண்ணென்று வீசினாற்போலிருந்தது அவர்களுக்கு. பிறகு வந்த இரு உரைகளும் இலக்கிய விசாரம் செய்தன. அடுத்து வந்த இளைஞர் இவர்களைப் பொலிஸ்காரரோடு பேசி மீட்டவர், அவரும் இலக்கிய விசாரம் செய்து அரசின் வெகுஜன தொடர்பு சாதனங்களுக்கு எதிரான போக்கை ஒரு பிடி பிடித்தார் சிங்கத்தில், அது தமிழிலே மூலப் பேச்சைப் போல அழகாகவும், தெளிவாகவும் மொழிபெயர்க்கப்பட்டது. மேடையிலே திடீரென மேலும் நான்கு மின்விளக்குகள் வெளிச்சம் உமிழ்ந்தன. மேடையின் மூலைப் புறத்தில் தங்கவண்ண எழுத்துக்களால் அமைக்கப்பட்ட அலங்காரப்பலகை ஒன்று வைக்கப்பட்டது. சிங்கள மொழியிலே பளபளத்தன தங்க வண்ண எழுத்துக்கள்.

தனசேகரன் சுதாகரனை வெறுமையாகப் பார்த்தான். அப்போது மேடையிலே தமிழரான பேராசிரியர் ஒருவர் தோன்றினார். அவருக்கு அருகேயும் இப்போது முன்னைய மொழிபெயர்ப்பாளரே மொழிபெயர்க்க ஆயத்தமாக வந்து நின்றார்.

பேராசிரியர் சர்வதேச பேரினவாதக் கருத்துகளை சித்தாந்த ரீதியாக நார்நாராகக் கிழித்து வீசிக் கொண்டிருந்தார். மொழி பெயர்ப்பாளரும் உணர்ச்சி வசப்பட்டு சிங்களத்தின் மூலப் பேச்சாகப் பேசிக் கொண்டிருந்தார். ஆனால் சபையிலுள்ளவர்கள் இப்போது ஒருவரோடு ஒருவர் கிசுகிசுத்துக் கதைக்கத் தொடங்கி விட்டார்கள். சபையில் ஆரம்பமாகும் சந்தை இரைச்சல்.

தனசேகரனது கண்கள் அந்தத் தங்க எழுத்திலேயே மொய்த்திருந்தன. தமிழ், சிங்கள மக்களின் புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் கட்டியெழுப்புவதற்காக அமைந்த இந்த இயக்கம், ஏன் சிங்களத்தில் மட்டும் மேடையில் இந்த மின் விளக்குப் பலகையை வைத்திருக்கிறதென்பதையும், அந்தக் குறையினை சபையிலுள்ள எவருமே ஏன் சுட்டிக் காட்டவில்லை என்பதும் அவனது மனதிலே கேள்விகளாகச் சுழன்றன. இப்போது மேடையில் இன்னொருவர் சிங்களத்தில் பேச, முன்னைய மொழி பெயர்ப்பாளர் தமிழிலே அதைச் சொல்லத் தொடங்கினார்.

தனசேகரனின் கண்கள் அந்த மின் விளக்கிலேயே தரித்து நின்றன. மனதிலே நகர மண்டபத்தின் அருகே பொலிஸ்காரர் தங்களையும், அந்தச் சிங்கள இளைஞர்களையம் நடத்திய விதம் முட்கம்பிகளாய் வந்து அழுத்திற்று. அந்த மின் விளக்குப் பலகையில் என்ன எழுதியிருக்கிறதென்பதை அறியும் ஆர்வம் பெரு விருட்ச விழுதுகளாகப் பரவின.

அருகே இருந்த இளைஞனைப் பார்த்தான்.

"அந்த மின் விளக்குப் பலகையில் என்ன எழுதி இருக்கிறது?" இலகுவான ஆங்கிலத்தில் கேட்டான்.

"மொனவதே?"

சிங்களத்தில் கேட்டான் இளைஞன்.

சைகையால் மின்விளக்குப் பலகையைக் காட்டி, "அதில் என்ன எழுதியிருக்கிறது?" என்றான்.

அந்த இளைஞன் தனக்கு அருகே இருந்தவனைப் பார்த்தான். அவனுக்கு அருகே இருந்த இளைஞன் முதலில் இருந்தே அவர்கள் இருவரும் பேசிக கொண்டிருந்ததை கவனித்தபடி இருந்திருக்க வேண்டும். சட்டென்று கேட்டான்.

"உங்களுக்கு சிங்களம் தெரியாதா?"

"இல்லை..."

"அது தான் ஏன்?"

மௌனமாக தனசேகரனைப் பார்த்தான் அவன். பிறகு தானாகவே ஆங்கிலத்தில் அதை மொழிபெயர்த்தான்.

"விடுதலை இயக்கம் சிங்கள தமிழ் மக்களிடையே புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் கட்டியெழுப்புவதற்கான அமைப்பின் மூன்றாவது ஆண்டு நிறைவு"

இப்போது மேடைக்கு புதிய பேச்சாளர் வந்தார். தன்னருகே வந்த முன்னைய மொழி பெயர்ப்பாளரை வேண்டாமென நிறுத்தினார்.

பேச்சை சிங்களத்தில் தொடங்க, சட்டென்று தமிழுக்கு மாற்றினார். கந்தவனம் குமாரசாமி. தமிழும் சிங்களமும் நன்றாகத் தெரிந்தவர் என்று தம்மை அறிமுகப்படுத்தி சிங்களத்திலும் தமிழிலும் மாறி மாறிப் பேசினார்.

என்னோடு ஆங்கிலத்தில் பேசிய சிங்கள இளைஞர் என்னை அர்த்தம் தொனிக்கப் பார்த்தார்.

"பாருங்கள்... இவர் எவ்வளவு தெளிவாக சிங்களம் பேசுகிறார். இதற்கு முன் சிங்களத்திலும், தமிழிலும் மொழி பெயர்த்துக் கொண்டிருந்தவர் யாரென்று தெரியுமா?"

தெரியாது என்று தலையசைத்தான் தனசேகரன்.

இளைஞர் முகத்தில் வியப்பு.

"என்ன அதிசயமான ஆள் நீர். அவர் ஒரு தமிழர், அம்பலவாணன், இரண்டு மொழிகளிலும் பண்டிதர்..."

திடீரெனக் கைதட்டல்.

பேச்சாளர் தமிழிலே சொன்னார்,

"இந்த வகுப்பு வாதமும் இனப் பிரச்சினையும் இல்லாமற்போக எனக்குத் தெரிய ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அதாவது தமிழர் சிங்களத்தையும், சிங்களவர் தமிழையும் கற்றுக் கொள்ள வேண்டும். இது இருஇனங்களிடையேயும் புரிந்துணர்வினையும் நெருக்கத்தையும் உண்டாக்கும்..."

ஆங்கிலத்தில் கதைத்த இளைஞன், இப்போது தனசேகரனின் அருகே வந்து உட்கார்ந்தான். "நீங்கள் யார்?....என் பெயர் ஜினதாஸ. ஆசிரியன்..."

இளைஞனே தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு பேச்சினைத் தொடக்கினான்.

தனசேகரன் தன்னைப் பற்றியும் அருகேயிருந்தசதாகரனைப் பற்றியும் கூறினான்.

தொடரும்...........

> "அந்தக் கூட்டத்தில் உங்கள் பங்களிப்பு என்ன?"
> "தமிழ், சிங்கள இனம் ஒன்றையொன்று விளங்கிக் கொண்டு முன்னேறுவது பற்றி இந்தக் கூட்டத்தில் பேசப்படப்போவதாகச் சொன்னார்கள். அதைப் பற்றி அறிய நாங்கள் விரும்புகிறோம்..."
> "அது நடைமுறை சாத்தியமாகக் கூடியதா?"
> அதல்ல விஷயம். அதை நாங்கள் விரும்புகிறோம்."



மலையாள மாந்திரீகம்

பிரிந்தவர்களை ஒன்று சேர்க்க, விட்டு சென்றவர்களை அழைத்து எடுக்க, கணவன், மனைவி தன்னை விட்டு பிரியாமல் இருக்க, கணவன் மனைவி பிணக்கு தீர, பிரயாண தடை நீங்க, தடைப்பட்ட திருமணம் கைகூட, காதல் வெற்றி பெற, வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும். நேரடி தொடர்புகளுக்கு
T.P. 01-4662771

கருணாகரபூசணம், உலக மலையாள மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி P.K. Sammy (J.D.GN) J.P
162, Kotahena St, Mayfield Rd, Col-13 Tel: 01-342463 Fax: 0094-1-344831
E-Mail: drpksamy @ sltnet. lk Web site: www.imexpolanka.com/drpksami
வழமைபோல் நுவரெலியாவிலும் எமது சேவை நடைபெறுகிறது.



ஜாதகம்

அருள் ஞானத்துடன் கூறப்படும் தெட்டத்தெளிவான ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்கப்போவதுடன், திருமணம் எப்போது எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு, வாழ்வில் அதிர்ஷ்டம் எப்போது என்பதை என்னால் கூறமுடியும். தேவைகளுக்கு நேரில் வருவது சாலச்சிறந்தது. விபரங்கள் அறிய திகதி, மாதம், வருடம் போதுமானது. கைரேகை என்றால் திகதி, மாதம், வருடம் தேவையில்லை.

தொடர்புகளுக்கு மலையால மாந்திரீக சக்கரவர்த்தி துர்க்கை சித்தர் டாக்டர் பி.கே.சாமி( J.D.G.A.N ) J.Pஇல. 162, கொட்டாஞ்சேனை வீதி மேபீல்ட் ரோட், கொழும்பு- 13 தொ.பே 344883

# திரைப்படமும் சமூகமும்.

சசி கிருஷ்ணமூர்த்தி

பிறகு ஒலி அறிமுகப்படுத் தப்பட்ட பின்பு பல்வேறு நாடுகளிலே சமூக விழிப்புணர்வுகள் ஏற்பட்டு வந்த அந்த முதலாவது, இரண்டாவது மகாயுத்த காலகட்டத்தில் திரைப்படங் களின் சமூகத் தாக்கமும் அதிகரித்தது. இந்தக் காலகட்டத்திலே சமூகப் பொறுப்புணர்வு மிக்க பலர் திரைப்படத்தைக் கையாண்டார்கள். குறிப்பாக இரண்டாவது உலக மகாயுத்தத்திற்குப் பின்பு இந்தியாவில் சத்தியஜித்ரே, யப்பானிய அகிரா குரசேவா மற்றும் இத்தாலியில் பெலினி போன்றவர்கள் மிகச் சிறந்த திரைப்படங்களை ஆக்கினார்கள்.

ஒரு முக்கியமான விஷயமென்னவென்றால், மற்றக் கலைகளைப் பொறுத்தவரை பொதுவாக மிகக் குறைந்த செலவில் அல்லது சிலவற்றுக்கு நிதியே தேவைப்படாத ஒரு தனிமனித முயற்சியாக உருவாக்கக் கூடிய ஒரு நிலை இருக்கின்ற போது, திரைப்படம் அவ்வாறாக இல்லை. ஒரு நாவலை ஒருவர் தனித்து எழுதி விடலாம். அல்லது ஒரு இசைப்படைப்பை இசைக்கலைஞன் ஒருவன் உருவாக்கி இசைத்துவிடலாம். ஒரு ஓவியன் மிகக் குறைந்த செலவில் அல்லது செலவில்லாமல் கூட ஓவியத்தை உருவாக்கிவிடலாம். ஆனால் திரைப்படத்தைப் பொறுத்தளவில் அது மிக அதிகளவு நிதியை உள்வாங்கிக் கொள்ளக் கூடிய ஒரு கலை. அதனால்தான், அதை எவ்வளவு தூரம் வெகுஜன மயப்படுத்தப்பட முடியுமோ அவ்வளவு தூரம் வெகுஜனப் படுத்தப்பட வேண்டிய தேவையும், போடுகின்ற முதலைத் திருப்பி எடுக்க வேண்டிய தேவையும் எழுகின்றது. இது ஒரு திரைப் படத்தினுடைய அல்லது ஒரு கலையினுடைய உண்மையான நோக்கத்தைப் புறந்தள்ளி வேறு வகையான நோக்கங்களை உருவாக்கக் கூடியதாகவும் இருக்கின்றது. இது பொதுவாக உலக ரீதியான தன்மையாக இருந்த பொழுதிலும் நாங்கள் இந்தியத் திரைப்படத்தையும் தமிழ்த் திரைப்படங்களையும் இதே நோக்கிலே பார்க்க வேண்டிய தேவை இருக்கின்றது.

1895ம் ஆண்டு பிரான்சிலே திரைப்படம் அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டொரு வருடங்களுக்குப் பின்பு-அவ்வளவு சீக்கிரத் திலேயே இந்தியாவிலே திரைப் படம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து இந்தியாவினுடைய பல்வேறு இடங்களிலும் வெகு வேகமாக திரைப்படங்கள் தயாரிக் கபட்டும், ஆதிக்கம் பெற்றும் மிகவும் ஒரு பலம் பொருந்திய தொழிற் துறையாக வளரத் தொடங்கியது. அதே காலகட்டத்திலே சர்வதேச ரீதியாக மிகவும் சக்திவாய்ந்த பல்வேறு திரைப்படங்கள் எடுக்கப்பட்ட பொழுதிலும் அதே மாதிரியான திரைப் படங்கள் இந்தியாவிலே தோன்றுவதற்கான சூழ்நிலை மிகவும் குறைவாக இருந்தது.



இதற்குக் காரணமாக இருந்தவை.

1. பாரம்பரிய சிந்தனை.
2. பிரிட்டிஷ் அரசினுடைய சில நடைமுறைகள்.

இந்தியாவில் திரைப்படம் தொடங்கப்பட்ட மிகக் குறுகிய காலத்திலே அதாவது 1920 இலேயே அங்கே தணிக்கை அவசர அவசரமாக வரவேற்கப்பட்டது.

திரைப்படத்தினுடைய சக்தியையும் திரை ப்படத்தினுடைய எதிர் விளைவுகளையும் உணர்ந்து அதற்கான சட்டங்களை அவர்கள் ஏற்கனவே போட்டு விட்டார்கள். இதனால் ஒரு வரையறைகாட்சிப்படுத்தல் அல்லது காட்சிரூபமாக படைக்கப்படுகின்ற ஒரு கலை. அதனுடைய அடிப்படையான அம்சங்கள் சர்வதேச ரீதியாக வளர்ச்சியடைந்து கொண்டு வந்திருக்கின்ற பொழுதிலும் இந்தியத் திரைப்படங்கள் ஆரம்பத்திலே அதை அவ்வளவாக உள்வாங்கவில்லை. ஏனென்றால் ஆரம்ப காலத்திலே இந்தியாவிலே ஆதிக்கம் பெற்று வந்த கலைகள் செவிவழி அனுபவிக்கக்கூடிய கலைகளாகத்தானிருந்தன. அதாவது இசை, கர்ண பரம்பரைக் கதைகள் செவிவழி கதை கேட்டல் போன்றன. அது மாத் திரமல்ல, இசை மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற கூத்திற்கு முன்னோடியாகவிருந்த கலை வடிவங்கள் கூட கர்ண பரம்பரைக் கதைகளை அல்லது கதைகளைச் சொல்லுகின்ற கலைவடிவங்களாகத்தான் இருந்திருக்கின்றன. இதனால் ஆரம்ப காலத் திரைப்படங் கள் பல்வேறு நாடுகளிலே பல்வேறு சமூகப்பிர ச்சினைகளை சொல்லுவதாய் அமைந்த பொழுதிலும் இந்தியத் திரைப்படங்கள், எது அந்தச் சமூகத்தின் கலைகளாக ஏற்கனவே இருந்து வந்துள்ளனவோ அதை மீளுவருவாக்கம் செய்கின்ற அல்லது அதை அவ்வாறே கமராவில் பிடித்துக் கொள்ளப்பட்ட ஒரு ரூபத்திலேதான் எடுக்க முயற்சித்தன. இதனாலே ஆரம்ப காலத் திரைப்படங் கள் ஒரு திரைப்படத்திற்குரிய கலை அம்சங்களைப் பின்தள்ளி ஏலவே இருக்கின்ற அதே கருத்தோட்டம் மிக்க அதே கலை வடிவங்களைத் திரைப்படமாக்குகின்ற ஒரு பணியைத்தான் செய்து வந்திருக்கின்றது.

> ஏனைய கலைகளைப் பொறுத்தவரை பொதுவாக மிகக்குறைந்த செலவில் அல்லது சிலவற்றுக்கு நிதியே தேவைப்படாத ஒரு தனிமனித முயற்சியாக உருவாக்கக் கூடிய ஒரு நிலை இருக்கின்ற போது, திரைப்படம் அவ்வாறாக இல்லை.



1930களுக்குப் பிறகு ஒலி அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்பு சிறிது மாற்றங்கள் இந்தியத் திரைப்படத்திலே ஏற்படத் தொடங்கின. அந்தக் காலகட்டத்திலே பொதுவாக நான்கு வகையான திரைப் படங்கள் எடுக்கப்பட்டன.

1. புராணப் படங்கள்.
2. வரலாற்றுப் படங்கள்.
3. இசை சார்ந்த நகைச்சுவைப் படங்கள்.
4. சமூகப் படங்கள்.

இவற்றில் புராணப்படங் கள் பெருமளவில் எடுக்கப்பட்டது. ஆனால் 30களுக்குப் பிறகு இந்தத் திரைப்படத்தின் சமூகத் தன்மைகளை, உணர்வுகளைப் புரிந்து கொண்டவர்கள் அந்தக் காலத்திலேயே சில நல்ல திரைப்படங்களை எடுக்க முனைந்திருக்கின் றார்கள். பொதுவாக இந்திய சுதந்திரப் போராட்டம் பற்றிய ஓரளவு கருத்துக்களைச் சொல்லக் கூடிய அல்லது இந்திய சமூகத்திலே மிகவும் இறுக்கமாயிருந்த சாதிப் பிரச்சினையை, வேறு சமூகப் பிரச்சினைகள் விதவைகள் மறுமணம் அல்லது குழந்தைகள் பற்றிய சில கருத்துக்களை வெளிப்படுத்துவதாக இந்த ஆரம்ப காலத் திரை ப்படங்கள் இருந்தன. குறிப் பாக பத்மா சுப்பிரமணியம் என்ற நடன விற்பன்னருடைய தந்தையார் சுப்பிரமணியம் அவர்களின் ஆரம்பகாலப் படங்கள் - தியாகபூமி போன்ற அவரது படங்கள்- சமூகத் தன்மைவாய்ந்த அல்லது சமூக சீர்த்திருத்தக் கருத்துக்களைச் சொல்லும் திரைப்படங்களாக இருந்தன.

ஆதவன் சினிமா



இதேபோலத்தான், 1936இல் தயாரிக்கப்பட்ட அச்சுத கன்னியா என்ற திரைப்படம். இது ஒரு ஹரிஜனப் பெண், ஒரு பிராமணப் பையனைக் காதலித்து சாதி, சமய வெறிக்குத் தன் உயிரைப் பலி கொடுக்கும் சோகக் கதையாக அமைந்திருந்தது. இது ஒரு சீர்திருத்தக் கதை. ஆரம்ப காலத்திலே இவ்வாறான சமூகத்தன்மை கொண்ட திரைப்படங்கள் எடுக்கப் பட்டன.

பலருக்கும் அறிமுகமான வளம் பொருந்திய ஒரு கலையாக இது வளருகின்ற பொழுது, சமூகத்தினுடைய அடிமட்டத்திலிருந்து கூட பலர் இந்தத் துறையிலே வரக்கூடியதாக இருக்கின்றது. ஏற்கனவே சாதாரண தொழிலாளிகளாக இருந்தவர்கள் கூட ஏதோ ஒரு விதத்தில் தங்களுடைய திறமைகள் மூலம் இந்தத் திரைப்படத் தொழிலில் வரக்கூடியதாகவிருந்தது. குறிப்பாக வி.சாந்தாராம் என்று இன்றைக்கும் மறக்க முடியாத அந்த இயக்குநர் இந்தியத் திரைப்படத்துறை யிலே சில அதிர்வுகளை ஏற்படுத்தியவர். அவர் (பெயின்டிங்) வர்ணம் பூசுபவ ராகவும் (பியோன்) வாசல் காப்போனாகவும் தொழில் புரிந்தவர். இவ்வாறாக ஒரு கலை அறிமுகப்படுத்தப்பட்ட போது சமூக நோக்கமும் திறமைகளும் உள்ளவர்கள் முன்வந்து அதனூடாக ஒரு சில சமூகத் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவுமிருந்தது. இதே மாதிரித்தான் திரைப்படம் அறிமுகப்படுத்தப்பட்டதோடு சில சமூகத் தடைகளும் கூட உடைக்கப்பட்டது.



தொடரும்...